Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் -15 | வெள்ளி -4௨ | 03-0௯-டிசம்பர்-2004



## ஊருக்குப்போதல் முதிய மக்களின் உள்மன ஆசைகள்...

## வன்முறையைத் தூண்டுபவர்கள்





## தலைவரின் கேள்விக்கு பதில் என்ன...?



# நண்பர்களாக இருங்கள்

நமது பிள்ளைகளே நமக்கு நல்ல நண்பர்களாகவும் இருக்கலாம் ஆச்சரியமாக இருக்கின்றதா? பிள்ளைகளை அடித்து வளர்ப்பதை விட அரவணைத்து வளர்ப்பது சாலச்சிறந்தது என்று நாம் அந்நிய நாட்டு வாழ்க்கையில் நன்றாகவே உணர்ந்துகொண்டு இருக்கின்றோம். இந்த நிலையில் பிள்ளைகளுடனான அணுகு முறையை நாம் பல வழிகளில் மாற்ற வேண்டி இருக்கின்றது.

நாம் படித்த காலங்களில் வீட்டிலோ அல்லது பாடசாலைகளிலோ பிரம்படிகளுக்குப் பஞ்சம் இருந்ததில்லை. இது மாணவர்கள் வாழ்க்கையில் ஓர் அங்கமாக இருந்து வந்தது. தண்டித்து பிள்ளைகளைத் திருத்த முயலும் வழமைக்கு சமுதாயமும் உடன்பட்டு வந்தது.விரும்பியோ, விரும்பாமலோ மாணவர்களும் ஏற்றுக்கொண்டு வந்தார்கள்.

காலவெள்ள ஓட்டத்தில் எல்லாமே மாறிப்போயிருக் கின்றன. நாட்டின் வன்முறைகள் ஏராளமானவர்களை வெளிநாடு களுக்குக்கொண்டு வந்துசேர்த்து விட்டன.

இந்த நிலையில் மாணவர் உலகம் அடியோடு மாறிப் போயிருப்பதை இன்று நாம் கண்டுவருகிறோம். மாணவர்களைத் தண்டிப்பது என்பது "முன்னொரு காலத்திலே" என்று இராஜ கதை சொல்வது போலாகிவிட்டது.

தண்டித்து மாணவர்களைத்திருத்தமுயல்வது அவசியந்தானா? அவசியமில்லை அடிப்பதை விட அரவணைத்தும் பிள்ளைகளைத் திருத்தலாம். தண்டிப்பதால் எல்லாப்பிள்ளைகளும் திருந்தி விடுவதுமில்லை. அப்படியானால் அணைப்பதால் அனைவருமே திருந்தி விடுவதுண்டா என்று நீங்கள் கேட்கலாம். நியாயமான கேள்விதான்.

ஆனால் தண்டிக்கப்படும் பிள்ளையின் மனதில் பழிவாங்கும் உணர்ச்சிகள் மெல்லமெல்லப் பதிந்துவிடுகின்றன. எதற்காகத் தண்டிக்கின்றோமா.அந்த விடயத்தை நாசூக்காகப் பிள்ளையிடம் சொல்லி அந்தப் பிள்ளையின் மனதை மாற்றுவதில்வெற்றி காணும்



போது அதன் பலன் அதிகமாகிறது.இன்று ஒவ்வொரு மாணவர்களிடமும் ஆசிரியர்கள் நண்பர்களாக பழகி அவர்களுக்கு கல்வி புகட்டவேண்டும். இதுவே கல்வித்திட்டமாக உள்ளது. ஒவ்வொரு மாணவனும் சரிசமமாக நடத்தி உளவியல் பாதிப்பு ஏற்படுவதை தவிர்த்து சீரான கல்வியினை அனைத்து மாணவர்களும் பெறவேண்டும். மாணவர்களிடம் சில நிகழ்வுகளுக்கு நிதி கேட்டு கட்டாயப்படுத்தக்கூடாது, இதனால் கூட அவர்களின் மனம் பாதிக்கப் படும். உரிய வழியில் அம்மாணவனின் பெற்றோரை அணுகுவதே சிறந்தது.

பிள்ளைகள் நல்ல நண்பர்களாக நோக்கும்முறை அதி அற்புதமானது என்றே நினைக்கத்தோன்றுகின்றது. பெற்றோர்கள் எம்மை நேசிக்கிறார்கள் எம் நலனில் அதிக அக்கறை செலுத்து கின்றார்கள் என்பதை இந்த வழியில் பிள்ளைகள் அதிகம் உணர்ந்துகொள்ள வாய்ப்பு உருவாகின்றது.

நல்ல நண்பியாக ஒரு தாயிடம் மகளால் எதையுமே மனம் விட்டுப் பேச முடிகின்றது.தன்னால் பயமின்றி அம்மாவுடன் பேசமுடியும் என்ற உணர்வில் மகள் எதையுமே தாயிடம் ஒளிவு மறைவின்றிப் பேச ஆரம்பிக்கின்றாள். இது மகன் தந்தை உறவுக்கும் பொருந்துகின்றது.

இந்த ஆரோக்கியமான உறவால் எந்த விடயமும் இரகசியமாகி மூன்றாம் ஆளுடன் பகிரப்படும் அவலம் தவிர்க்கப்படுகின்றது. தீர்வுகளும் சுமுகமாக எடுக்கப்பட்டுவிடுகின்றன.

பிள்ளைகள் எந்த விடயத்தையும் மனம்விட்டுப் பெற்றோரிடம் பேசலாம் என்ற எண்ணம் ஆரம்பிக்கும் மனோபாவத்தை அவர்களிடம் ஏற்படுத்த நல்ல நண்பர்களாகப் பழகுவதே பெற்றோருக்குச் சிறந்தவழி. நண்பர்களாக இருந்துகொண்டு நயமாக நீங்கள் கண்டிக்கலாம். பிள்ளைகள் அதை நிச்சயம் செவிகொடுத்துக் கேட்பார்கள்.

இது கால ஓட்டத்தில் வந்து சேர்ந்துள்ள ஒரு புதிய கோலம். எந்தப் புதியதொரு வரவையும் நமக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு அதன் வழியில் செயலாற்ற முற்படுவதே புத்திசாலித்தனமானது. இன்று நாம் சிந்திப்போமா?

# கார சாரம்

## மூக்குடைபட்டுப் போகாதையுங்கோ...!

அக்காவுக்கு கலியாணம் எண்டு சொல்ல தங்கச் சிக்குப்பொறாமை. எப்பிடியும் கலியாண வீட்டை நிற்பாட்டிப் போடவேணுமெண்டு திட்டம் போட்டு சீப்பை எடுத்து ஒளிச்சு வச்சிட்டாள். சீப்பில்லாட்டி என்னண்டு தலையிழுக்கிறது. தலையிழுக்காமல் எப்படி மண வறைக்கு வாறது எண்டது அவ ளின்ரை திட்டம். கலியாணத் துக்கு நேரம் வந்திட்டுது பொம்பி ளையை வெளிக்கிடுத்த வேணும். தலையிழுக்கச் சீபபைத் தேடினா சீப்பைக் காணேல்ல. சீப்பு, சீப்பெங்க சீப்பு எண்டதுதான் தாமதம் - பக்கத்து வீடுகளால ஏராளமான சீப்புகள் வந்து சேந்திட்டுது. கலியாணமும் நல்ல படியா நடந்து முடிஞ்சுது. இப்ப ஏன் இதைச் சொல்லுறனெண் டால், போன வரியமும் இப்பி டித்தான் மாவீர்நாளுக்கு வளைவு கட்டிவிட ட்றக்கால கொண்டே இடிச்சு சொறிஞ்சவை, துயிலு மில்லங்களுக்கு சனம் போறதைப் பாப்பமெண்டு சவாலும் விட்டவை. கடைசியா இவை கண்கலங்கி நிக்க மாவீரர் நாள் வெகுசிறப் பாகச் செய்யப்பட்டதுடன் பெரு மளவு மக்களும் கலந்து கொண் டனர். இம்முறை கொஞ்சம் வித்தி யாசமாக வல்வெட்டித்துறைக் கொலையை நடாத்தி மாவீரர் நாள் பரபரப்பை ஆரம்பித்து வைத்திருக்கிறது சிறிலங்கா ஏகாதிபத்தியம். வழக்கம் போல பிள்ளையார் பிடிக்க அது குரங் காப்போகுது. வானம் ஓட்டையாப் போச்சுதெண்டு சொல்லுற அளவில மழை கொட்டினாலும், சனம் வேளைக்கே மாவீரர் நாளுக்குரிய வேலைகளில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக விருந்தது. என்ன சொன்னாலும் கூட்டமைப்பு அரசாங்கம் பட்ஜெட்டோட குழம்பினது குழம்பினதுதான். பிச்சை யெடுக்கிற பாத்திரமெண்டாலும் தத்ரூபமா நடிக்கிறதில பெரிய நிபுணத்துவமுள்ள நடிகை பிர பல நடிகரின் மனைவியான சந் திரிகா அம்மையார் வரவர அவ வின்ர பதவிக்காலமும் வளருது. அது கிடக்க ஆர் சரத்.

டவோ... என்னவோ ஒரு நீதியரசர் கொல்லப்பட்டதுக்கு நாடாளுமன்றம் ஒரு அறிக்கை கொடுத்திருக்கு ''இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சியள் நடக்க அனுமதிக்கப்போவதில்லை'' அப்ப இதுவரை அனுமதியோ டதான் நடந்தது என்று சொல் லுகினமோ. எப்படியெண்டாலும் அரசியல் படுகொலைகளைச் செய்து அனுபவப்பட்ட ஆக்கள் தானே. அந்த மிதப்பில கதைச்சுப் போட்டினம் விடுவம்.

சமாதானப் பேச்சுவார்த் தைக்கு இன்னும் ஒரு மாசத்துக்க புலியள் வரவேணுமென்று இன்னுமொரு பாச்சல் காட்டியிருக்கிறார் அம்மா. ஏதோ இவ்வளவுநாளும் நாங்கள்தான் மாட்டமென்று சொனீனதுபோல. அடிக்கடி தடம்மாறும் அரசாங்கம். இதைவிடச்செய்ய என்ன இருக்கு. ஆனால், கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ததுபோல காலம் போனபிறகு அரசியலமைப்பை மாற்றிக்கொண்டு விலக நினைக் கிற ஒரு ஈஸ்ட்மன்கலர் வண்ணக் கனவும் அம்மாவிட்ட இருக்க, மாவீரர்தின உரையில அதுக் கெல்லாம் சேர்த்து வைத்து ஒரு ஆப்பு இறுக்கியிருக்கிறார் எங்கட தேசியத் தலைவர்.

அது கிடக்கட்டும் இந்த வரியம் மாவீரர் தினத்துக்கு ரெண்டு நாள் முன்னமே வவுனியாவுக்க உள்ள பொலிஸ் நிலையமெல்லாம் அமளிப்பட்டுது. என்ன... புல்லு வெட்டிறவை, இஞ்சால அங்கால பூக்கண்டு மாத்துறது, போட்பல கையள் திருத்தறது எண்டு சும்மாவே, நான் அதில நிண்ட ஒரு பொலிஸ் ஊழியரை லேசாக் கேட்டன் "என்ன உங்களையும் மாவீரர் நாள் கொண்டாடச் சொல்லி யிருக்கோ" எண்டு அவர் சிரிச்சுப் போட்டுச் சொன்னார் எங்கடயாக்கள் படி (சம்பளம்) வாங்கிறதுதானே. அதெல்லாம் இல்லை. "நாளைக்கு எங்கட ஐஜீ வாறார்" அதுதான். அப்படியே ஓமந்தைக்க ஒரு கடைக்காரர் சொன்னார். "எங்களை யெல்லாம் கூப்பிட்டு எச்சரிக்கை செய்தவங்கள். ஒருத்தரும் கொடி கட்டப்படாது, அப்பிடி இயக்கம் கட்டினாலும், ஏதும் ஒட்டினாலும் நீங்கதான் உரிக்கோணும்" எண்டு. உங்கால பெரிய கடைக்காரர் கேளாம ஒட்டினவை. விடிய வந்து அவையக் கொண்டே கிழிப்பிச்சுப் போட்டாங்கள்.

வவுனியாவில ஒரு பாட சாலைக்கு முன்னால ஒரு போஸ்டர் ஒட்டியாச்சு. அதிபரை ஆரோ கடத்திக்கொண்டும் போட்டாங்கள். எல்.ரீற்றீதான் எண்டு கதையும் பரவிப் பறந்தது. பிறகு விடியப் பள்ளிக்கூடம் துவங்கிற நேரம் அதிபர் வந்திட்டார். ஆர் வந்து கொண்டு போனது? என்ன கேட்ட வங்கள்? என்றால்... சிறிலங்காப் புலனாய்வுத்துறைக்காரர்தான் கொண்டு போனது. எனக்கு அதிபர் விடுதியில்ல. நான் அங்க நிக்க யில்ல எண்டதால விட்டவங்கள்" என்றார்.

பின்ன மக்களெல்லாரும் சுதந்திரமாயும் நிம்மதியாகவும் வாழுகினம் எண்டு ஊரெல்லாம் பறைதட்டித் திரியிறவைக்குத் தெரியாதே. புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ன சொல்லுது எண்டு. சுவ ரொட்டியளிலும், பதாகையளிலும் மட்டுந்தான் மக்களின்ர உணர் வுகள் இருக்கோ. அது உங்க ளுக்கு மாவீரர் நாளன்று துயிலு மில்லங்களுக்குத் திரண்ட மக்கள் தொகை இவைக்கு வயித்தில புளி கரைக்கிற மாதிரி இருந்திருக்கும். நாங்களும் போராளிகள் தானென்று சொல்லி நாட்டையே நாறடிச்ச கும்பல்களும்கூட துயிலுமில்லத் துக்குப் போனதை என்ர கண் ணால கண்டன். சும்மா விடாம "என்ன இஞ்சால எண்டன்" சும்மா பாப்பமெண்டு என்றவர். அக்கான்ர மகனொராள் மாவீரர். அவவோட வந்தனான்'' என்றார். எனக்கு இப்பஒரு நினைவு வந்தது.

மாங்குளம் அடிபாடு முடிஞ்ச கையோட 1990இல் மாவீரர் நாள் முதல் முதல் கொண் டாடினம். அப்பவும் இதே ராணு வக் கெடுபிடி ஹெலியிலும், சக டையிலுமாக் கொணந்து குண்டு கொட்டிற நேரம் சகல இடமும் சிவப்பு மஞ்சள் கொடி மட்டு மில்லை தேசியக் கொடியும் பறந் ததுதானே. எதையெண்டு அடிக் கிறது. எங்கயெண்டு குண்டு போடு றது. மாங்குளத்தால தப்பியோடின ஆமியத்தேடி ஹெலியள் பறந்து திரிஞ்சவைதானே. மாவீரர் நாள் செய்ய அப்ப துயிலுமில்லங்கள் இல்ல. சாதாரண மைதானங்களில் அமோகமாக நடத்தினதுதானே. இப்ப இந்த ஆமிக்கு எதிராக வேப்பங்குளம் வவுனியாவிலும், மன்னாரிலும் கொந்தளிச்சு நின்ற சனம் அப்பவும் இருந்ததுதானே. நீங்கள் என்ன சொல்லுங்கோ, துயிலுமில்லங்களையே அடிச்சு நொருக்கி, தமிழர்களின்ர உணர் வுகளை மழுங்கடிக்கலாம் எண்டு நினைச்ச நினைப்புத்தான் பிழைப் பக்கெடுத்தது. ஒண்டை இவை யள் வசதியா மறந்து போச்சினம். எது ஒரு அஞ்சாறு போராளிகள் இருந்தபோது மதகுகளுக்க கண்ணிவெடியள் வச்சிட்டு ஓடித் தப்பின போராளியள கத்தரித் தோட்டத்துக்க வச்சு மருந்து கட்டினதும், புட்டவிச்சு முட்டையும் பொரிச்சுக்கொண்டு வந்து குடுத்தவையும், பொயிலைச் சிப் பத்துக்க கட்டிமறைச்சு வச்ச வையும், சாதாரணமக்கள்தான். ஜெயசிக்குறு எதிர்ச்சமருக்கு உதவியா தாங்களும் ஆயுதப் பயிற்சியெடுத்து நேரடியாக் களத் திலயிறங்கின மக்களும் இவை தான் எண்டதையும், கடைசியா நடந்த தேர்தல்ல தங்கட தொகு திக்கங்கால சாவடியிருந்தும் ரெண்டு பொழுதுகள் உணவைத் துறந்து வாக்களிக்கத் திரண்ட மக்கள் இவையெண்டதையும், எல்லாவற்றுக்கும் மேல 1994 அக்டோபர் 30இல் தலைவரின் ஆணைக்கு ஓரிரவில் நாவற்குழிப் பாலம் கடந்த அஞ்சுலட்சம் மக்க ளையும், இவ்வளவு கெதியா மறந்து போச்சினம்.

நீங்கள் மறக்காம இருக்கிறவிசயம் மட்டும் ஒண்டே யொண்டு என்றால் அது பதவி நாற்காலி. நாற்காலிக்கு ஆசைப் படும் நாற்காலிகளே (விலங்கு) மனித உரிமையெண்டு ஒண்டு இருக்கு - அதிலும் அரசியல் யாப்பின்படியும் மூன்றாவது அத்தி யாயம் ஒண்டைச் சொல்லுது சரத்து 14: ஊ தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுப விப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்து வதற்குமான சுதந்திரம். ஆனால், சட்டம் சரியா விளங்கியோ விளங் காமலோ இந்த உரிமைகள் அனைத்தையும் 15 : பிரிவு - 8க்குள்ள அடக்கி தாங்களே, தமிழர்களுக்கு அந்த அந்தஸ் தையும் வழங்கிக் கௌரவிச்சதை நினைச்சா பாவம் இவை.

இப்ப ''ஆப்பிழுத்த குரங்குகள்தான்'' ஒண்டு சட்டத்தை ஒழுங்காப் போடுங்கோ, இல்லை... அதை ஒழுங்கா நடைமுறைப்படுத்துங்கோ, சனத்துக்குச் சட்டம் போடப்போய், அதுகும் தமிழ்ச்சனத்துக்கு, மூக்குடைபட்டுப் போகாதை யுங்கோ. அதுசரி, உங்களிட்ட இப்பிடி முதலும் ரெண்டு மூண்டு தரம் உடைஞ்ச மூக்குத்தானே இருந்தது. மூக்குப்போனா இனி நெத்தியடிதான்.

மாயா

# நழுவிப்போகமுயலும் சிங்கள தேசம்

சிங்கள தேசம் என்றும் ஒற்றுமைப்பட்டு பகிரங்கமாக வெளிப்படுத்த போகாத, ஆனால் வெளிப்படுத்த வேண்டிய ஒருவிடயம் தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பகிரங்க கேள்வியொன்றை இம்முறை மாவீரர் தின உரையில் சிங்கள தேசத்தை நோக்கி எழுப்பியுள்ளார்.

ஆனால் சிங்கள தேசம் நழுவிப் போகின்ற, இனியும் நழுவிப் போகப்போகின்ற இந்த கேள் விக்குள் தான் தமிழரின் அரசியல் அடிப்படைகள் புதைந்து கிடக்கிறது.

இந்த கேள்விக்கான பதிலில்தான் இன்று சந்திரிகா அம்மையாரும் அம்மையாருக்கு முன்பு வந்து போன சிங்கள தேசத்து பிரதிநிதிகளும் சர்வதேச சமூகத்துக்கு காட்டும் மாயமானான தமிழர் பிரச்சினைக் கான நிரந்தர தீர்வின் தோல்வி காத்திருக கிறது.


இம்முறை மாவீரர்தின உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இன்று சிங்கள தேசத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ஆளும் கட்சிகளையும் இனிமேல் பிரதி நிதித்துவப்படுத்தும் வாய்ப்புகளைக் கொண்ட எதிர்க்கட்சிகளையும் நோக்கி மிக முக்கியமான இக்கேள்வியை எழுப்பியுள்ளார்.

அதாவது, இம்முறை மாவீரர் தின உரையில் அவர் சனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியிடமும் "எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்'' என கேட்டுள்ளார்.

பொதுவாக தேசியத்தலைவரின் இவ்வினாவானது இன்று புலிகள் இயக்கம் சிறிலங்கா அரசோடு இடைக் கால தன்னாட்சி அதிகார சபையைப் பற்றி பேச விரும்புகின்றபோது சனாதிபதி சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான ஆளும்கட்சி நிரந்தர தீர்வு பற்றி பேசவேண்டுமென கோரிவருகின்ற நிலையில் எழுந்த ஒரு வினாவல்ல இது.

தலைவரின் இவ்வேண்டுகோளானது இலங்கையின் சமாதான முயற்சியில் ஆர்வம்காட்டுகின்ற சர்வதேச சமூகத்துக்கு ஒரு உண்மையை யைப்புலப்படுத்துவதாக அமையும்.

உண்மையில் தமிழர் பிரச்சினை தொடர்பாக முன்னெடுக் கப்படும் சமாதான முயற்சிகள் யாவும் "ஒரு தீர்வை வழங்கக்கூடிய திட்டமெதுவும் இல்லாத அரசுகளோடு ஒரு தீர்வைக்கான முயலும் ஒரு நாடகமாகவே தமிழர் விவகாரம் அரங்கில்



இருந்துவருகிறது.

அதாவது இல்லாத தீர்வொன்றை தீர்வாக தேடும் ஒரு கால விரையமாகவே நடக்கிறது.

இந்தகால விரையத்துக்குள் சுமார் ஐந்து தசாப்பதங்களுக்கு மேலாக ஒடுக்குமுறையின் விளைவுகளை சந்தித்துவரும் மக்களின் பாதுகாப்பையும், அரசியல் உரிமைகளையும் இழந்துபோகமுடியாத ஒரு வரலாற்றுப் பொறுப்பை புலிகள் இயக்கம்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தமிழீழத்தேசி

**சிறி.இந்திரகுமார்**

யத் தலைவர் அவர்களின் இவ் வேண்டுகோள்தொடர்பாகக்கூட சிங்கள தேசம் இருமுகாம்களாக பிரிந்தே செயற் படுகின்றன; செயற்படப்போகின்றன.

அதாவது தமிழர் தேசியம் தமிழர் தன்னாட்சி, தமிழர் சுயநிர்ணயம் தொடர்பாக பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒரு போக்கையும், ஏனைய இனவாத கருத்தியலை பிரதான முதலீடாகக்கொண்டு செயற்படும் ஜே.வி.பி, ஹெல உறுமய, போன்ற கட்சிகள் இன்னொரு போக்கையும்கொண்டு செயற்படப்போவதை நிலைமைகள் புலப்படுத்துகின்றன.

அடிப்படையில் சிங்கள தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்து கின்ற இக்கட்சிகள் எல்லாமே தமிழரின் மூலாதாரக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில்லை என்பதில் கவனமுடன் செயற்படுகின்றன.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும், சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இதற்கான பதிலை தெளிவாக வழங்காது நழுவிப்போகின்ற ஒரு போக்கும் இனவாதத்தை முதலீடாகக் கொண்ட ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற கட்சிகள் பகிரகங்கமாக நிராகரித்து, சிங்கள மக்கள் மத்தியில தமக்கான வாக்குவருவாய்களை தேடிக்கொள்ளும் போக்குமே காணப் படுகிறது.

முடிவாக இவ் எல்லாக்கட்சிகளாலும் தமிழர்களின் அரசியல் உரிமைகள் குழிதோண்டிபுதைக்கப்பட்டே உள்ளது.

இந்த உண்மையை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டிய ஒரு கடப்பாடு இன்று எழுந்துள்ளது.

தமிழ் மக்களின் இத்தனை வருடகால விடுதலைப்போரில் தோன்றிய எல்லா சமாதான பேச்சுக்களும் முறிவடைந்து, போர் தோன்றியதற்கு தமிழ்மக்களின் அடிப்படை மூலாதாரக் கோரிக்கைகளை வழங்கவோ, ஏற்கவோ சிங்கள தேசம் தயாரில்லாத காரணமேயொளிய புலிகள் இயக்கம் சமாதான பேச்சுக்களில் நம்பிக்கையில்லாது செயற்படுவதனலல்ல.

இந்த நிலையிலும் தனியரசுக்கான போரை நடத்திவந்த புலிகள் இயக்கம் சர்வதேச சமூகம் இலங்கையின் சமாதான முயற்சியில் காட்டிய அக்கறையும் தமிழர்பிரச்சினை சர்வதேச அரங்கின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்றவகையிலும், புலிகள் இயக்கம் மூன்றாண்டு காலமாக அமைதிகாத்த சமாதான முயற்சியை முன்னெடுக்கவேண்டும் என்பதில் தமக்கிருக்கும் ஆர்வத்தையும் பற்றுறுதியையும் வெளிப்படுத்திய போதும் சிங்கள தேசம் தமிழர் தேசம் வழங்கிய மூன்றாண்டுகால அமைதியை சுவைத்துக்கொண்டு தமிழர் தேசத்துக்கு தேசியத் தலைவர் குறிப்பிட்ட அரசியல் வெறுமையை பரிசளிக்க நினைக்கிறது.

இந்த நிலையில்தான் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் எதிர் பார்ப்புக்கும், பொறுமைக்கும் இருக்கக் கூடிய எல்லைக்கோட்டை அடைந்து விட்டதாக அறிவிக்கவேண்டியநிர்ப் பந்தத்தை சிங்கள தேசம் வழங்கி யுள்ளது.

முப்பது ஆண்டுகளாக குருதி சிந்தி வளர்த்த தமிழர் சுதந்திரப் போராட்டத்தை சமாதான முயற்சி என்ற சில ஆண்டுகளுக்கு இழப்பதை எந்தமக்களும் நியாயபூர்வமாக சிந்திக்கும் எந்தவொரு சர்வதேச நாடும் விரும்புமா?

இது இப்படியிருக்க, தமிழர்களின் மூலாதார பிரச்சினை தொடர்பாக சிங்களதேசம் கொண்டிருக்கும் நிலைப்பாடு தொடர்பாக சமாதான முயற்சியில் அக்கறை கொண்டுள்ள சர்வதேச நாடுகள் புரிந்துகொள்ளும்வகையில் தனது வேண்டுகோளை விடுத்தி ருக்கும் இதேவேளை, தமிழ் மக்க ளின் பிரச்சினை இன்று இடியப்ப சிக்கலாகி, சிங்கள தேசத்தின் அரசியல் சகதிக்குள் புதைந்து போகும் ஒரு அபாயத்தை கொண்டிருப்பது தொடர்பாக ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருப் பதை கவனத்தில்கொள்ள வேண் டும்.







இன்று உலகில் கைவிடப் பட்டு மெல்லவலுவிழந்துவரும் பழமைவாத கம்யூனிஸ கொள்கைகளைக் கொண்ட ஒருகட்சியின் பிடிக்குள் தமிழர் பிரச்சினை இடருப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய இலங்கையின் அரசியல் அரங்கில் ஜே.வி.பி போன்ற கட்சியின் பிடி இறுகிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.


உதிரிகட்சிகளில் ஒன்றாக இருந்த ஜே.வி.பி இன்று பலமான மூன்றாவது எதிர்க்கட்சியாக தோற்றம் பெற்றிருக்கிறது. இந்த நிலையில் இந்த ஜே.வி.பி போன்ற கட்சி இனிவரும் காலங்களில் தனித்தோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ ஆட்சியை கைப்பற்றும் வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன.

இந்த நிலையில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை புரிந்துகொள்ளாத அதேவேளை, பழமைவாத கம்யூனிஸ கொள்கைகளுக்குள் ஊறித் திளைத்துக் கிடக்கும இக்கட்சிகளின் வாயிலாக மேலும் தமிழர் பிரச்சினை சிக்கலடையும் வாய்ப்பே அதிகமாகவுள்ளது.

இந்த நிலையில்தான் தேசியத் தலைவர் விடுத்திருக்கும் பேச்சுக்கான அவசர அழைப்பும் அதைசிங்கள தேசம் நிராகரிக்கும்பட்சத்தில் சுதந்திர போரே முன்னெடுக்கவேண்டிய கட்டாய நிலையையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும் என நம்பலாம்.

# நறுக்கென...

## போருக்கு போவது யார்? ஹெல உறுமயக்காரரா?



“புலிகளின் வன்முறைகளை தடுத்து நிறுத்த இராணுவத்தை பயன்படுத்த வேண்டிய தருணம் அரசாங்கத்துக்கு வந்து விட்டது. அத்தோடு குறுகிய காலத்துக்குள் விரைவான யுத்தத்தை மேற்கொண்டு தமது இலக்கை அடைய முனையும் புலிகளை தோல் வியடையச் செய்ய முப்படைகளையும் தயார்ப் படுத்தவேண்டும்”

இவ்வாறு அறை கூவல் விடுத்திருப்பது வேறு யாருமல்ல புத்தபகவானில் தர்மோ உப தேசங்களை மக்களுக்கு கூற வேண்டிய புத்தபிக்குகளான ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் தான்.

கொல்வது பாவம் என உபதேசித்த புத்தரே வெட்கித் தலைகுனிய வேண்டிய அளவுக்கு போர் அறை கூவல் விடுக்கிறார்கள் அவரின் புத்த பிக்குகள்.

முற்றும் துறந்து காவியுடை தரித்து ஆண்டவனுக்கு பணிபுரியவேண்டிய இந்த துறவா துறவிகள் இன்று எதையுமே விட்டுவைக்கவில்லை.

இன்று அவர்கள் அரசியலுக்குள் புகுந்து நாடாளுமன்றத்தையும், நாட்டையும் படுத்தும்பாடு இருக்கிறதே அது பெரும்பாடு.

எப்போதும் அரசியல் வாதிகளைப்பார்த்து மக்கள் எப்பபோதும் சலிப்புருவது உண்டு. ஆனால் இன்று இலங்கையைப் பொறுத்து, ஹெல உறுமய பிக்குகளைப் பார்த்துவேதனைப்பட வேண்டியுள்ளது.

யாரங்கே... இங்கே கொண்டுவா... தேரைப்பூட்டு...போருக்குப்போ... என்று கட்டளையிடும் பழைய அரசர்காலத்தைப் போல இவர்கள் விடுக்கும் எக்காலம் இருக்கிறதே அது படுமோசம்.

இப்போது புலிகளுக்கு எதிராக முப்படைகளையும் தயார்ப் படுத்தும்படியும் விரைவாக புலிகளை தோற்றகடிக்கும்படியும் கூறியுள்ளனர்.

ஆனால் போர்க்களத்தில் அப்பாவி பாமர சிங்கள மக்களின் பிள்ளைகள் கொல்லப்படுவதைப்பற்றி கிஞ்சித்துத்தானும் இவர்கள் கவலைப்படுவர்களா என்றால் இல்லை. புத்தம் சரணம் கச்சாமி என்பதற்கு பதிலாக ஐயோ பாவம் சிங்கள மக்கள் என்றுதான் கூறவேண்டும்.

## ரணிலின் காலை வாரும் சனாதிபதி சந்திரிகா அம்மையார்



ரணிலின் கனவுகளை களைத்தவரான சந்திரிகா அம்மையாரின் அரசுக்கு சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு வழங்கும் என முன்பு அறிவித்திருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சியின் இந்த அறிவிப்பை சந்திரிகா அம்மையாருக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என ஊடகங்களும், அரசியல் விமர்சகர்களும் தெரிவித்து வந்தனர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த ஆதரவு மட்டுமல்ல எந்த ஆதரவும் சமாதானமுயற்சி தொடர்பில் தேவையில்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பதில் பிடியாய் இருக்கிறார் சனாதிபதி சந்திரிகா அம்மையார்.

இந்த நிலையில்தான் ஐக்கிய தேசியக் கட்சிதான் அரசுக்கு வழங்குவதாக கூறிய ஆதரவை விலக்கிக் கொள்வதாக தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ரணில் விக்கிரம சிங்க சமாதான முன்னெடுப்பின் அனுசரணையாளரான நோர்வே அரசுக்கும் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு அறிவித்துள்ளது.

இனி சமாதான முயற்சி தொடர்பாக மட்டுமல்ல எந்த விவகாரம் தொடர்பாக இருந்தாலும் ஆளும்கட்சி ஆளும்கட்சியாகவும், எதிர்க்கட்சி எதிர்க்கட்சியாகவுமே செயற்படப்போகிறது.

இந்த விவகாரம் ஒன்றும் புதிதல்ல, இதுவரை இலங்கையில் இருந்த விவகாரம் தான் அதாவது ஆளும்கட்சி எடுக்கும் எந்த விடயத்தையும் எதிர்க்கட்சி எதிர்க்கும் எதிர்க்கட்சி கொண்டுவரும் எந்த விடயத்தையும் ஆளும்கட்சி எதிர்க்கும்.


அதாவது மாமியார் மருமகள் சண்டைதான். ஆனால் இதற்குள்ளிருந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு எல்லை நோக்கி நகருவது.

அது சரி ஐக்கிய தேசியக் கட்சி சந்திரிகா அம்மையாருக்கு வழங்குவதாக கூறிய இந்த ஆதரவை விலக்கிக்கொள்வதற்கு என்ன காரணமாக இருக்கும்.

பாவம் ரணில் சமாதான முயற்சிக்கு ஆதரவு, ஆதரவு என ஒருபுறம் புலம்பிக் கொண்டு திரிய சந்திரிகா அம்மையாரோ மெல்ல, மெல்ல ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தன்பக்கம் இழுத்துக்கொண்டு இருக்கிறார். வரவு - செலவு திட்டத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்த அன்றுகூட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோகிதபோகெல்லகம தம் வசம் இழுத்துக்கொண்டார்கள்.

இதோடு மட்டுமல்ல, இன்னும் பலரையும் தம் வசம் இழுக்கவுள்ளார்கள். இதனால்தான் ரணில் வெறுத்துப்போனாரோ.

## பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை



தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையானது தென்பகுதி அரசியல் தலைமைகளையும், ஏனைய மேலாதிக்க சக்திகளையும் அளவுக்கு அதிகமாகவே அதிர்ச்சியுறவைத்துவிட்டது. அந்த இறுக்கமான வார்த்தைகளை மட்டுமல்ல, தெளிவான வரையறை களையும் உள்ளடக்கிய உரைக்கு அவர்களால் இன்னமும் தெளி வான- தீர்க்கமான- பதிலெதையும் கூறமுடியாதுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

ஆனாலும் ‘பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை’ என்ற தன்மையில் இருக்கும் ஜே.வி.பி யினர் விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற தன்மையிலான கருத்துப்பட சிலவார்த்தைகளை உமிழ்ந்துள்ளனர்.

‘தாங்கள் மாவீரர் நாள் உரையைப்பற்றி அக்கறை கொள்ளவில்லையாம்.

மாவீரர் நாள் நிகழ்வுகளை குழப்பியடிக்க திருகோணமலையில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகளை உருவாக்கி இனக்கலவரமொன்றை ஏற்படுத்த முயன்றவர்கள் தேசியத் தலைவரின் உரை கொடுத்த அதிர்ச்சியில் ரகசியமாகக்கூடி (அதுவும் அரசைச் சேர்ந்த கட்சிகள் தனித்தனியாகக் கூடி) ஆராய்ந்த பின்னர் மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டுள்ளனர்.

மாவீரர் நாள் உரைக்கு பதில் சொல்லவேண்டியது அரசும் சனாதிபதியுமே தவிர ஜே.வி.பி அல்ல என்றுள்ளார் அக்குழுவின் சிரேஷ்ட தலைவர் ஒருவர். இது அரசுவேறு தாம்வேறு என்று கூறி தப்பிக்கும் பாணியிலான் கருத்தாகும்.

சந்திரிகா மாவீரர் நாள் பற்றி தனது கட்சியினருடன் தனியாக ஆராய்ந்துள்ளதாகவும் அவர் அதுதொடர்பான கருத்தை வெளியிடும் வரைக்கும் ஜே.வி.பியினர் வாய்ச்சவடால் அடித்து வருவதாகவும் தென்பகுதி ஊடகங்கள் சில கூறுகின்றன.

‘பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு’ என தேசியத் தலைவர் வரையறை செய்துள்ளது பேச்சு வார்த்தைகளை இழுத்தடிக்கும் சந்திரிகாவின் தந்திரோபாயத்திற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே தென்பகுதி ஆய்வாளர்கள் தெரிவிக்கும் அதேவேளை சர்வதேச சமாதான சமூகமும் இதனை வைத்தே அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சூழ்நிலை உருவாகும் எனவும் அவர்கள் கருதுகிறார்கள்.

அப்படியானதோர் சூழல் ஜே.வி.பியினரின் உள்நோக்கச் சதிகளுக்கு எதிரானது என்பதால் அதற்கு முன்பே நாட்டில் வன்முறையைத் தூண்டும் இனக் கலவரத்தை ஏற்படுத்தி, தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிட ஜே.வி.பி தலைமை திட்டம் தீட்டிவருவதாகவும் இதற்கு தமிழின விரோத சக்திகளின்துணையை நாடியிருப்பதாகவும் இதற்கு பின்னணியில் வேறும் ஓரிரு வலிய சக்திகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதற்கான கால்கோள் நிகழ்வுதான் திருமலை வன்முறைகளாகும்.

சாத்தான்களோடும் பேய்களோடும் கூட்டுச் சேர்ந்து தமிழினத்தை நிர்மூலம் செய்யத்தயார் என காலங்காலமாக அறிவித்து செயற்பட்டுவந்த பேரினவாத தலைமைகள் இப்போது கூட்டுச் சேர்ந்து இருப்பது ஜே.வி.பியை.....

தென்னிலங்கை மக்களின் தலையெழுத்து இப்படியா அமையவேண்டும்?.

## மறுபடியும் முருங்கை மரத்தைத் தேடும் ஜே.வி.பி.

இதுவும் ஜே.வி.பி யினரைப் பற்றியதுதான்.



பழையபடி ஜே.வி.பி வேதாளம் வன்முறை முருங்கை மரத் தில் ஏறத்தொடங்கிவிட்டது. கடந்த காலங்களில் அதன் தாக்குதல் இலக்கானது தென்னிலங்கைக்குள் மட்டும் வெறிகொண்டு இயங் கியது. ஆனால் இம்முறை வடக்கு கிழக்கை நோக்கி வாலை நீட்ட ஆரம்பித்துள்ளது.

என்றுமில்லாதவகையில் இம்முறை தேசியத் தலைவர் பொன் விழா அகவை காணும் நிகழ்வும், மாவீரர் நாள் நிகழ்வும் வர லாற்றுச் சிறப்பு மிக்கவகையில் எழுச்சியுடன் கொண்டாட தமிழ் மக்கள உணர்வுபூர்வமாக மேற்கொண்ட ஏற்பாடுகள் பேரினவாதிகளை குறிப்பாக ஜே.வி.பியினரை எரிச்சல்கொள்ள வைத்தது என்றே கூறவேண்டும்.

மாவீரர் தினத்திற்கு எதிராக உண்மை வீரர்கள் தினம் என்ற பேரில் ஒரு நிகழ்வை நடாத்த முயன்றார்கள், ஆனால் அது பிசுபிசுத்துப் போகவே அவர்களின் அரசியல் பாரம்பரிய அராஜக செயற்பாடுகளில் இறங்கி தமது பொறாமையுணர்வையும் கையாலாகாத்தனத்தையும் வெளிப்படுத்தி மீண்டும் ஓர் இனக்கலவர சூழலை உருவாக்க முயன்றதைப் பார்க்கும்போது ஒரு மிக மிக பலவீனமான சனநாயகவிரோத காடையர் கும்பலாகவே அவர்களை அடையாளப் படுத்தமுடிந்தது எனலாம்.

குறிப்பாக அவர்களின் இந்த ‘எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்’ என்ற நோக்கிலான குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கு அவர்கள் இன்னமும் 1971 ஆம் ஆண்டின் தொலை நோக்குச் சிந்தனையற்ற கிளர்ச்சியாளர்கள் என்ற நிலையில் இருந்து இன்னும் சிலபடி இறங்கி கலகக்காரர்கள் என்ற நிலைக்கு மாறிவருவதே காரணமாகும்.

அரசுக்குள் கலகம் செய்கிறார்கள்

சமாதான முயற்சிகளை கலகம் செய்து குழப்புகிறார்கள்

தமிழ் மக்களுக்குள் பீதியை உண்டுபண்ண கலகம் செய்ய முனைந்துள்ளார்கள்....

திருமலை வன்முறைகள் ஜே.வி.பி. குண்டர்களும், பொலிஸ்தரப்பும், சிங்கள இனவாதிகளும், சில கட்டாக்காலி கைக்கூலித் தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களும் இணைந்தே மேற்கொண்டனர் என்பது தெளிவாக அறியவந்துள்ளது.

ஆனாலும் என்ன? எல்லா எதிர்ப்பாளர்களும் ஒன்று சேர்ந்தும் தமிழ் மக்களின் உணர்வெழுச்சியை தடுக்க முடியவில்லையே....!

இதுதான் இப்போது விமல்வீரவன்சவையும், டில்வின் சில்வாவையும் தாடியைச் சொறியவைத்துள்ள விடயமாகும். அது மட்டுமல்ல சோமவன்ச அமரசிங்கவுக்கு இதயவலியை ஏற்படுத்தியுள்ள விடயமும் அதுவாகஇருக்கலாம்.

பாவம் சனாதிபதியும், அரசும் அவர்களுக்கு மறை ஆதரவை வழங்கும் சில வல்லாதிக்க சக்திகளும்...! ஜே.வி.பியினரையும், பேரினவாதிகளையும் தமிழ் தேசவிரோத சக்திகளையும் பயன்படுத்தி தமது அரசியல் அபிலாசைகளை அடையத் திட்டமிட்டு ஏமாற்ற மடைந்து உள்ளுக்குள் புழுங்கிக்கொண்டு குமைகின்றார்கள்....! அதற்கு நாமென்ன செய்யமுடியும்?

செங்குட்டுவன்




# கள்ளிமேட்டு மறவேலன்

இ.கபிலன்

தங்கம்போல பளபளக்கும் நெல் வயல்களும், தென்னந்தோட்டங்களும் சூழ்ந்த வீடுகள் ஆங்காங்கே சிதறிக் காணப்படும்.

பச்சையாக உயர்ந்து, நிமிர்ந்து நிற்கும் சாம்பைப் புற்களை ஊடறுத்துச் செல்லும் நீர் வாய்க்கால்களைத்தடவிவரும் தென்றல் மக்களின் இதயங்களைக் குளிர்மையாக்கும்.

சாய்கிற சூரியனின் விழுகிற பொழுதில் எருமைகள் கூட்டம் கூட்டமாக பட்டிகளுள் அடங்கிவிடும். எழுகின்ற சூரியனின் விரிகின்ற கதிர்கள் வெளிச்சத்தில் எருமைகள் பால் சுரக்கும்.

மாரியம்மன் ஆலயம், பிள்ளையார் கோவில் மக்களின் ஆழ்மனதில் உள்ள தெய்வீக உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டும்.

இதுபோன்ற இயற்கைச் சிறப்புக்களைத் தாங்கி கிராமியம் கொஞ்சம் கூட மெருகு குலையாத சிற்றூர்தான் திருகோணமலை கள்ளிமேடு, இவ்வூரைப்பார்ப்பவர்கள் மனதில் கவிதைகள் பொங்கும்.

இந்தப் பெருமித உணர்வு கலந்த மகிழ்ச்சிப் பெருக்கில் மக்கள் வாழ்ந்தார்கள். இம்மக்கள் வாழ்க்கை நெறிமுறைகளைத் தலைமுறை தலைமுறையாக ஒரு பண்பாகப் பாதுகாத்தும் பேணியும் வந்தார்கள்.

இத்தகைய மக்களுள் வேலாயுதம் அண்ணன், அவரது மனைவி இராசலட்சுமி, மாமி, மைத்துனி தவமணி, மைத்துனர்களான திலகன், துரை, சிவா உள்ளடங்கலான கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் மிகுந்த சந்தோசமாக வாழ்ந்தார்.

அண்ணன் இன்பமாக வாழ்ந்துவரும் சூழலில்தான் சிங்களவர்களால் தமிழர் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. தமிழன் வாழவேண்டும் ஆயின் தமிழன் தன்னை ஆளவேண்டும் என்ற மனக்கருத்து தமிழரிடம் ஆழமாகப் பதிவாகிய காலமாக இக்காலப் பகுதி மாறியது.

காலப்போக்கில் புலிகள் பற்றிய செய்திகள் பரவி நாலாபக்கமும் அந்த அலைகள் மோதிக்கொண்டிருந்தன. புலிகள் இயக்கத்தின் எழுச்சியும், தமிழரின் சுதந்திரப் போரும் 83 கலவரத்தின் பின் உத்வேகம் பெற்றது.

புலிகள் 84 இறுதிக்காலப்பகுதியில் இருள் சூழ்ந்த வேளைகளிலும் இருள் போகாத அதிகாலைக்கும் இடைப்பட்ட நேரங்களுக்குள்ளும் நடமாடி கால நகர்வில் அவர்கள் பகற்பொழுதிலும் ஆயுதங்களுடன் நடமாட ஆரம்பித்தனர்.

அண்ணன் புதிய புரிதல்களோடு புலிகளுடன் உரையாடல்களைச் செய்து புதியதொரு வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தார். பாசம் உள்ள இடத்தில் பச்சைக் குழந்தையாக ஒட்டிக்கொள்ளும் இவரின் குணத்தால் புலிப் போராளிகளின் விசுவாசத்துக்கு உரியவராகினார்.

இவர் மூத்த தளபதிகளான சந்தோசம் மாஸ்ரர், கணேஸ், புலேந்தி அம்மான் போன்றவர்களோடு ஆரம்ப உறவையேற்படுத்தியதுடன், இவர்களுக்கான அனைத்து உதவிகளையும் தனக்கேயுரிய இனிய சிரித்த முகத்தோடு செய்துவந்தார்.

அண்ணன் போராளிகளிடமே தனது குடும்பத்தின் எதிர்காலத்தை ஒப்படைத்தவராக விடுதலைப்போராட்டத்துக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் தொடங்கினார். இவர் அலுப்போ, சோர்வோ இன்றி வேலைகளை முன்னெடுத்ததோடு அவ்வேலைகளைத் தன்னுடையது போலவே மிகச்சிரத்தையாகச் செய்ததுடன் அதனை உடனுக்குடன் செய்து முடிக்கும் கடின உழைப்பாளியாகவும் இயங்கினார்.

இவர் ஆற்றல் மிக்க புதிய போராளிகள் சிலரை இணைத்துக்கொடுத்தல், ஆதரவாளர்கள் வட்டத்தை அறிமுகம்செய்து வைத்தல், போராளிகளுக்கான தளம் நிறுவ ஒழுங்குகளைச் செய்தல், போராளிகளைப் பாதுகாப்பாகத் தங்க வைத்தல், வேவுப் பணிக்கான உதவி செய்தல், போராளிகளது பசியைத் தீர்த்தல் ஆகிய பணிகளைச் செய்து இயங்கினார்.

(இவரால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போராளிகளில் சிலர் மாவீரர்களாகியுள்ளனர். ஒரு சிலர் இன்றும் பொறுப்பு வாய்ந்த பணிகளைச் செய்துவரும் தளபதிகளாக இருக்கின்றார்கள். மொத்தமாக இவர் புலிகளின் அமைப்பாளராகவும் செயலாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்புனித கடமைகளின்போது பல நாட்கள் கண்தூங்காமல் பாடுபட்டார். இவர் தனது குடும்ப நலனைக் கவனத்திற் கொள்ளாது போராளிகளின் நலனிலேயே போதிய கவனம் செலுத்துபவராகச் செயலாற்றினார்.)

பன்குளத்தில் அமைந்திருந்த புலேந்தி அம்மான் தளத்திலிருந்து விக்கி, இந்திரன், றெஜி,ஆசிர்,பரதன்,சரோன்,சந்தர், அலோசியஸ்,வரதன், பிரபு, கங்கா, தீபன், மது, விசு, வசந், குணம், பரமன் ஆகியோர் 86 இல் தம்பலகாமம் பகுதித் தாக்குதல் அணிப்போராளிகளாக வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மாரியம்மன் கோவிலுக்கு மிக அண்மையில் தற்காலிக முகாமிட்டனர். இவ்விடம் பின்னாட்களில் பொற்கோவில் எனப் பெயர் பெற்றது.

அண்ணனும் இவரது குடும்பமும், ஊர்மக்களும் போராளிகளுக்கு உற்சாக இரத்தம் பாச்சும் இதயங்களாக இயங்கினார்கள்.

இவர் இந்திரன், றெஜி, வழிகாட்டியான ஈஸ்வரண்ணன் ஆகியோருடன் கடவானைக் காட்டினுள் நுழைந்து முகாம் அமைப்பதற்கான இடத்தெரிவினைப் பார்த்துவிட்டு ஊர் வந்து சேர்ந்தார். இப் பயணம் மிகவும் ஆபத்துமிக்க பயணமாகும். அதீத போராட்ட ஆர்வமும் போராளிகள் மீதான பிரியமும், அந்த ஆபத்துக்களை ஒரு பொருட்டாக இவர் எடுத்துக்கொள்ளாத தன்மைக்குச் சான்றாகும்.

போராளிகள் கடவானை கொச்சூற்று என்னும் இடத்தில் முகாமிட்டனர். இப் புதிய முகாமை அமைக்கும் முழு ஒழுங்குகளோடு இரு மாட்டுவண்டில்கள் நிறைய உணவுப் பொருட்கள் ஏற்றியபடி அண்ணனும், அருணும் நகர்ந்தார்கள்.

மலைக்குன்றுகள், பாறைகள் நடுவே நெடுத்துயர்ந்த மரங்கள் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியினுள் போராளிகள் தங்குமிடங்களை நிறுவினர். அவ்விடம் மாட்டுவண்டில்கள் செல்ல முடியாத உயர்ந்த மலைப்பிரதேசமும், ஒற்றையடிப் பாதையும் கொண்டு இயற்கையாக இருந்தது. அதனால் சிறிது தூரம் பொருட்கள் அனைத்தையும் போராளிகளின் தோள்கள் சுமந்தன. அண்ணனும் தோள் கொடுத்தார்.

போராளிகள் காட்டுத் தளத்திலிருந்து ஊர்வந்து செல்லும் சமயங்களிலும் சரி, ஊரிலிருந்துகாட்டுத் தளத்துக்கு மாட்டு வண்டில்களில் பொருட்களை ஏற்றிச் செல்லும் சமயங்களிலும் சரி சிங்களப் படையினரின் பதுங்கித் தாக்குதலுக்கு இலக்காகும் கொலை வலயமான பயணப் பாதையாகவே அது இருந்தது.

இந்தச் சந்தர்ப்பங்களின்போது அவ்விடத்தில் அண்ணனும் இவரின் நெருங்கியவர்களான நவரெட்ணம், நாகராசா, துரை, வசந்தன், நாராயணபிள்ளை போன்றவர்களும் கைக்குண்டுகளைத் தாங்கியபடி காவல் நின்றார்கள். இக்காவல் கடமைகளின் போது இவர் இரவு நேரங்களில் முழுதாக நித்திரை கொள்ளாது பல நாட்களைக் கழித்தார்.

தம்பலகாமம் சந்தியிலுள்ள சிங்களப் படைமுகாம் படையாட்களின் வன்முறைகள் தலைதூக்கிசீறிப்பாய மக்கள் உளஅழுத்தங்களால் பாதிக்கப்பட்டு சுயமாக இயங்காத



நிலைக்குத் தள்ளப்பட்டனர். இச் சோகங்கள் அரங்கேறிய சூழலில் புலேந்தி அம்மான் ஊர் வந்தபோது, அண்ணன் போராளிகள் ஊர்மத்தியில் முகாம் அமைத்திருக்க வேண்டிய தேவையை அவரிடம் எடுத்துரைத்தார்.

போராளிகள் காட்டுத் தளத்திலிருந்து அகன்று கள்ளிமேடு ஊர்நடுவில் அண்ணனின் வீட்டுக்கு முன் வளவினுள் முகாமை அமைத்தனர். அன்றிலிருந்து போராளிகள் அனைவருக்குமான நாளாந்த உணவுச் சமையல் மையமாக அண்ணனின் வீடு இயங்கியது. காலவோட்டத்தில் கள்ளிமேட்டை புலிகளின் மேடு என சிங்களப்படையாட்களின் வாய்கள் உச்சரித்தன. அந்தளவுக்கு அண்ணனினதும், ஊர் மக்களினதும் ஆதரவு பலமாகியது.

அண்ணனின் குடும்பத்தினரோடு போராளிகளின் உறவு ஆழமாக வேரோடியது. அது அவரின் வீட்டுடன் நின்றுவிடாது ஊரின் எல்லா இடங்களிலும் செருகிக் கொண்டது. அங்கு முதியோர்கள் தொடக்கம் குழந்தைகள்



வரை போராளிகளின் முகங்களைக் கண்டபோது எல்லாம் அவர்களது மனதில் மகிழ்ச்சி உண்டாகத் தவறவில்லை.

கடகடவென மாதங்கள் நகர்ந்தன. சிங்களப் படையாட்கள் நாலாபுறமும் தம்பலகாமம் ஊருக்குள் நுழைந்தார்கள். திகைப்பூட்டும் விமானக்குண்டு வீச்சுக்களை மேற்கொண்டும் பரபரப்பில் ஆழ்த்தும் உலங்கு வானூர்தி ஏவுகணைகளை ஏவியும் பெரும்படையாக சிங்களம் ஊரை ஆக்கிரமித்தது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது சிங்களத்தின் விரைவான நகர்வைப் போராளிகள் தடுத்து நிறுத்த மக்கள் பாதுகாப்பாக அயல் முஸ்லிம் கிராமங்களுள் தஞ்சம் புகுந்தார்கள். அண்ணனும் தன் மனையாளுடனும், கைக்குழந்தையோடும் சென்றவராயினும் அவர் குழந்தையை மாமியிடம் ஒப்படைத்துவிட்டு தன் மனையாளைத் துவிச்சக்கரவண்டியில் ஏற்றியபடியே மீளவும் போராளிகளிடம் வந்து சேர்ந்தார். அதுவும் குண்டுவெடிப்புக்களின் மத்தியில் கிளம்பிய புகைமண்டலங்களுக்கூடாக உணவு சமைத்துக்கொடுக்கவே வந்தார். ஆனாலும் போராளிகள் அவர்களை விரைவாக பாதுகாப்பாக மீள அனுப்பி வைத்தனர்.

சிங்கள ஆதிக்க சக்தியால் ஊர் அலங்கோலமாக்கப்பட்டது. மக்கள் துயர் சூழ்ந்து புலம்பல் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அண்ணனும் சிறுகுடில் மூலையில் புலம்பியபடியே சில நாட்கள் முடங்கிக்கிடந்தார். இவர் இழப்பதற்கு ஏதுமில்லாதநிலையில் வாழ்ந்து வந்த போதிலும் சாவாறு காட்டுத் தளத்திலிருந்து வரும் போராளிகளுக்கான பணிகளைச் செய்து கொடுத்து அவர்களின் நகர்வுகள் தடைகள் எதுவுமின்றி நகரப் பங்காற்றினார்.

அண்ணன் கஷ்டமில்லையென்று சொல்லிக்கொண்டாலும் இடம்பெயர்வு அவருக்கு ஏற்படுத்தியிருந்த தாக்கம் விசாலமானது. அவர் போராளிகளுக்கு முன்னையது போல நிறைவான உணவைப் பரிமாற முடியவில்லையென்று கலங்கினார். இவரின் கண்கள் கவலையில் ஆழ்ந்திருந்தன.

இவர் துன்பங்களை அனுபவிக்கும் இல்வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து வரும்போது இவரது கௌரவ வரலாற்றில் களங்கம் படிந்த கசப்பானதொரு நிகழ்வு நடந்து முடிந்தது. இதனால் போராளிகள் இவரைச் சமூகத்தினரின் முன்னிலையில் வைத்து தண்டிக்கும் நிலையேற்பட்டது. இதன்பின் அண்ணன் தன்தவறை உணர்ந்தவராகவும், போராளிகளின் பக்க நியாயத்தைப் புரிந்தவராகவும் பிரிக்க முடியாத ஆழமான அன்புறவோடு போராளிகளுக்குரிய உதவிகளைச் செய்வதைத் தொடர்ந்தார்.

ஆண்டுகள் வேகமாக உருண்டோடின. விடுதலைப்போரும் புதிய சவால்களைச் சந்தித்தது. இந்தியப் பெரும் படையெடுப்பு, இரண்டாம் கட்ட ஈழப்போர், மூன்றாம் கட்ட ஈழப்போர், சிங்களப்பெரும் படையெடுப்புக்கள் எனப் பாரிய சவால்களை தமிழர் படை எதிர்கொண்டது.

90 இல் போர் மூண்டு விட்ட சமயத்தில் அண்ணனின் ஊரில் கொலைகள் உச்சத்துக்கு வந்ததும் அண்ணன் தன் குடும்பத்தோடு வன்னி வந்து சேர்ந்தார். இவர் வன்னியில் புதிய வாழ்க்கைக்கான பலமான அத்திவாரத்தைப் போட்டுத் தன் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக வாழ்ந்தார்.

அண்ணன் வவுனியா வியாபாரியாகத் தன்னை மாற்றிக் கொண்டதோடு தன் விடுதலைப் போருக்கான கடமையாக புலிகளின் புலனாய்வுத்துறையினரின் முகவராகிச் சேவையாற்ற ஆரம்பித்தார். இப்பணி புதிய முதல் அனுபவமாக இருந்ததனால் மிகவும் திறம்படச் செயற்பட முடியாதவராக இருந்தபோதிலும் கண்ணனின் விசுவாசம் மிக்க ஆர்வமுள்ள தகவலாளராகச் செயலாற்றி வந்தார்.

இவர் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாகி ஒரு வருடத்துக்குப் பின் சொந்த ஊருக்குச் சென்று வாழ்க்கையை சீரமைத்துக் கொண்டார். இவ்வாறாக வாழ்ந்துவரும் காலத்தில்தான் துயரம் மிக்கசாவைத் தழுவிக் கொண்டார். அவரின் மனைவி பேசக்கூடத் தென்பற்றவராகினார். இவரின் சாவு ஊர்மக்களை சோகத்தில் ஆழ்த்தியதுடன் போராளிகளையும் அதிர்ச்சிகரமான துயரத்தினுள் கொண்டு சென்றது.

அண்ணன் ஆபத்தான எத்தனையோ நெருக்கடியான சூழ்நிலையிலும் அச்சத்துக்கு அறவே இடங்கொடாது ஆழ்ந்த பற்றுடன் போராளிகளுக்குப் பணி செய்து வந்தவர். இதனால் இவருடைய உயர்வையும் பெருமையையும் தமிழர் வரலாறு வெளிக்காட்டி நிற்கின்றது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 03 . 12 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## பட்டுத்தான் தெளிய வேண்டும்...!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தால் அரசிடம் சமர்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபு குறித்து சிங்கள தேசத்தில் அதன் உண்மை முகத்தை மறைத்து, உண்மைக்குமாறான ஒரு தோற்றப்பாட்டைக் காண்பிப்பதில் ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முன்னின்று செயற்படுகின்றன.

இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான எதிர்ப்புகளை இந்த கட்சிகள் வெளிப்படுத்திவருகின்ற நிலையில், வடகிழக்கில் போரினால் மிகவும் பாதிப்படைந்து அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி பணிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களை நம்பிக்கையிழக்கச்செய்யும் செயலை மேற்கொள்கின்றன.

தமிழ் மக்கள் ஒரு புறமும், புலிகள் இயக்கம் இன்னொருபுறமும் தமிழ் மக்களின் அவசரதேவைகளை குறித்து எவ்வளவுதான் உணர்த்த முயன்றாலும் இக்கட்சிகள் இதன் அவசரத்தன்மையை புரிந்துகொள்வதாக இல்லை.

நிலைமை இவ்வாறு இருக்க தமிழ்பிரதேசங்களில் திட்டமிட்டவகையில் தமிழ்மக்களின் இயல்புவாழ்வை மோசமாக பாதிக்கும்வகையில் வன்முறைகளை தூண்டிவிடுவதிலும் இக்கட்சிகள் பின்னின்று செயற்படுகின்றன.

அத்தோடு, அரசபடைகள் இந்த வன்முறைகளை மிகமோசமானமுறையில் அணுகமுற்படுவதுடன், தமிழ்மக்களை மிகவும் கொதிப்படையும் வகையிலும் செயற்படுகின்றன.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி முக்கியஸ்தர்களில் ஒருவரான நந்தன குணதிலக "புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, நாட்டை பிளவுபடுத்தும் ஆவணம் பிரிவினையை ஏற்படுத்தும் ஆவணம், அதனை அரசு அமுல்படுத்த முற்படுமானால் தெற்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைமை உருவாகும்."

அப்படியொரு நிலை உருவானால் அதற்குத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பே பொறுப்பேற்கவேண்டும் என கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்காது, பாரபட்சம், மற்றும் ஒடுக்குமுறை என எல்லாவித புறக்கணிப்புகளாலும் இன்றுவரை பாதிப்படைந்துள்ள தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாகவும், இவைமறுக்கப்பட்டதால் ஆயுதம் ஏந்தி போராடி இன்று சிறிலங்கா அரசுக்கு சமாந்தரமாக வடக்குகிழக்கு பிரதேசத்தில் ஒரு அரசுக்குரிய எல்லா கட்டுமானங்களையும் உள்ளடக்கி ஒரு அரசை அமைக்கும் அளவுக்கு தமிழ் மக்களை ஆயுதம் ஏந்தவைத்தமைக்கு சிங்கள தேசத்தில் யார் பொறுப்பெடுக்கப்போகிறார்கள்.

தமிழ்மக்களின் உரிமைகளில் ஒரு கட்டமாக அதுவும் ஒரு பகுதியளவாகவே இருக்கக்கூடிய இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக இவர்கள் ஆத்திரமுறுகிறார்கள் எனின் இந்த சிங்கள தேசத்திலிருந்து ஒரு நிரந்தர தீர்வை தமிழ் மக்கள் எதிர்பார்க்கப்போவதில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான நியாயமான அரசியல் அபிலாசையை அடையக்கூடிய வகையில் தம்மை தயார் நிலையிலேயே வைத்திருக்கிறார்கள்.

ஆனால், சிங்கள தேசத்துக்கே தமிழ் மக்களோடு இணைந்து வாழவேண்டுமென்ற தேவை இருக்கிறதேயொழிய தமிழ் மக்களுக்கு அல்ல, என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த ஆயுதப்போரை மூன்றாண்டு அமைதிகாலமாக சிங்கள தேசத்துக்கு வழங்கியபோதும், சிங்கள தேசம் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக ஒரு சாதகமான நிலைக்கு தம்மை தயார்படுத்தவில்லை. பதிலாக மேலும், மேலும் கூர்ப்படைந்து போகும் இனவாத வன்முறை மனோபாவத்துக்குள் தம்மை அமிழ்த்திக்கொள்வதிலேயே குறியாக உள்ளனர்.

சொல்லி புரியாத இந்த தெற்கு சக்திகள் பட்டுத்தான் தெளியவேண்டுமென விரும்பினால் தமிழ் மக்களாலல்ல எவராலுமே தடுக்கமுடியாது என்பது மட்டும் உண்மை.

## திருகோணமலை மாவட்டத்தின் வன்முறைகளின் பின்னணியில்...?

கடந்த காலங்களில் இன வன்முறைகளால் அதிக பாதிப்புக்குள்ளான மாவட்டம் திருகோணமலை மாவட்டம்தான். தமிழர் வரலாற்றில் தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டம் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிக்கப்பட்டுவருகின்றதுடன் இம் மாவட்டத்தை சிங்களப்பெரும்பான்மை மாவட்டமாக ஆக்க சிங்கள அரசு மறைமுகமாக செயற்பட்டுவருகின்றது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் பேரிலும் மீன்பிடித்தொழில் வசதி எனும் பேரிலும் கடந்த காலங்கங்களில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் சிங்களக்குடியேற்றத் திற்குட்பட்டன. இதைவிட இனக் கலவரங்களால் தொகையான மக்கள் இம்மாவட்டத்தைவிட்டு விரட்டப்பட்டனர். இவ்வாறு புலம்பெயர்ந்து அரசு எவ்வித நடவடிக்கைகளையும் உருப்படியாக மேற்கொள்ளவில்லை. மாறாக உயர்மட்டப்படைத் தளபதிகளை திருகோணமலைக்கு அனுப்பி பிரச்சினைகளை ஆராய்கிறோம் என்று கூறியது. பிரச்சினைகளை தூண்டியவர்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து ஒரு அறிக்கையும் விட்டனர். அதாவது இப்பகுதியில் பிரச்சினைகளை ஒரு மூன்றாவது சக்தி தூண்டுகிறது என கூறுகின்றார்கள். யாரிந்த மூன்றாவது சக்தி?

உண்மையில் இந்த மூன்றாவது சக்தியென அவர்கள் குறிப்பிடுவது ஜே.வி.பியினரைத்தான். இன்றைய அரசின் பங்காளிகள் என்பதைவிட இன்றைய அரசு ஜே.வி.பியுடையது என்பதுதான் பொருந்தும். அதாவது அரசுதான் திருகோணமலையில் மாத்திரமல்ல தமிழர் தாயகமெங்கும் பிரச்சினை குழுவும், சர்வதேச சமூகமும் கூறும். ஆனால் மக்களை தாக்கினால் அதை சாதாரண நிகழ்வாக பாதுகாப்பு காரணம் என அரசு வெளியுலகிற்கு காட்டிவிடும். புலி உறுப்பினர் தாக்கப்பட்டதைவிட மக்கள் தாக்கப்பட்டால் புலிகள் அதிக ஆவேசம் அடைவார்கள். இதன் மூலம் அவர்களை யுத்தத்திற்கு இழுத்து சர்வதேச மட்டத்தில் புலிகள் போரைத்தொடங்கிவிட்டார்கள். புலிகள் பயங்கரவாதிகள் எனக்காட்ட அரசு முற்படுகின்றது. புலிகளை சண்டைக்கு வருமாறு அழைக்கிறது. மக்களைத்தாக்கி புலிகளை ஆத்தரமூட்டுகிறது.

ஆட்சியில் உள்ள கூட்டணி அரசின் பங்காளியான ஜே.வி.பி இனவாதத்தை தூண்டி சிங்கள மக்கள் மத்தியில் தாங்கள் ஒரு



ஏதிலிகளாக வேறுமாட்டங்களுக்கு சென்று இன்னும் நிலமற்றவர்களாக, அகதிகளாக குடியிருப்புக்களிலும், அகதிமுகாம்களிலும் அவல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுடைய சொந்த நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களாக மாறியுள்ளன; மாறிவருகின்றன. உதாரணமாக திருகோணமலை, தென்னமரவாடி கிராம மக்கள் 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் இடம்பெயர்ந்து இன்னும் வன்னிப்பகுதியில் நிலமற்றவர்களாக குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் நிலங்கள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன; இராணுவ பயன்பாட்டில் உள்ளன. இவ்வாறு மட்டக்களப்பு, அம்பாறை (அழகிய பாறை) உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் 1948ஆம் ஆண்டு 5வீதம் ஆக இருந்த பெரும்பான்மை இனத்தவர்கள் 1995ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிபரம் ஒன்றின் படி 24வீதமாக வளர்ச்சிகண்டுள்ளனர். இது இன்னும் அதிகமாகவும் இருக்கலாம்.

தமிழின் அழிப்பில் பாரிய வடுக்களை தாங்கிநிற்கும் மாவட்டமான திருகோணமலை மாவட்டத்தில் அண்மைநாட்களாக தலைதூக்கியுள்ள இன வன்முறைச் சம்பவங்கள் திருகோணமலை மக்களுக்கு மற்றுமொரு 1983ஆம் ஆண்டாக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இந்நிலையை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர களை தோற்றுவிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் சிங்களப்படைகளுக்கும் அரசுக்கும் ஒரு பேரதிர்ச்சியை கொடுக்கின்ற மாதமாக இருந்துவந்தது. யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள இவ்வருடத்தில் கார்த்திகை மாதத்தில் தமிழர்களுக்கு ஒரு தலையிடியை கொடுக்கவேண்டுமென சிங்கள அரசும், படையினரும் எண்ணியிருக்கவேண்டும். அதனுடைய வெளிப்பாடுதான் வல்வெட்டித்துறையில் இரண்டு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடக்கம் பல மாவட்டங்களிலும் தமிழ்பேசும் மக்கள் கடுமையாக தாக்கப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் காயப்படுத்தப்பட்டனர்.

இவ்வருடம் அரச படையினரால் மாவீரர் நாள் செயற்பாட்டை குழப்பவேண்டும் என கங்கணங் கட்டிய செயற்பாடானது இலங்கையில் யுத்தநிறுத்தம் ஒன்று அமுலில் இருக்கின்றதா? என எண்ணத் தோன்றி உள்ளது. அவ்வாறு அமுலில் இருந்தால் ஆயிரக்கணக்கான படையினர் நகரங்களில் குவிக்கப்பட்டு கண்மூடித்தனமாக மக்கள் தாக்கப்படவேண்டியதன் காரணம்தான் என்ன? இதில் அரசு உணர்ந்து வைத்துள்ள உண்மை என்னவென்றால் நேரடியாக புலிகளை தாக்கினால் அது ஒரு போருக்கு அடித்தளமிடுவதாக அமையும். இது யுத்தநிறுத்த மீறல் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் பௌத்தத்தை காப்பாற்ற வந்த புத்தரின் படைப்பாக சித்திரித்து கதைத்து மக்களின் மனங்களில் இனவாத விதையை தூவி இந்நாட்டில் ஐக்கிய இலங்கைக்குள் இன்றெல்ல என்றுமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதபடி இனவாதத்தை வளர்த்து வருகின்றது. இதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைமையில் மாவீரர் நாளுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தையும் நடாத்தியதுடன் இந்த ஜே.வி.பியின் தூண்டுதலில் அரச படைகளின் ஆதரவுடன் தமிழ்மக்கள் சிங்களக் காடையர்களால் மோசமாக தாக்கப் பட்டுள்ளனர். இதில் ஜே.வி.பியின் பௌத்த இனவாத மாயைக்குள் ஊறிய சிங்களக் காடையர்களுக்கும், படையினருக்கும் ஒரு விடயத்தை நன்குணராதவர்களாக உள்ளனர். அற்ப சம்பவங்களை கருத்தில் கொண்டு புலிகள் பலயீனமான நிலையில் உள்ளார்கள் என எண்ணி மக்களை தாக்கி விடுதலைப்புலிகளை ஆத்திரமூட்டி அவர்களை போருக்கு இழுக்கின்றார்கள். இவர்கள் இச் செயற்பாட்டை நிறுத்தத் தவறுவார்களானால் குழவிக்கூட்டுக்கு கல்லெறிந்த ஊனமுற்றவன் கதையாக இவர்கள் கதையும் முடிந்து விடக்கூடும் ஏன்பதே பலரது கவலையும்.

**அ.பிரகாஷ்**

# இடம் பெயர்க்கப்பட்ட முதிய மக்களின் உள்மன ஆசைகள்

## ஊருக்குப் போதல்

உலகத் திசையெங்கும் இருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்கள் வான் அலை முழுதும் பரந்துவிட்டது இன்று.

எந்த அலைவரிசையைத் திருப்பி விட்டாலும் இந்தக் குரல்கள் ஒலிக்கும் பலவிதமாய்.

இயலாது என ஒளிந்து ஈனஸ்வரத்தில் முனகும் ஒரு குரல்.

எதிர்பார்ப்புக்கள் சிதைந்து தேவைகள் நிறைவேறாது ஏமாற்றத்தில் பிசிறும் இன்னொரு குரல்.

உறவுகளின் உயிர்கள் பறிக்கப்பட்டதால், உடமைகளும் நிலமும் ஆதிக்க வெறியோடு சிதைக்கப்பட்டதால் இனியும் சிதைபட முடியா என வெகுண்டெழும் சில குரல்கள்.

ஏகாதிபத்தியங்களால், பேரினவாதிகளால் அதிகார வெறியோடு ஆதிக்கக் கரம் கொண்டு நெரிக்கப்பட்டபோது புதையுண்டு புதையுண்டு புதைகுழிகளின் எல்லைக்கே சென்றுவிட்டன பல குரல்கள்.

திருப்பி மூச்சுவிடவே முடியாத அளவுக்கு மாயப்பயச் சகதிக்குள் மூழ்கிவிட்டன பல குரல்கள். அடிமைப்படுத்தப்படுகின்ற ஒரு சமூகத்தில் அடிமைப்படுத்துவோரால் குரல்வளைகள் நெரிக்கப்பட்டு இந்த அனர்த்தங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியான சிதைவுகளை தாம் ஆக்கிரமிக்கும் நிலத்தில் ஏற் படுத்துவதை ஆக்கிர மிப்பாளர் குறியாகக் கொண்டிருப்பர். அடிமைப்படுத்தப்பட்ட நிலத்தில் அதன் சமூகக் கட்டுமானம் கீழ்க்காணும் துன்பியல் விளைவுகளை அனுபவிக்கும் நிகழ்வுகள் நிகழ்ந்திருக்கின்றன.

01) பூர்வீக மக்களை உடனடியாகவோ அல்லது படிப்படியாகவோ கொள்வது, அவர்களுடைய இடத்தில் அன்னியர்களைக் குவிப்பது ஆகியவற்றைக் கொண்டே முழு அழித்தொழிப்பு.

02) பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ நிகழும் குடியேற்றத்தைக் கொண்ட பகுதி அழித்தொழிப்பு.

03) பூர்வீக மக்களை வழக்கமாகவே உயிர் வாழ்வதற்கான வசதிகள் அற்ற நிலப் பகுதிகளில் அல்லது தனிக்குடியிருப்புக்களில் கொண்டு போய் விடுவதன் மூலமும், குடியேறிகளை ஏராளமாகக் கொண்டு வந்து குவிப்பதன் மூலமும் உருவாகின்ற வெளிப்படையான ஆக்கிரமிப்பு.

இத்தகைய ஒரு சூழலில் அழித்தொழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இனக்குழுக்கள் தமது பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான தீவிரப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியது மிகவும் அவசியம்.

பயத்துக்குள் உறைந்து போய் உள்ள ஒரு சமூகத்தில் இந்தப் பண்பாட்டுப் போரை நிகழ்த்துவது மிகுந்த கடினமானதும்கூட.

உறை நிலையிலுள்ள மக்களை விழிப்பு நிலைக்குக் கொண்டுவர மிக்க கடினமாக உழைக்க வேண்டும். படிப்படியான முன்னகர்வுகளோடு அந்த மக்களை பயம் கலைத்து வெளிக்கொண்டு வரும்போது அவர்களின் குரல் மிக வீறார்ந்து வெளிவரும். உணர்வின் குழம்புகளாய்க் கொப்பளிக்கும், கொடுமைகளை பொசுக்கும் கொதி நெருப்பாய் அது சுவாலை விடும்.

இலங்கைத்தீவில் பேரினவாதம் கருக்கொண்ட நாளில் இருந்து தமிழீழ நிலப்பகுதி எங்கும் இவை எல்லாமும் நடந்தேறின.

இவை எல்லாவற்றின் போதும் மிதவாத அரசியல் ரீதியாக வெற்றிகொள்ள முடியாமற்போன போது "இனிமேல் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தந்தை செல்வா சொன்னதை நாம் மறந்துவிட முடியாது.

இந்த நேரத்தில்தான் தீர்க்க தரிசனம் மிக்க தேசியத் தலைவர் எங்களுக்குத் தோன்றுகின்றார்.

தமிழ் மக்களையும், தமிழர் நிலத்தையும் காக்கும் கவசமான பெரும் படைப் பலத்தைக் கட்டியெழுப்புகிறார்.

புலிப்படை இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. அரசியல் ரீதியில், இராணுவ ரீதியில் புலிகளின் பலம் உலகம் அதிசயிக்கும் விதத்தில் வளர்ந்துள்ளது.

எமது பாதுகாப்புக் கவசமாகிய தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று உலகமெங்கும் புரளி கிளப்பி எமது மக்கள் மீது அழிவுகளை ஏற்படுத்தி எமது தாய் நிலத்தின் கணிசமான பகுதிகளை 'உயர் பாதுகாப்பு வலயம்' என்ற போர்வையில் ஆக்கிரமித்து நிற்கிறது சிறிலங்கா இராணுவம்.

சிறிலங்காவின் பேரினவாதிகள் தமது கூலிப்படையான இராணுவத்தின் துணைகொண்டு தமிழர் தாயக நிலப்பரப்புக்களை கபளீகரம் செய்ய முற்பட்டபோது இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களை, வீடுகளை, வளவுகளை, தோட்டங்களை, வயல்களை, ஆலயங்களை, பண்பாட்டு இருப்புகளை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

தமது நிலத்தை உழுது, கிளறி, பண்படுத்தி, விளைநிலமாக்கி இன்பம் கண்ட தமிழர்கள் பலர் இன்று தமது நிலத்திலிருந்து பிடுங்கியெறியப்பட்டு இடம் பெயர்ந்தோர் என்ற பெயரிலும் அகதிகள் என்ற பெயரிலும் முகாம் சனம் என்ற பெயரிலும் அடையாளப்படுத்தப்படும் அவலம் இந்த மண்ணில் நிகழ்ந்துள்ளது.

ஏறக்குறைய 15/20 வருடங்களுக்கு மேலாக தமிழர் தாயகம் அபகரிக்கப்பட்ட இந்த அவலம் தொடர்கிறது.

சிறிலங்கா இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் தமிழர் நிலங்கள் எல்லாம் இன்று உயர் பாதுகாப்பு வலயம் என்ற மாய வார்த்தைக்குள் சிதையுண்டு போயுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் எங்கும் இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் கோலோச்சுகின்றன.

இங்கெல்லாம் தமது நிலங்கள் அழிக்கப்பட்டுவிட்டதை தமிழர் அறிவர்- தமது வீடுகள் தரை மட்டமாகியதை அவர்தாம் தெரிவர்- தமது கிணறுகள் இடிந்துபோனதை, கோவில்கள் தகர்ந்துபோனதை, எல்லைகள் அழிக்கப்பட்டு காவலரண்கள் நிமிர்ந்துள்ளதை எம் தமிழர் அறிவர்.

எனினும், எங்கள் முதியவர்கள் - கிழவர் - கிழவிகள் தமது சொந்த நிலத்தின் மீது கொண்டுள்ள பற்றும் பாசமும் பிரிவுத்துயரும் கண்டால் உலகம் அதிசயிக்கும்; அதிர்ச்சியடையும்.

ஏனெனில், எங்கள் ஊர்களை உருவாக்கியவர்கள் அதனைக் கண்டுபிடித்தவர்கள் எங்கள் கிழவர்களும், கிழவிகளும் தான். அவர்களுக்கு இந்த மண்ணின் இயல்பும், வாசனையும் அதிகம் தெரியும். தமது நிலங்களிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட வேதனையுடனேயே அவர்கள் இன்னும் உள்ளனர் - தமது நிலத்துக்குத் திரும்பிப் போகவேண்டும் என்ற ஏக்கம் அவர்களிடம் நிறைந்துபோயுள்ளது.

தமது இறுதிக் காலத்திலாவது தமது சொந்த ஊரில் சொந்த வீட்டில் போயிருந்து சொந்தக்கிணற்றில் குளித்து உயிர் ஊக்கமடைய வேண்டும் என்றதுடிப்பு அதிகரித்து விட்டது.



இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்ததால் அந்தத் துடிப்பை அடக்கியபடியே இவர்கள் உறைந்து போயிருந்தனர். தம்மைக்காக்கும் கவசமாகிய தலைவனின் தூதர்கள் வென்று குவித்து தமது ஊரடியில் வந்த போது இவர்கள் புத்துயிர்ப்புப் பெறுகின்றனர் - பயம் நீக்கி உற்சாகமடைகின்றனர் - மனதில் நிறைந்து கிடந்ததுயரங்களை ஆசைகளை வெளியிடும் தளம் கிடைத்தபோது எல்லாவற்றையும் கொட்டிவிடத் துடிக்கின்றனர்.

இவர்களது கொட்டிவிடும் துடிப்பை உலகறியச் செய்ய அரங்க செயற்பாட்டுக்குழு, பெண்கள் பண்பாட்டு மையம் இணைந்து தொடர் முயற்சிகள் செய்தன - எங்கள் கிழவர்கள், கிழவிகள் தம் ஆன்மத்துடிப்பை இனங்கண்டனர். கிழவர் என்பவர் உரிமையுடையவர் என்பது இலக்கணம். கிழவி என்பதும் அவ்வாறே - எமது முதியோர், எம்மீதும் எம்மண் மீதும் உரித்துடையோர் - எமது உரித்துடைய ஊர்கள் மீது இவர்கள் கொண்டுள்ள பாசம், நம்பிக்கை அளப்பரியது.

"எங்கள் ஊருக்குவிட்டாக் காணும், எங்கட சொந்த இடத்துக்கு, நாங்க இருந்த இடத்துக்கு விட்டாக் காணும். எங்கட ஊரில் ஒரு பழங் கிணறு இருக்கு. அந்தப் பழங் கிணத்துத் தண்ணியைக் குடிச்சா பத்துக் கறியும் சோறும் சாப்பிட்ட மாதிரி இருக்கும். எங்கட பெரிசுகள் பழங்கிணத்துத் தண்ணி வேணும் குடிக்கிறதுக்கு எண்டு கேட்பினம். நாங்க எங்க போறது. அப்படிக் கேட்டவை இறந்தும் போயிற்றினம். அதுல என்ர கணவரும் ஒராள், அந்தப் பழங்கிணத்துத் தண்ணி தரச் சொல்லி அவர் கேட்க வேற தண்ணிதான் நாங்க பருக்கின்னாங்க... பழைய நினைவுகள் அற்றுப் போகாமல் இருக்கு, எங்களுக்கு அந்த ஆசைகள் இருக்கு, எனியும் போய் சாமி, குரக்கன் செய்து சாப்பிட வேணும் எண்ட எண்ணங்கள் இருக்கு"

தமது இறுதிக் காலத்திலாவது தமது ஊரில் வாழ வேண்டும், ஊரைப்பார்க்க வேண்டும், ஊருக்குப்போக வேண்டும் என்ற ஏக்கம், தவிப்பு வேதனைக்குரியது. அந்த ஏக்கத்தைக் கொட்ட சந்தர்ப்பம் சூழல் வாய்த்தபோது அவர்கள் கொட்டியது ஏராளம்.

அவலம் என்னவெனில், ஆக்கிரமிப்பாளர் அடிமைப்படுத்தும் மக்களின் பண்பாட்டு விழுமியங்களை - நீண்டகால அடிப்படையில் சிதைப்பதையே நோக்கமாகக் கொள்வர். அவ்வாறான நோக்கம் எமது மண்ணிலும் எமது கண்முன்னே நிறை வேற்றப்பட்டுள்ளது.

மனித உறவுகள் சிதைக்கப்பட்டு மானுட தர்மம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. எமது மண்ணில் இடம்பெயர்க்கப்பட்ட மக்களின் உணர்வுகள் பொருமிக்கொண்டுள்ளன. அந்தப்பொருமலின் வெளிப்பாடுகள் இதோ இங்கே...

01) இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம் ஒன்றில் அந்த மக்களால் முகாம் நடவடிக்கைகளை கவனிக்க தெரிவு செய்யப்பட்ட தலைவர் கூறுகிறார்.

"எத்தனை பேச்சுவார்த்தை வைச்சும் முடியுதில்லையே எங்கட போராட்டம், நாங்கள் பட்டகஷ்டம். ஐயோ நான் எவ்வளவு கேவலப் பட்டிருக்கிறன். தலைவராய் இருக்கிறதும் காணும் எல்லாப் பிள்ளைகளிட்ட மரியாதைகெடுகிறதும் காணும். சிலபேர் பழைய பண்பாட்டில இருக்கிறாங்க. சில பெடியன்கள் சண்டித்தனம் பண்ணிக்கொண்டு இருக்கிறாங்கள். அவைக்கு ஒண்டும் விளங்காம சண்டைக்குப் போறது. அடிக்கப்போறது, பள்ளிக் கூடத்துக்குப் போனா மேஸ், சப்பாத்து இல்லையென்று திருப்பிவிடுறாங்க. மன்னிப்புக் கேட்டுத்தான் பள்ளிக் கூடத்திற்கு விடுறனாங்க...

02)"நாங்கள் ஊருக்குப் போகவேணும எண்டுதான் விரும்புறம். "எங்கட ஊருக்கு எங்கள அனுப்பி விட்டாக் காணும்" ஏன் ஊருக்கு அனுப்பி விட்டாக் காணும் என்று சொல்லுறீங்கள்?...

"எங்கட ஊரில போய் நிம்மதியாய் வாழுறதுக்கு... நாங்கள் நிம்மதியாய் வாழவேணும், பசிபட்டினி இல்லாமல் நிம்மதியாய் இருக்க வேணும்.

பலர் இந்த மக்களிடம் வருகிறார்கள் இவர்களின் உண்மையான தேவை என்ன என்பதை அறிந்து கொள்ளும்திறன் இல்லாமலே ஏதேதோ உதவிகள் புரிவார்கள். ஆனால், இவர்களின் ஏக்கங்களைப் புரிந்துகொள்வதில்லை.

வாறவை என்ன தாறவை?...

"அவை என்ன இந்தப் பாயை, ஏதாவது உடு புடவையை,, சட்டி பானையைத் தருவினம்".

"ஒரு மாசத்தால உங்கள விடுவம் எண்டு சொல்லுவினம், வெள்ளைக்காரன்கூட ஒரு மாசத்தால விடுவம் எண்டு சொன்னது... பிறகென்ன அவையைக்காணக் கிடையாது"

இது இவ்வாறிருக்க கொழும்பிலுள்ள அரச சார்பான துரோகிகள் சிலர்... "மக்களுக்கு ஊருக்குப் போகவிருப்பமில்லை புலிகள்தான் அவைபோகப் போகினம், போகப்போகினம் என்று சொல்லுகினம்" என்று முழுத்துரோகத்தனமான கதைகளைக்கதைத்துக் கொண்டு தமது சுயவாய்ப்புக்களைத் தேடுகின்றனர்.

''நாங்கள்வாறவையிட்டை எல்லாம் இதத் தான்சொல்லுறம். நாங்க ஊருக்குப் போக வேணுமெண்டு". அவை 'இந்தா ஒரு மாதத்தால இரண்டு மாதத்தால விட்டிருவம் எண்டு சொல்லுவினம்'.

முக்கியமாக இடம் பெயர்க்கப்பட்ட மக்களின் கல்விநிலை மோசமாக்கப்பட்டுவிட்டது. இளம் சந்ததி சீரழிந்து தெருவுக்கு வருகிறது.

உ+ம் :-

ஒரு தென்னங்குருத்து எடுத்து பிள்ளையின் ஒப்படைக்குக் குடுக்க முடியாதநிலை. "எங்கடபிள்ளைகள் படிக்கவேணும், இங்க இருந்து சரியாய்க் கஷ்டப்படுகிறம், எங்கட பேரன் பள்ளிக்கூடம் போயிற்று வந்து படிக்கிறதுக்கு தென்னங்குருத்து வேணும் எண்டார். அப்ப நாங்கள் இரண்டு மூன்று இடத்தில வெட்டுறதுக்குக் கேட்டம். அவை விடமாட்டம் எண்டிட்டினம். நான் அழுதும் போட்டன். பிறகுநான் கூட்டிக்கொண்டு வந்து டீச்சரிட்ட விடுறன் எண்டு சொல்ல அவர் கேட்கையுமில்லை. அழுதுகொண்டு தான் போனவர். எங்கட ஊர் என்றால் பிரச்சினை இல்லைத்தானே. ஒண்டை வெட்டிக் குடுத்திருப்பம்". நேசம்மா, 67 வயது.

எமது பண்பாட்டு சீரழிவு என்பது நாங்கள் நினைத்துப் பார்க்காத பல வழிகளிலும் வடிவங்களிலும் நிகழ்ந்துள்ளது.

உ+ம்:- ஒரு அம்மா "எங்கட வீடுகளுக்கை நாய் புகுந்த மாதிரி எல்லாரும் நுழைவினம் அந்தளவுக்கு கேவலமாய்ப் போச்சுவாழ்க்கை" என்று குறிப்பிட்டார்.

எமது முதியவர்கள் இழந்து போன நிலத்தை நினைத்து ஏங்கும் நாட்கள் தொடர்கிறது. சொந்த மண்ணில் சாகவேண்டும் என்ற அவர்களின் இறுதி ஆசை இளைஞர்களின் நெஞ்சில் கொதிப்பை உண்டு பண்ணுகிறது. அந்தக் கொதிப்பு தமது பேரனைப் பேத்தியை, தாயைத் தந்தையைத் தூக்கிச் சென்றாவது சொந்த மண்ணில் ஒரு பொழுதேனும் விடவேண்டும் என்று நெருப்பாய்க் கனல்கிறது.

செ.விந்தன்

# உக்ரைனின் பக்கம் திரும்பும் சர்வதேசத்தின் பார்வை —

ஐங்கரன்

சர்வதேசத்தின் கவனம் முன்னாள் சோவியத் யூனியனின் குடியரசான உக்ரைன் பக்கம் திரும்பியுள்ளது. ஊடகங்களும், அரசியல் தலைவர்களும் அப்பிரச்சினையை பாரிய பிரச்சினையாக மாற்றுவதில் முனைப்புக் கொண்டிருப்பதுபோல் தெரிகின்றது. வெளிப்படையாகவே உக்ரைன் சனாதிபதித் தேர்தல் இரு பிரிநிலை யதார்த்தத்தை உருவாக்கிவிட்டது. ஐரோப்பிய யூனியன் ஆதரவு என்றும் ரஷ்சிய ஆதரவு என்றும் உக்ரைன் அரசியலை பிளவுபடுத்தியுள்ளது. இதனை விரிவாக பரிசீலிப்போம்.

முன்னாள் சோவியத் காலத்தில் பலமுக்கியத்துவத்தைபெற்ற உக்ரைன் இன்றும் நிலப்பரப்பில் மூன்றாவது குடியரசாக விளங்குகிறது. சோவியத்தின் தானியக்களஞ்சியமென அழைக்கப்பட்ட உக்ரைன் பல இராணுவ அண்டவெளி தொழில்நுட்ப நிலை'ங்களைக்கொண்ட மையமாக விளங்கியபிரதேசம் இயல்பாகவே சோவியத் உடைந்த போது தனிநாடாக அங்கீகரிக்கப்பட்ட குடியரசு தற்போதைய நெருக்கடிவரை பாரிய



பிரச்சினைகளின்றி சுமூகமான அரசியல் போக்கைகொண்டிருந்தது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் ஆளும்கட்சியின் பிரதமர் ஜானுகோஷிங் சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதாக வெளிவந்த செய்தியை அடுத்து நெருக்கடி ஆரம்பிக்கப்பட்டது. இதனை எதிர்த்து போட்டியிட்ட விக்டர் யுஷ்செங்கோரின் ஆதரவாளர்கள் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அரச கட்டடங்களையும், உக்ரைன் சுதந்திர சதுக்கத்தையும், நாடாளுமன்ற வெளிப்புறத்தையும் நோக்கி படையெடுத்து ஆர்ப்பாட்டம் நடாத்திவருகின்றனர். பல நாட்களாக விக்டரின் ஆதரவாளர்கள் தேர்தலில் குழறுபடி நடந்ததென கூறிவருவதுடன் தேர்தலை ரத்துச்செய்ய வேண்டும், அல்லது விக்டர் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டுமென கூறிவருகின்றனர்.

இதற்கு பதிலளித்த ஜானுகோவின் ஆதரவாளர்கள் தமது வேட்பாளரை பதவி ஏற்காது தடுத்தால் உக்ரைனின் கிழக்குப் பகுதியை பிரித்து சுய ராட்சியம் அமைக்கப்போவதாக கூறிவருகின்றனர். இந்த இழுபறியை நீதிமன்றமும் உடனடியாகத் தீர்க்கமுடியாதுள்ள போதும் மீள் தேர்தலுக்கான வாய்ப்புக்களே- அதிகம் உண்டு என்பது இப்பத்தி எழுதும்வரையும் உள்ள நிலையாகும்.

இவ்வாறு உக்ரைன் அரசியல் நிலை திடீரென கொதிநிலையை அடைந்தமைக்கான காரணம் பற்றி நோக்குவது அவசியம். பொதுவாகவே கூறப்படுவது போல் மேற்குக்கும் ரஷ்சியாவுக்குமான இழுபறிதான் குழப்பத்திற்குக் காரணமா என்பதை நோக்குவோம்.

இங்கு மேற்கு என்பது ஐரோப்பிய யூனியனையே அதிகம் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஐரோப்பிய யூனியனின் ஆதிக்கம் கிழக்கு ஐரோப்பாவையும் தாண்டி சோவியத்தின் முன்னாள் குடியரசுகளுக்குள் நகர்ந்துவிட்டது. பல புதிய நாடுகள் ஐரோப்பிய யூனியனில் அங்கம் பெற்றுவிட்டன. இதில் ரஷ்யாவை அவை பெரியளவில் கருத்தில் கொள்ளாது விட்டாலும் உக்ரைன் ரஷ்சியாவுக்கு எப்போதும் வலுவான ஒத்துழைப்பு நாடாகவே செயல்பட்டு வந்துள்ளது. பைலோ ரஷ்சியாவும், உக்ரைனுமே ரஷ்சியாவின் இருப்புக்கு பாதுகாப்பான அரசியல் பொருளாதார, இராணுவ, தொழில்நுட்ப சக்தியாக உள்ளன. அவ ற்றை ஐரோப்பிய யூனியன் அடைவதென்பது கடினமானதாக ரஷ்சியா ஆக்கிக்கொண்டாலும் தேர்தல்களும் ஐரோப்பிய யூனியனுக்கு ஆதரவான சக்திகளும் அவர்களுக்கு பின்னாலுள்ள ஆதரவு மக்களும் நிலைமையை மாற்றம் செய்யக்கூடியவர்களாகவே உள்ளனர். எனவே ஐரோப்பிய யூனியன் தனது அங்கத்துவத்தை விரிவாக்குவது மட்டுமன்றி, ரஷ்சியாவின் மீளமைப்பையும் முடிவுக்குக் கொண்டுவர முயன்றுள்ளதாகவே கூறமுடியும்.




ஏற்கனவே நேட்டோ அமைப்பு மிகத்தீவிரமாக வளர்ந்து படிப்படியாக இப்பிரதேச நாடுகளுக்குள் தனது செல்வாக்கை பரப்பிவிட்டது. இராணுவரீதியில் நேட்டோவின் பங்களிப்பு இப்பிரதேசத்தின் மத்தியில் ரஷ்சியாவின் எழுச்சியை மட்டுமல்ல; சாதாரண இறைமையுடைய அரசாக அமைவதுகூட கடினமானதாக மாறிவிட்டது. நேட்டோவின் நகர்வில் அமெரிக்கா கவனமெடுத்தது போல் பொருளாதார விடயத்தில் ஐரோப்பிய யூனியன் செயல்பட்டு வருகிறது. ஆனால் இதனை பொருளாதார ஆதிக்கமாக மட்டும் பார்த்துவிடமுடியாது. ஐரோப்பிய ஐக்கியத்துக்கு பின்னர் பொருளாதாரப்போட்டி காணப்பட்ட தென்பது உண்மையாகவே இருந்தது. சந்தைக்கான போட்டித் தன்மையில் முன்னணி வகுத்த ஐரோப்பிய யூனியன் அதற்கான தயார்ப்படுத்தலை இதுவரை சாத்தியப்படுத்தி வந்தது. சந்தையூடாக பொருளாதார குவிவை சாத்தியப்படுத்தி அது சார்ந்த உலகப் பொருளாதாரக் கட்டுமானத்தை நிறுவ முயன்றது. அதில் கணிசமான வெற்றியையும் ஐரோப்பிய யூனியன் கடந்தகாலங்களில் அடைந்தது 27 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் விரிவான பொருளாதார குடும்பமாக விஸ்தரித்துள்ளது.

இதன் போக்கில் அண்மைக்காலத்தில் அரசியல் இராணுவ நகர்வுகளையும் நிலைப்படுத்த ஆரம்பித்துள்ளது போல் தெரிகிறது. குறிப்பாக பொஸ்னியா விவகாரத்தில்



ஐரோப்பிய யூனிய நாடுகள் நேட்டோ அமைப்பினூடாக முன்னெடுத்த விடயங்களும் நடவடிக்கைகளும் அதன் அரசியல் இராணுவப் பரிமாணத்தின் முதலாவது அம்சமாக அமைந்தது. தற்போது உக்ரைன் விவகாரத்தில் ஐரோப்பிய யூனியன் எடுத்து வரும் அதிரடி நடவடிக்கைகள் அதன் அரசியல் பரிமாணத்தை மேலும் தெளிவுபடுத்துகிறது. அரசியல் ரீதியில் ஐரோப்பிய யூனியன் முன்னெடுக்கப்போகும் விடயங்களின் அடுத்த பரிமாணமாக இதனைக் கொள்ளலாம். இது அதன் நீண்டதூர நோக்கு, இலக்கை காட்டுகின்றது. உக்ரைன் உடையாமல் அதன் அங்கத்துவத்தை பெறுவதே ஐரோப்பிய யூனியனின் நோக்கம் என்பது விக்டரின் கருத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இதே போன்று சைபிரஸ் அரசியலையும் ஐரோப்பிய யூனியன் கையாள முயன்றது. ஆனால் இரு சைபிரஸ்சையும் ஒன்றாக்க முடியாத சந்தர்ப்பத்தில் தனித்தனி அலகுகளை அங்கீகரித்து ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடாக மாற்றிவிட்டது. அந்த வகையில் உக்ரைனையும் கையாள முயற்சித்தால் உக்ரைன் உடைவு தவிர்க்க முடியாததாகும்.

உக்ரைன் ஐரோப்பிய யூனியன் கட்டுப்பாட்டில்வரும் வரையும் அல்லது மேற்கிடம் வரும்வரையும் ரஷ்சியாவை முழுமையாக ஆட்டங்காண வைக்கமுடியாது. இது மேற்குக்கு வெற்றிதருமாயின் இப்பிராந்தியம் முழுமையாக மேற்கிடம் அடிமைப்பட்டுவிடும். ரஷ்சியாவின் ஆட்சியாளர்களுக்கு பெரும் நெருக்கடியான விடயமாகவே உள்ளது. இது சீனாவையும் பாதிக்கும் அரசியல் என்பதை நிராகரிக்கமுடியாது. ஆனால் ரஷ்சியாவின் கொள்ளைகளும் இயல்பான அதன் முக்கியத்துவமும் ஐரோப்பிய யூனியனால் முறியடிக்கபட்டுவிடும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை.

எனவே ஐரோப்பிய யூனியன் தனது விஸ்தரிப்புக் கொள்கையை ஆரம்பித்துள்ளது. கிழக்கு ஐரோப்பாவை கடந்து ரஷ்சியக் குடியரசுகளுக்குள் புகுந்துள்ள ஐரோப்பிய யூனியன் தனது இயல்பான போக்கை வெளிப்படுத்தத்தொடங்கிவிட்டது எனலாம். இத்தகைய நடவடிக்கை ஊடாக ஐரோப்பிய யூனியன் அமெரிக்காவுக்கும் பிற



சக்திகளுக்கும் தனித்துவமான எச்சரிக்கை ஒன்றை வழங்கியுள்ளது. எனவே கூட்டாக மேற்கு ரஷ்சியா மோதல் எனநோக்கினாலும் அமெரிக்காவின் பங்கையும் முதன்மையையும் மீறி ஐரோப்பிய யூனியன் செயல்பட்டுவருவது முதல்தடவை என்பதோடு, ஆபத்தானதும் எச்சரிக்கைக்குட்பட்டது என்பதும் கவனத்திற்குரியது.

எனவே ஐரோப்பிய யூனியனும் அரசியல் ஆதிக்கத்துக்கான நடவடிக்கையில் இறங்கிவிட்டது என்பதையே இது காட்டுகின்றது.

# தோல்வியில் முடிந்த முயற்சி...




மாவீரர் தினத்தை எவ்வகையிலேனும் குழப்பி அதன் புனிதத்துவத்தைச் சிதைத்துவிட சிங்கள ஆளும்தரப்பு தீவிர முயற்சிகளை மேற்கொண்டதை கடந்த வாரத்தில் காணக்கூடியதாக இருந்தது. தமிழர் தாயகப் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து மாவட்டங்களிலும் ஏதோ ஒரு வகையில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டமையை புரிந்துகொள்ளமுடிந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு மாவீரர் தின நிகழ்வுகளில் தமிழீழத் தேசியக் கொடியேற்றலை ஒரு சாட்டாக அதுகொண்டது. ஆனால் அது ஆளும் தரப்புக்கு தேடிக்கொண்ட காரணமேயொழிய அதுதான் உண்மையான காரணம் என்பதுமல்ல. ஏனெனில் மாவீரர் எழுச்சிதினங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பதாகவே வல்வெட்டித்துறையில் இரு இளைஞர்களைப் படுகொலைசெய்து குழப்பங்களை ஏற்படுத்த அரசதரப்பு முயன்றது. ஆனால் மக்கள் அதனைப் புரிந்துகொண்டு பொறுமை காத்ததுடன் மாவீரர்நாட்களை எழுச்சியுடன் நடத்தி முடித்தனர்.

தேசியக்கொடியேற்றும் நிகழ்வானது சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் அரசியல் பணிக்குச் சென்றநாள் முதலே இடம் பெற்றுவரும் நிகழ்வாகும். ஆனால் அப்பொழுது அதனை எவரும் எதிர்க்கவில்லை. அதனை போர் நிறுத்த மீறல் என்றும் கூறவில்லை.

அதேவேளை தேசியக் கொடியேற்றலை யுத்தநிறுத்த ஒப்பந்தம் தடைசெய்யவும் இல்லை. அது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிபுரிய இருக்கும் ஒப்பந்த விதியின் அடிப்படையில் தவறானதும் அல்ல. விடுதலைப் புலிகள் அதனை தனி ஒரு நிகழ்வாகவும் மேற்கொள்வதில்லை. தமது அரசியல் பணிகளின் ஓர் அங்கமாக நடைபெறும் பொது வைபவங்களிலேயே முதல் நிகழ்வாக தேசியக்கொடியை ஏற்றுகின்றனர்.

அண்மைக்காலமாகத்தான் இதனை ஒருபிரச்சினையாக்கி நிகழ்வுகளை- புலிகள் நடத்தும் நிகழ்வுகளை மட்டுமல்ல தமிழ் மக்களின் பொது நிகழ்வுகளிலும் ஆரம்பத்திலேயே குழப்பம் விளைவித்து நெருக்கடிகளை ஏற்படுத்தி அந் நிகழ்வுகளைச் சோபை இழக்க வைக்கும் முயற்சிகளில் அரசதரப்பு ஈடுபடுகிறது.

மாவீரர் தினநிகழ்வுகளுக்கு முன்னர் புலிகளின் மாவட்டச் செயலகங்கள் இராணுவத்தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந் நிகழ்வுகளைக் குழப்பாதிருக்க உறுதிமொழிகளைப் பெற்றிருந்தன. வவுனியாவில் தேசியக் கொடியை அரசகட்டடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஏற்றலாம் என இராணுவத்தரப்பு இணங்கியிருந்தது. இவை எல்லாம் நிகழ்வுகள் தொடங்கிய பின்னர் கவனத்தில் கொள்ளப்படாத விடயங்களாகின. பின்னர் மாவீரர் நாட்களில் நடைபெற்ற அரசதரப்பின் குழப்பங்களில் மாவீரர் பந்தல்கள், அலங்காரங்கள் என்பன அவர்களால் அழிக்கப்பட்டமையானது படையினரோ அல்லது அரசாங்கத்தரப்போ எதிர்பார்த்த விளைவை ஏற்படுத்தவுமில்லை ஏற்படுத்தப்போவதுமில்லை.

இவ்வாறான எதிர் நடவடிக்கைகள் மேலும் மக்களை உணர்ச்சிவசப்படுத்தவும் அரசாங்கத் தரப்புக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டவுமே பயன்படும் என்பதை புரிந்துகொள்ள இவர்கள் மறுப்பதுதான் இலங்கையில் அமைதி நிலைமை தோன்றிவிடாமல் இருப்பதற்கு முக்கியமான காரணமாகும்.

இதனையும்விட ஒருபடி மேலே போய் அமைதியாக இருந்த திருகோணமலையில் ஜே.வி.பி. “உண்மைவீரர் தினம்” கொண்டாடப் போய் அங்கு மேலும் குழப்பங்களை ஏற்படுத்த முயன்றிருக்கிறது. திருமலையில் மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகளுடன் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்ததின நிகழ்வுகளையும் நிகழ்த்தவிருந்த தமிழ் மக்களை படையினரும் காடையரும் சேர்ந்து தாக்கியதுடன் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு பல்வேறு இடையூறுகளையும் விளைவித்துள்ளனர். ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு மாவீரரின் திருவுருவப் படங்களையும் பதாகைகள், அலங்காரங்களையும் எரித்துள்ளனர்.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியிலும் மாவீரர்தின நிகழ்வுகளில் பலலட்சம் மக்கள் பங்கேற்றனர். அவர்களுக்குத் தமது இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்தினர். அத்துடன் தமிழீழத் தேசியத்தலைவரின் ஐம்பதாவது பிறந்ததினத்தையும் மக்கள் தமது உணர்வுகளையும் அவர் மீதான பற்றையும் வெளிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக செயற்படுத்தியிருக்கின்றனர்.

உண்மையில் தமிழீழத் தேசியத் தலைவர் மீதும், மாவீரர்கள் மீதும், போராளிகள் மீதும், விடுதலைப் போராட்டத்தின் மீதும் தமிழ் மக்கள் கொண்ட பற்றானது முன்னர்பல முறை அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. தமிழர் தாயகப்பகுதியில் மட்டுமல்ல, உலகத்திலுள்ள அனைத்து நாடுகளிலுமுள்ள தமிழர்கள் பல்வேறு நிகழ்வுகள் மூலம் இதனை வெளிப்படுத்தத் தவறவில்லை.

இது இம்முறை நடைபெற்ற மாவீரர்தினமும் தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினமும் மக்களால் எவ்வாறு கொண்டாடப் படப்போகிறது என்பதை ஆளும்தரப்புக்கு முன்கூட்டியே வெளிப்படுத்திவிட்டது. அதனால் பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் கொண்டே அவற்றைக் குழப்ப ஆளும் தரப்பு தீவிர முயற்சி எடுத்து அதில் தோல்வியும் கண்டுள்ளது.

அதேவேளை ஆளும் தரப்பு எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை உணர்ந்துகொண்ட தமிழ் மக்கள் அதற்கு ஈடுகொடுத்து சூழ்ச்சி களை முறியடித்து வெற்றிகள் காட்டியிருக்கின்றனர்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# தமிழர் வாழ்வை இருட்டில் தள்ள முயலும் அரசு


இன்றைய இரண்டரை வருடகால சமாதான காலத்தில் எமது மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் இதுவரையில் எட்டவில்லை. தமது வாழ்விடங்களை விட்டு புலம்பெயர்ந்த உறவுகளும் தாயக உறவுகளும் இதுவரையில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத அவலவாழ்க்கையில் தத்தளித்துக் கொண்டு அகதிமுகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், நெருக்கடிகளின் மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். எமது மக்கள் தமது வாழ்விடங்களில் சென்று குடியமர அனுமதிப்பதில் அரசிற்கு எந்தவிதமான இழப்புக்களும் ஏற்படப்போவதில்லை. ஆனால் சிறிலங்கா அரசும் ஆட்சியாளர்களும் இனவாதசக்திகளும் தமிழர்வாழ்வை இருட்டில் தள்ளிவிடுவதில் முனைப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

இன்றும் தமிழர்தாயகத்தில் 173 நலன்புரி நிலையங்களில் 11166 குடும்பங்களைச்சேர்ந்த 44246 அங்கத்தவர்கள் நலன்புரி நிலையங்களில் முடக்கப்பட்டுள்ளனர் இவர்களின் கல்வி, சுகாதாரம், என்பன பாதிக்கப்பட்டதுடன் தொழில் வாய்ப்புகளும் முடக்கப்பட்டு பொருளாதாரம் பறிக்கப்பட்டுள்ளது. இவை தவிர உள்ளூரில் இடம்பெயர்ந்து தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ளூரில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் ஏனைய இடங்களிலும் உறவினர் வீடுகளில் என 71521 குடும்பங்களைச்சேர்ந்த 287081 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழந்து வருகின்றனர். தற்பொழுது பெய்துவரும் பருவமழையில் பாதிக்கப்படுபவர்களும் இவர்களே.

இதுவரையில் யாழ்ப்பாணத்தில் 61223பேரும், முல்லைத்தீவில் 60113பேரும், கிளிநொச்சியில் 33584 பேரும் மன்னாரில் 33229பேரும், வவுனியாவில் 42646பேரும், திருகோணமலையில் 20183 பேரும், அம்பாறையில் 8527பேரும் இடம் பெயர்ந்துள்ளனர் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றபோதிலும் இவர்களில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கையை எடுத்துப்பார்ப்போமானால்,

யாழ்ப்பாணத்தில் 17145 பேரும் கிளிநொச்சியில் 8047பேரும், முல்லைத்தீவில் 14615 பேரும், மன்னாரில் 8432 பேரும், வவுனியாவில் 10978பேரும், திருகோணமலையில் 4039பேரும், மட்டக்களப்பில் 6526 பேரும், அம்பாறையில் 1704 பேரும் தமது சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பியுள்ளனர் என்றாலும் யுத்தநிறுத்தத்தின் பின்னர் தமது சொந்த இடங்களிற்கு திரும்புவோரில் பெரும்பாலானோர் தமது மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனரே தவிர தமது சொந்த வீடுகளுக்கு செல்லவில்லை என்பதும் உண்மை.

எத்தனையோ, குட்டிக் கிராமங்கள் பழமைவாய்ந்த குடியிருப்புக்கள் இராணுவ ஆக்கிரமிப்பினால் அழிக்கப்பட்டுள்ளன. இவைதவிர இடப்பெயர்வுகள் மூலம் எழுச்சி கொண்ட குட்டிக்கிராமங்கள் கவனிப்பாரின்றி அழிவடைந்து செல்கின்றன. யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஏ-9 சாலையை மையமாகக்கொண்ட கனகராயன் குளம் புளியங்குளம் மாங்குளம் ஆகிய, இடங்களை இராணுவம் ஆக்கிரமித்தவேளை, அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் வன்னியின் பின்தங்கிய கிராமங்களில் தற்காலிகமாகக் குடியேறியதையடுத்து இக்கிராமங்கள் எழுச்சி, அடைந்து காணப்பட்டன. தற்பொழுது இப்பகுதிகளில் தற்காலிகமாக குடியிருந்த மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் செல்ல இக்கிராமங்கள் இன்று அழிவடைந்து செல்கின்றன. அந்தவகையிலே மாங்குளம் துணுக்காய் வீதியையும் ஏ-9 சாலை கொக்காவில் துணுக்காய் பகுதியினையும் இணைக்கும் வகையில் தேறாங்கண்டல் ஐயன்கன்குளம், இளமருதங்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் கொக்காவில் ஆகிய விவசாயக்கிராமங்களை எடுத்துக்கொள்வோமாயின் இக்கிராமங்களின் நிரந்தரக்குடியிருப்பாளர்களை விட மேலதிகமாக இருந்த குடியிருப்புக்கள் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் இக்கிராமங்களுக்கான, .மருத்துவ வசதிகள், கல்விவசதிகள், சிதைக்கப்பட்டன. இப்பகுதிகளில் இருக்கின்ற ஆரம்பப் பாடசாலைகளில் பெரும் ஆசிரியர்கள் பற்றாக்குறை, அதிபருடன் ஓரிரு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இப்பாடசாலைகளில் மாணவர் தொகையை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரே தவிர, பாடரீதியாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இக்கிராமங்களில் உள்ள மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருகின்றமையால் இப்பகுதியில்



உள்ள மாணவர்களின் கல்வியை கருத்தில்கொண்டு ஓரளவு வசதி படைத்தவர்கள் வேறு இடங்களுக்கு நகர்ந்துசெல்கின்றனர். அத்தோடு குடும்பங்களே நகர்களை நோக்கி நகரும் நிலையில் இக்கிராமங்கள் அழிவடைந்துசெல்கின்றன. இக்கிராமங்களில் வாழுகின்ற வறிய குடும்பங்களைச்சேர்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு செல்லமுடியாத நிலையில் உள்ளனர். இக்கிராமங்களில் 3000இற்கு மேற்பட்ட குடும்பங்கள் 1996முதல் 2000 வரையும் வாழ்ந்து வந்துள்ள நிலையில் தற்பொழுது 500 வரையான குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். இன்றைய சூழலில் இவர்களுடைய மருத்துவம், கல்வி, போக்குவரத்து என்பன புறக்கணிக்கப்பட்ட நிலையில் இன்றும் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்ளமுடியாது அவலவாழ்வு வாழ்ந்துவருகின்றனர்.

**சு.பாஸ்கரன்**

# தேசியத்தலைவரின் கேள்விக்கு சிங்கள தேசத்தின் பதில் என்ன?

கடந்த மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையில் முக்கிய அம்சமாக தமிழர்களின் பிரச்சினை தீர்த்துவைக்க சிங்கள பெரும்பான்மை கட்சிகளிடம் உள்ள திட்டத்தை உத்தியோக பூர்வமாக பகிரங்கப்படுத்துங்கள் எனக்கேட்டுள்ளார். அத்துடன் குறுகிய காலத்துக்குள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வருமாறும் இலங்கை அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை கொடுக்கவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். குறுகிய காலத்துக்குள் இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு வராவிடில் நாம் எமது சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறுவழியில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தென்னிலங்கை அரசியல் களத்தில் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளதுடன், சமாதான வேசம் தரித்த சந்திரிகாவின் முகத்திரையை கிழித்துள்ளது. சர்வதேசத்திற்கும் உண்மைநிலையை உணர்த்தியுள்ளது. அந்த வகையில் மாவீரர்தின உரையில் தேசியத்தலைவரால் இலங்கை அரசியல் கட்சிகளிடம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க உங்களிடம் என்ன திட்டம் இருக்கிறது அதனை பகிரங்கமாக வெளிப்படுத்துங்கள் என்ற கேள்விக்கு இலங்கை அரசியல் கட்சிகளிடமிருந்து என்ன பதில் கிடைக்கும்? இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் பேச்சுக்கு அரசு வருமா?

இலங்கையின் அரசியல் கட்சிகளின் தற்போதைய நிலைப்பாடு உங்கள் பார்வையில் எவ்வாறு உள்ளது என்ற கேள்விகளுடன் வன்னிப்பகுதியின் சில சமூக முன்னோடிகளை சந்தித்தோம். அவர்கள் எங்களுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் பின்வருமாறு;




அ.சற்குணதாஸ்,
சமாதான நீதவான்,
புதுக்குடியிருப்பு

எந்தவொரு அரசியல் கட்சிகளிடமும் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு யோசனை இல்லை. ஏனெனில் இலங்கையில் 50வருட இனப்பிரச்சினை வரலாற்றில் எந்தவொரு கட்சியும் தமிழ் மக்களுக்கு இதைத்தான் தருவோம் என்று கூறியதில்லை. ஏன் இலங்கையில் தமிழர்களுக்கு பிரச்சினை உள்ளது என்பதைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைய நிலையில் எந்தவொருகட்சியும் இப்பிரச்சினையை தீர்க்கக்கூடிய பலமான நிலையில் இல்லை. தற்போது ஆட்சியில் இருக்கும் சனாதிபதிக்கு இப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இவர் நினைத்திருந்தால் ஒருதலைப்பட்சமாக விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம் செய்திருந்த வேளை தானும் நல்ல சமிக்ஞையை காட்டி பிரச்சினையை தீர்க்கமுற்பட்டிருக்கலாம். ஏனெனில் அப்போது இவருடைய கட்சி மாத்திரம் ஆட்சியில் இருந்தது. அவ்வேளை இவர் தீவிரமாக யுத்தத்தில்தான் ஈடுபட்டார். அடுத்து ரணிலால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கலாம். மாறாக அமைச்சுக்களைப் பறித்தெடுத்து ஆட்சியை கலைத்தார். அடுத்து இவர் உண்மையான சமாதான விரும்பியாக தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க விரும்பியிருந்தால் இனவாத, பழமைவாத கட்சியான ஜே.வி.பியுடன் கூட்டிணைந்திருக்கமாட்டார். அவருடைய ஒரே நோக்கம் ஆட்சியே எனவே அவர் ஆட்சிக்காக எதையும் செய்வாரே தவிர சமாதானம் மட்டும் செய்யமாட்டார். உலக நாடுகளை ஏமாற்ற போலியாக அறிக்கை விடுவார். புலிகள் யுத்தத்தை விரும்புகிறார்கள் என்று கூறுவார். உலகை ஏமாற்றுவார். இவ்வாறான வர்களிடமிருந்து தமிழ் மக்களுக்கான உண்மையான தீர்வுத் திட்டமெதையும் எதிர்பார்க்கமுடியாது.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச சந்திரிகா அரசாங்கம் தயாராக இல்லை. ஏனெனில் அதில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி இதை கடுமையாக எதிர்க்கிறது. அதை மீறி செய்யும் துணிவு சந்திரிகாவிடம் இல்லை. அப்படித் துணிந்தால் ஜே.வி.பி தன் ஆதரவை விலக்கிக் கொள்ளும் இதனால் அரசு கவிழ்ந்துவிடும். எனவே ஜே.வி.பி செய்யவிரும்புகிற யுத்தத்தைத்தான் சந்திரிகாவும் விரும்பவேண்டி ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரையில் இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் அனைத்துக் கட்சிகளும் ஒரே கொள்கையில் தமிழ்மக்களின் பிரச்சினையை அணுக வேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சியென்றால் அரசின் எந்த திட்டத்தையும் எதிர்ப்பது என்பதைவிட்டுவிட்டு அதாவது தமிழ்மக்கள் மட்டும் என்று பார்க்காமல் இந்தத் தேசத்தில் வாழுகின்ற அனைத்து மக்களும் கஷ்டங்களை எதிர் நோக்கக்கூடாது என்றவகையில் அவர் சிந்தித்துக் கூறியுள்ளார். அதாவது சிங்கள அரசியல் தலைமை தமிழர்களை அணைத்து வாழவும் விரும்பவில்லை. தனித்து வாழவும் விடுவதாயில்லை என்று கூறுகிறார். அதாவது தமிழ் பேசும் மக்களும், சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என தலைவர் விரும்புகிறார். அதைத்தான் அணைத்து வாழுதல் என்று அவர் குறிப்பிடுகிறார். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்கள



**சனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒருவேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம்,தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப்பகிரங்கப்படுத்துங்கள்.** தமிழீழத்தேசியத்தலைவர்

மேதகு.வே. பிரபாகரன் மாவீரர் நாள் உரையில்...(2004)

நாட்டின் நலனை கருத்தில்கொண்டு செயற்படவேண்டும். தலைவர் கூறியது போல் எம்மை அணைத்து வாழவும் விரும்பவில்லை. தனித்து வாழவும் விடுகிறார்கள் இல்லை. எனவே இலங்கையில் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க கிடைத்த இறுதி சந்தர்ப்பத்தை இலங்கை அரசியல் கட்சிகள் கடந்த மூன்று ஆண்டுகள் வரை சரியாக பயன்படுத்த வில்லை. எனவே தனித்தமிழீழம் என்பது முடிந்த முடிவு என்பது தான் இந்த மாவீரர்கள் காட்டியவழி.



திரு. நவரட்ணராசா
தலைவர், இந்து
இளைஞர் பேரவை.

நாங்கள் கடந்த கால போராட்டங்களுக்குள் வாழ்ந்து இந்த மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்கள் என்றவகையில் இம்முறை தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையைப் பொறுத்தவரை அவர் சர்வதேச சமூகத்திடம் ஒரு முக்கிய வேண்டுகோளை விடுத்துள்ளார். இந்தநாட்டில் தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளை பெற்று தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ வேண்டுமென்ற ஒரு செய்தியையும் கூறியுள்ளார். ஆட்சியாளர்களின் கைகளில்தான் உள்ளது. எமது தலைவர் கூறியது போல் தமிழ் மக்கள் ஓர் எல்லைக்கோட்டில்தான் உள்ளனர். இன்றைய சூழ்நிலையை உணர்ந்து கதைக்கின்றதும், விடுதலையை பெறவேண்டும் என்ற ஆவலுடன் இருப்பதும் மக்கள்தான். இங்கே வசிக்கின்ற அனைத்து மக்களின் உணர்வுகளும் அப்படித்தான் இருக் கின்றது. எங்களோடு பழகிய எங்களோடு உறவாடிய பிள்ளைகள் போய்வருகிறோம் எனப் போனவர்கள் எல்லோரையும் நாங்கள் இழந்து நிற்கின்றோம். இந்தப் போராட்டத்தை உணர்ந்த மக்களாகிய எங்களுக்கு இந்த மாவீரர்களின் கனவை நனவாக்கவேண்டியபொறுப்பு உண்டு. இந்தப் போராட்டத்திற்கு தொடர்ந்தும் தோள் கொடுக்க வேண்டிய கடப்பாடும் உண்டு. ஏனென்றால் உண்மையான, நியாயமான நீதியான போராட்டம் இது.

## அருள்

இந்த வகையில்தான் தலைவர் சர்வதேசத்திடம் கோருகிறார் நீங்கள் அரசுக்கு அழுத்தத்தை கொடுங்கள் என்று. அடுத்து ஒவ்வொரு கட்சியிடமும் கேட்கிறார். பேசித்தீர்ப்பம் பேசித்தீர்ப்பம் என்று கூறுகிறீர்கள் பேசுவதற்கான அடிப்படை என்ன உங்களிடம் இருக்கிறது. உங்களுடைய உள்நோக்கம் என்ன? எந்தக்கட்சியிடம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க சரியான நியாயமான திட்டம் உள்ளது என்பதை வெளிக்காட்டுக்கள் பகிரங்கப்படுத்துங்கள் எனக்கேட்டுள்ளார். இன்றுவரை எந்தக் கட்சியும் இதற்கு பதிலளிக்கவில்லை. எனவே எந்தக்கட்சிகளிடமும் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்ற கொள்கை இருக்கவில்லை. எனவேதான் தலைவர் சொல்கிறார் குறுகிய காலத்துக்குள் இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் பேசவாருங்கள் இல்லையேல் நாம் விடுதலைப்போரை தொடர வேண்டி ஏற்படும் என்கிறார். எனவே தலைவர், சிந்தித்துத்தீர்க்கமான ஒரு நல்ல முடிவை எடுத்துள்ளார்.

அடுத்து கடந்த காலங்களில் யுத்தம் நடைபெற்றவேளைகளில் ஒரு நப்பாசை ஒன்று எங்களுடைய மனதில்கூட இருந்தது. என்னவென்றால் இந்த இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கவேண்டுமென்று அதாவது ஒரு இடைக்கால யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேசவேண்டும் என்பது ஆனால், ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேசமுன்வராத அரசுடன் நிரந்தர தீர்வு எவ்வாறு எதிர்பார்ப்பது? எனவே இன்றைய நிலையை உண்மையில் கூறுவதாயின் எங்களின் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இல்லை என்றுதான் கூறவேண்டும். எனவே மீண்டும் ஒரு யுத்தம் மூளாதிருக்கவேண்டுமாயின் அது அரசின் கைகளில்தான் இருக்கிறது. ஏனெனில் தேசியத்தலைவரின் அழைப்பை ஏற்று பேச்சு மேசைக்கு வராவிடின் அது தமிழ் மக்களை உதாசினம் செய்ததாகத்தான் கருதுவோம். எமது தலைவர் ஒரு செயல் வீரர் அவர் சொல்வதை செய்பவர் இதை அரசு நன்குணர்ந்து செயற்படவேண்டும்.



அ. கனகரட்ணம்.
கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர்
கனகபுரம்(முன்னாள் பாரதி வித்தியாலய அதிபர்)

தமிழ் மக்களுக்கு இதுதான் தீர்வு என்பதை எந்தவொரு சிங்களக் கட்சிகளும் வெளிப்படுத்தாது. அவை பௌத்த மதக் கோட்பாடு எனும் மாயைக்குள் ஊறியவை. அதைவிட தமிழர்களை அடக்கி ஆள நினைக்கின்றனவே தவிர, அவர்களுக்கான உரிமைகளை வழங்க நினைக்கவில்லை. எனவே அவைகளிடம் தமிழ் மக்கள் பிரச்சினைக்கான தீர்வு எவையும் இருக்காது.

சந்திரிகா இன்று அரசியலில் ஒரு பதவிப்பதர். ஜே.வி.பியின் கைப்பொம்மையாக உள்ளார்.


சந்திரிகா இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் பேச்சுக்கு வராவிட்டால் நிச்சயமாக யுத்தம் மூளும். ஏனெனில் என்னுடைய அனுபவத்தில் இலங்கையில் யுத்தத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான ஒரு ஏற்பாட்டுக்காலம் தான் இந்தப் பேச்சு வார்த்தை நாடகம். பேச்சு வார்த்தை எனும் பெயரில் காலம் காலமாக நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். யுத்தமே எமது விடுதலைக்கு சரியான வழி. யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள்தான். ஆனால் நாம் துன்பங்களை தாங்கித்தான் விடுதலைபெற வேண்டுமாயின் அதற்கு தயாராக வேயுள்ளோம். எனவே தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை தமிழ் மக்க ளின் உள்ளக் கிடக்கைகள் என்றால் அது மிகையல்ல. எனவே இலங்கை அரசால் எம்மீது ஓர் போர் திணிக்கப்பட்டால் நிகழ்காலத்தில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு போராடுவார்கள் என்பது திண்ணம்.

(20ஆம் பக்கம் பார்க்க..)





# ஐரோப்பிய விண்ணாய்வு மையத்தின் (ஈ-ஸா)ஸ்மாட் - 01 விண்கலம்

கடந்த திங்களன்று சந்திரனை அணுகி ஆராயத் தொடங்கியுள்ளது. திங்களன்று ஸ்மாட்-1 சந்திரனின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்துள்ளது. சந்திரனை ஆராய முன்னரும் விண்கலங்களை அனுப்பினாலும் கூட இந்த விண்கலத்தில் என்னபுதிதாக இருக்கிறது என்ற கேள்வியும் எழலாம். ஏனெனில் 12 மனிதர்கள் சந்திரனில் இறங்கி ஆய்வு செய்துள்ளனர். கடைசியாக அமெரிக்க விண்கலம் ஒன்றும் லூனா புறஸ்பெக்டர் என்ற பெயரில் சந்திரனை கடந்த தசாப்தத்தின் இறுதியில் ஆராய்ந்தது. கடந்த திங்கள் முதல் 4 நாட்களுக்கு ஸ்மாட்-1 தன் அயன் பிறப்பாக்கியிலிருந்து




அயன் கற்றையை தொடர்ந்து இயக்கியது. இதன் தனித்துவப் பணியே இதுதான். அயன் இயந்திரம் மூலம்தான் அதன் இயக்கம். இந்த அயன் இயந்திரத்தின பணியை வழமையாக ரொக்கட்களே செய்து வந்தன. ஸ்மாட்டில் அதனை அயனி இயந்திரம் செய்தது.



இதன்மூலம் சந்திரனில் இருந்து 50ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்தில் நின்ற அது 3000 கிலோ மீற்றர் உயரத்திற்கு இறங்கியது. இதன்மூலம் அது சந்திரனை 3000 கிலோ மீற்றர் முதல் 300 கிலோ மீற்றர் வரையான சுற்றுப்பாதைக்கு தன்னை சரி செய்தது. இந்தப் பாதையில் வலம் வரும் ஸ்மாட்-1 தன் ஊடுகதிர் கருவி மூலம் கற்றைகளை செலுத்தி சந்திரனின் தரையில் உள்ள மூலகங்களை கண்டறியும். பூமியின் உருவாக்கம் பரிணாமம் பற்றிய ஆய்வுக்கு இது உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் எதிர்காலத்தில் மனிதர்கள் சந்திரனில் தளம் அமைப்பதற்கான இடங்களை தெரிவுசெய்யும் பணியையும் அது செய்யும். சந்திரன் [illegible] மண் நிறைந்தது. தளம் அமைக்க தூசற்ற தரை தேவை. அதனைத்தான் ஸ்மாட்-1 செய்யவுள்ளது.

குறிப்பாக சய20 பாகை செல்சியஸ் வெப்பநிலை கொண்ட சந்திரனின் தென்துருவத்தின் பகுதியிலேயே ஸ்மாட் இடம் தேடவுள்ளது. சந்திரனின் மத்திய கோட்டுப் பகுதியில் வெப்பம் 120 பாகை செல்சியஸ் முதல் சய 170 பாகை செல்சியஸ் வரையானது. அதுடன சந்திரனின் துருவத்தில் உறைந்திருக்கலாம் என நம்பப்படும் துருவத்தில் நீர் உள்ளதா என்பதையும் அது ஆராயும். தண்ணீர் சந்திரனில் அமைக்கப் படப்போகும் தளத்தில் உள்ளவர்களுக்கு குடிக்கவும் சுவாசிக்க ஒக்சிசன் பிறப்பிக்கவும் அவசியமானது.



ஐரோப்பிய விண்ணாய்வு மையம் இ[illegible]னச்செய்ய அமெரிக்காவின் நாசா மையம் 2009இல் சந்திரனில் தானியங்கிக் கலம் மூலம் அதன் மண்ணை அள்ளி பூமிக்கு கொண்டுவரவுள்ளது.

சீனாவும் மூன்றாவது சக்தியாக சந்திர ஆய்வுக்கு தயாராகிறது. 2007இல்தான் சந்திரனுக்கு கலம் அனுப்பவுள்ளதாக சீன விண்ணாய்வு மையம் அறிவித்திருக்கிறது. அதற்கு சங்.ஈ-1 என பெயரிடப்பட்டுள்ளது. 2010இல் அது ஆளற்ற விண்கலம் ஒன்றைச் சந்திரனில் இறக்கத்திட்டமிட்டுள்ளது.

அடுத்த சக்தியாக இந்தியா தான் சந்திரனுக்கு

2007-2008இல் விண்கலம் ஒன்றை அனுப்பவுள்ளதாக பிரகடனம் செய்துள்ளது. இதற்கு இந்தியா சந்திரன்-1 என பெயரிட்டுள்ளது.

**த.அருவி**

---




# இரத்ததானம் செய்து ஒரு உயிரைக் காப்பாற்றுக!

இரத்தத்திற்கு சரிநிகரான மாற்றுப் பொருள் ஏதும் இது வரை கண்டுபிடிக்கப் படாததால், இரத்தம் தேவைப்படும் நோயாளிக்கு, வேறொருவரின் இரத்தமே கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

கடுமையான இரத்த இழப்பினால் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் ஒருவருக்காக நீங்கள் செய்யும் இரத்ததானத்தினால் அவர் உயிர் பிழைப்பார். அவருக்கு 'மறுவாழ்வு' கொடுத்த மகத்தான பெருமையும், ஆத்மதிருப்தியும் உங்களுக்குக்கிடைக்கும்.

இரத்ததானம் செய்வதால் மனித உடலிற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஏனெனில் எமது உடம்பிலுள்ள இரத்தம் நிரந்தரமானது அல்ல: தினமும் ஒரு பகுதி இரத்தம் அழியப்புதிய இரத்தம் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கிறது.

எமது உடலில் 5-6லீட்டர் இரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் 4லீட்டர் இரத்தம் எமது உடலின் தேவைக்குப் போதுமானது. ஆனால் இரத்த தானத்தின்போது அரை(1/2)லீட்டருக்கும் குறைவான இரத்தமே எடுக்கப்படுகிறது. எனவே இரத்ததானம் எமது உடலை எவ்விதத்திலும் பாதிக்காது.

அத்துடன் இரத்ததானத்தின்போது இழக்கும் இரத்தத்தை எமது உடல் இரு வாரங்களுக்கிடையில் தானாகவே உற்பத்தி செய்துவிடும்.

ஆரோக்கியமான ஒருவர் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை (வருடத்திற்கு நான்கு தடவை) இரத்ததானம் செய்யலாம்.

95இறாத்தல் நிறைக்குக் குறையாத 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட இரு பாலாரும் இரத்ததானம் செய்யலாம். ஆண்களில் 450 மீ.லீட்டரும, பெண்களில் 250 மி.லீட்டரும் பொதுவான எடுக்கப்படும்.

ஏற்கனவே கிருமி நீக்கம் செய்யப்பட்ட சுத்தமான ஊசிகள், உபகரணங்கள் மூலமே இரத்தம் எடுக்கப்படுவதால் இரத்ததானம் செய்பவருக்கு எவ்வித நோயும் தொற்றும் என அஞ்சவேண்டியதில்லை.

எயிட்ஸ்(AIDS) நோயுள்ளவர்களும், எயிட்ஸ் நோய் ஏற்படலாம் எனச்சந்தேகிக்கப்படுபவர்களும் எக்காரணம் கொண்டும் இரத்த தானம் செய்யக்கூடாது. சில வகை செங்கமாரி (Hepatitis b) நோய்க்கு ஆளானவர்களும் இரத்த தானம் செய்யக்கூடாது.

மலேரியா, நெருப்புக் காய்ச்சல், கசநோய், மேகநோய் (Syphilis) தொண்டநோ (Tonsilitis) போன்ற பல்வேறு நோய்களுக்கு ஆளானவர்கள், அநநோய் பூரணமாகக் குணமாகிய பின், ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் இரத்ததானம் செய்யலாம்.

மனித இரத்தம் 'O','A','B','AB' என்ற நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் Rh(+),Rh(-) என்ற இரு உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

எல்லா இரத்தமும் எல்லோருக்கும் பொருந்தி விடாது. உதாரணமாக '0' பிரிவினர், எல்லா பிரிவினருக்கும் இரத்ததானம் செய்யலாம். ஆனால் '0' பிரிவினருக்கு இன்னொரு '0' பிரிவினரின் இரத்தம் மாத்திரமே கொடுக்கலாம். AB பிரிவினருக்கு நான்கு பிரிவினரது இரத்தமும் கொடுக்கலாம்.

Rh(+) உபபிரிவினர் அதே உப பிரிவினருக்கே இரத்ததானம் செய்யலாம். ஆனால் Rh(-)உப பிரிவினர் RhRh(-), Rh(+) ஆகிய இரு பிரிவினருக்கும் இரத்ததானம் செய்யலாம்.

உங்கள் இரத்தப்பிரிவை (Blood Group) அறிந்து வைத்திருங்கள். ஏனெனில் ஏதாவது ஒரு அவசர நிலையில், இரத்தப்பிரிவைக் கண்டுபிடிக்க வேண்டிய கால தாமதத்தைத் தவிர்த்து, நீங்கள் இரத்த மாற்றீடு பெறவோ அல்லது இரத்ததானம் செய்யவோ முடியும். ●

# வழுக்கை விழுவதைத் தடுக்க சோயா சாப்பிடுங்கள்

தலையில் வழுக்கை விழுவதைத்தடுக்கவேண்டுமா? சோயாவை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்கின்றனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். இது தொடர்பாக சின்சினாட்டியில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையைச் சேர்ந்த கென்னத் செட்செல் என்ற நிபுணர் கூறுவதாவது, சோயாவில் புரதச்சத்து அதிகம் உள்ளது. மேலைநாடுகளில் இப்போது மிகவும் பிரபலமான உணவு சோயாதான். இதில் ஊட்டச்சத்து அதிகம் உள்ளது.

சோயாவை உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு தலை வழுக்கை விழாது. சிறுநீர்ப்பையை ஒட்டியுள்ள புராஸ்டேட்சுரப்பியில் புற்றுநோய் வராமலும் இது தடுக்கிறது. மேலும் தோல்கள் வறண்டு போகாமல் பாதுகாக்கிறது. சோயாவை சூப் வைத்தோ அல்லது சோயா பாலாகவோ அல்லது உணவுடன் சமைத்தோ எப்படிவேண்டுமானாலும் சாப்பிடலாம். இதனால் பக்க விளைவுகள் ஏற்படாது என்கிறார் கென்னத். தடகளம் மற்றும் இதரவிளையாட்டுகளில் ஆர்வமுள்ள இளைஞர்கள் கடுமையான பயிற்சிக்குப் பிறகு கார்போஹைட்ரேட் அடங்கிய சோயா பானத்தை அருந்தினால் புத்துணர்ச்சி பெறுவார்கள். அவர்களுக்கு தசைப் பிடிப்பு வர வாய்ப்பில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதனை எவ்வாறு கண்டறிய முடியும்?


மிகுதியான இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு அடிக்கடி மயக்கம் தலையிடி உண்டாகும். மருத்துவரிடம் சென்று இரத்த அழுத்தத்தை பரிசோதித்தும் தெரிந்து கொள்ளலாம். நீரிழிவு நோயாளிகளை இருதய நோய் தாக்கினால் நெஞ்சுவலி அறிகுறி ஏற்படாது என்கிறார்களே?

50சதவீத நீரிழிவு நோயாளிகள் இருதய நோயால் பாதிக்கப்பட்டால் கூடநெஞ்சுவலி ஏற்படாது அதனால் நீரிழிவு நோயாளிகள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். அடிக்கடி உடம்பை பரிசோதிப்பது அவசியம்.

**இருதயநோயை தடுப்பதற்கான உடற்பயிற்சிகள்**

வேகமாக நடப்பது
சைக்கிள் ஓட்டுவது
நீச்சலடிப்பது

இருதய நோய்க்கேற்ற உடல் பயிற்சிகள் செய்வது. பளுவான எடை தூக்குதலை தவிர்க்க வேண்டும்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# கப்டன் அமுதமகள் எங்கள் வீரமகள்

200 வருடகாலமாக எதிரியின் கோரப்பிடியிலிருந்த தமிழர் தாயகத்தின் நெஞ்சுப் பகுதியும் வடபகுதியின் உயிர் நாடியுமான ஆனையிறவை எப்படியும் மீட்டுவிடவேண்டும் என்ற திடமான முடிவுதனை எம்தலைவன் வேதமாய் உச்சரிக்க, தலைவன் தொட்டுக்காட்டியதை வேகமாய் செய்து முடிக்கப் போராளிகள் புறப்பட்டனர். நிச்சயமாக அண்ணாக்குப் பிடித்துக் கொடுப்போம் என்பதுதான் எல்லோரினதும் வேத மந்திரமாக இருக்க, இடர்நிறைந்த களமுனை ஒன்றிலிருந்து, மிக விசுவாசமுள்ளவளாகவும் தனது கடமையை நேர்த்தியாகச்செய்தாள்.

குறிப்பிட்டகாலம் தனது படைத்துறைப்பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தவள். தொடர்ந்து சந்தோசம் படையணியில் இயங்கத்தொடங்கி அதிலும் நற்பெயருடன் வாழ்ந்து பின் சண்டைக்குத்தான் நான் போவேன் என அடம்பிடித்து, இறுதியில் அவளது கோசம் நிறைவேற பொன்னம்மான் கண்ணிவெடிப்பிரிவிற்கு வந்து சேர்ந்தாள். அங்கு நீண்ட நாட்களாக தனது சேவையினை செய்தவள். சண்டை சண்டை என்று நச்சரித்துக்கொண்டே இருப்பதனால், அவளை சண்டைக்கு அனுப்பவேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் சில சண்டைகளுக்கு கண்ணிவெடி புதைத்தல், எடுத்தல், தகர்த்தல் என்ற வேலைகளை செய்துவிட்டு,

இறுதியில் குடாரப்புத் தரையிறக்கத்தின் பின் இத்தாவில் களமுனைக்கு வந்தாள். என்நேரமும் போராட்டச் சிந்தனையுடன், செயற்பட்டுவந்தது மட்டுமல்ல, இத்தாவில் பிரதேசத்தை இறுதிவரை கைவிடக் கூடாது என்ற அடிப்படையில்,



மோசமான வேதனைமிகுந்த காலத்தில் நாம் பயிற்சிகளை செய்துகொண்டிருந்தோம். அதே சமகாலத்தில் எதிரியின் நகர்வுகளைத் தடுக்கவென பொன்னம்மான் கண்ணிவெடிப் போராளிகளும் களத்தில் தங்களது வேலைகளைச் செய்தவண்ணமே இருந்தனர்.

அந்த கண்ணிவெடிக குழுவில் துடிதுடிப்புடன் அங்கும், இங்கும் ஓடித்திரியும், போராளி ஒருத்தியும் இருந்தாள். சுறுசுறுப்புக்கும், துடிதுடிப்பிற்கும், குழப்படிக்கும் பேர்போன அந்தப் போராளியின் இலட்சிய உணர்வுகளை என்னவென்று சொல்வது. சிறிய வயதிலேயே எதிரியால் பாதிக்கப்பட்ட தனது குடும்பத்தை நினைத்து கவலையடைந்து, எப்படியும தான் போராட வேண்டுமென்ற ஆசையுடன் போராட்டத்தில் இணைந்து கொண்டவள்.

வீரவேங்கை கப்டன் அமுதமகள் இளமைக்கேற்ற துடிப்பு, அவளிடம் எப்போதுமே நிறைய இருந்தது. சிறுவயதிலேயே அவளது போராட்டச் சிந்தனை அவளை போராட்டத்தின்பால் உந்தித்தள்ளியது. இயக்கத்தில் இணைந்துகொண்ட அவள், படைத்துறைப்பள்ளியில் சேர்க்கப்பட்டாள். இங்கு அவள் வளரமட்டும் படிப்பும், இயக்கம் சார்ந்தபிரச்சினைகளும், போராட்ட வரலாறு, தலைவரின் எண்ணக்கரு என்பன அவளுக்கு போதிக்கப்பட்டிருந்தமையினால் போராட்டத்தின்பால் மிகுந்த அக்கறை கொண்டவளாகவும், கூடிய போராளிகள் உறுதியோடு போரிட்டுக்கொண்டிருக்கையில், எதிரி உள்நுழையக்கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருந்து செயற்பட்டவள்.

எதிரி எங்கு எங்கெல்லாம் வருவான் என்றுதானே ஊகித்து தனது அணி யினருடன் சென்று கண்ணி வெடிகளை புதைத்து எதிரிக்குச் சேதத்தை ஏற்படுத்தினாள்.

இத்தாவில் சமர்க்களத்தின் துன்பங்களுக்கு அளவேயில்லை. இரத்தம் வழிந்தோடிக் கொண்டே இருந்தது. சில நாட்களில் ஒவ்வொரு போராளியும் 24 மணிநேரமும் இரத்தம் சிந்திச் சிந்தி உழைக்கவேண்டியிருந்தது. அப்படி உழைத்தவர்களில் கப்டன் அமுதமகளும் ஒருத்தி.

அக்கா அதால மூவ்பண்ணப்பார்ப்பான்...

சிலவேளை இதால வருவான் எனவே விட்டுவிடக் கூடாது. எல்லா இடத்திலையும் மைன்சை வைக்கவேணும் என்பாள். இத்தாவில் என்பதை இனி சிங்களவன் நினைத்துப் பார்க்கவேகூடாது என அவள் வீரச்சாவடைவதற்கு பத்துநிமிடங்களுக்கு முன்தான் சொன்னவள்.

தனது சக்திக்கு மிஞ்சிய வேலையை செய்வது என்றால் அவளுக்குப் பெரிதும் விருப்பமானது. அங்கும் இங்கும் ஓடி ஓடி வேலை செய்வதிலும் கண்ணிவெடிகளை வேகமாகப் புதைப்பதிலும் அவளுக்கு நிகர் அவளே, இரவுநேரங்களில் கண்ணிவெடிகள் புதைக்கும் போது வேகமாக, நிதானமாக புதைப்பாள். தனது வேலையை செய்துகொண்டே சென்றி கவனம், சென்றி கவனம் என காவல் கடமையில் உள்ளவரை தயார்ப் படுத்துவாள்.

பெரும்பாலும் இத்தாவில் களத்தில் கண்ணிவெடிகள் வைக்கும் வேலையை இரவிலேயே செய்வதுண்டு. கண்ணிவெடி வைக்கப்போகும் எமது அணி இரவானதும் 7அல்லது 8மணிக்கு புறப்பட்டு கடைசியில் 04,05 மணிவரை வைத்துவிட்டு திரும்புவதுண்டு.

எமது பகுதியில் கண்ணிவெடி வைப்பதை உறுதிசெய்யவும், கண்ணிவெடிப் போராளிகளின் பாதுகாப்பிற்காகவும், நானும், அமுதனும் செல்வதுண்டு. நாம் செல்லும்போதெல்லாம் அந்தச்சிறிய உருவம் தனது சக்திக்கு அப்பாற்பட்ட வேலையை செய்வதைப்பார்த்து அசந்துவிடுவோம். எதிரியிடமிருந்து கைப்பற்றிய வாகனக் கண்ணிவெடிகளையே பெரும்பாலான இடத்தில் வைப்பதுண்டு. அது நிறைகூடியது. நாம் வேலை செய்வதற்கென வெளிக்கிட்டுச் செல்லும்போது எங்களுடனேயே அன்று வைப்பதற்கான கண்ணிவெடிகளை கொண்டு செல்ல, எனவே நாம் நிறைய கண்ணிவெடிகளையும், பொறி அமைப்புக்களையும் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தேவை இருந்தது. அதன்போது வீரவேங்கை கப்டன் அமுதமகள் தனது இரண்டுதோள்களிலும் வட்டவடிவான அந்தப்பெரிய வாகன கண்ணிவெடிகளை சுமந்துசெல்வதை பல தடவை பார்த்து அசந்திருக்கிறோம்.

இந்தளவு ஊக்கமும் துணிவும் அவளுக்கு என்னவென்று வந்தது என்று பார்க்கும்போது அல்லது அவளிடமே கேட்டபோது ஒவ்வொரு போராளிக்கென்றும் ஏதோ செய்ய வேண்டுமென்ற ஆசைஇருக்கிறது. என்னைப்பொறுத்தவரை நான் அதை ஆசையாகக் கொள்ளவில்லை. உணர்வாக நினைக்கிறேன். ஒன்று தாய் நாட்டிற்கானது, மற்றையது தலைவருக்கானது என்று சொல்லி விட்டுச்சிரிப்பாள்.

கப்டன் அமுதமகளைப் பொறுத்தவரை எதையுமே கடினம் என்றோ, செய்யமுடியாது என்றோ, அல்லது இயலாது

**— க. மிரேசு —**

என்றோ, விட்டுவைப்பதில்லை. மாறாக, எதை எடுத்தாலும் செய்து முடிப்பேன் என்ற துணிவும் தன்நம்பிக்கையும் அவளிடமிருந்தது. இரவு, பகல், மழை, வெயில், இன்பம், துன்பம் இப்படி எதையுமே பார்க்காத அந்த அற்புதமான போராளி தானே முன்னின்று எத்தினையோ வேலைகளை செய்து முடித்தவள். எதிரியிடமே கேட்கலாம் அவளது கண்ணிவெடியின் தன்மையை. அந்தளவுக்கு, துல்லியமான ஊகிப்புடன் எதிரி கடக்க நினைக்கும் இடத்திலேயே கண்ணி வெடிகளை வைப்பதுண்டு. அமுதமகள் கண்ணிவெடி புதைத்த இடத்தில் எதிரி தப்பியதே அரிது என்று சொல்லலாம்.


இத்தாவில் சண்டை வெற்றியின் உச்சத்திற்கு வந்து கொண்டிருந்தது. என்றாலும் எதிரி முன்னேறுவான் என்று எதிர்பார்த்த பக்கங்களிலெல்லாம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. ராங்கோ சங்கேத மொழியைக் கொண்டபக்கத்திலும் கண்ணிவெடிகள் உடன் வைக்கப்பட்டன. காரணம் ஆனையிறவிலிருந்து ஓடிவரும் எதிரி அந்தப்பாதையூடாகவே வர வேண்டும் என்பதற்காக கண்ணிவெடிகள் வைக்கப்பட்டன.


எஞ்சிய ஒரு இடத்திற்கு வாகன கண்ணிவெடி ஒன்று குறைந்துவிட்டது. கண்ணிவெடி அணி அதை எடுக்கவந்தது. அமுதமகளும் வந்தாள். (கப்டன் நித்திலாவின் அணி) எஞ்சிய இடத்திற்கு கண்ணிவெடியை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது மாலையாகிவிட்டது. உடனே அமுதமகள் சொல்கிறாள் (அவள் கதைப்பது எமக்கும் கேட்கிறது.)

அக்கா இந்த வெயிக்கிலை (வாகன கண்ணிவெடிக்கான சுருக்கப்பெயர்) பார்க்க எனக்கு ஏதோ சந்தேகமா இருக்கு நீங்கள் ஒருவரும் வரவேண்டாம் நான் போய் வைத்து விட்டுவருகிறேன். தற்செயலா வெடித்தால் நான்மட்டும்தானே வீரச்சாவடைவேன் ஏனையோருக்கு எதுவும் நடக்காது என்று சொல்லிவிட்டு உடனே வாகனக் கண்ணிவெடியை துாக்கிக்கொண்டு செல்கிறாள். உதவிக்கு சக தோழிகள் போக, வேண்டாம் என்று உறுதியாக மறுத்துவிட்டாள்.

பார்க்கக்கூடிய தூரத்தில் கண்ணிவெடி வைப்பதற்கான கிடங்கை தனியாகக் கிண்டி கடைசியில் கண்ணிவெடியை வைத்து அதன் பொறியை (பூஸ்ட்டர்) பூட்டும்போது பெரிய புகைமண்டலம் எழும்பியது. அதன் பின் வானைப்பிளக்கும் வெடியோசைகேட்டது.

தான் மட்டுமே சாகவேண்டும் என்று சொல்லித்தன் சக தோழிகளின் உயிரை காப்பாற்ற நினைத்த அந்த ஈழத்து முத்துவிற்கு தனது உயிரை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. என்றாலும் அவளது நினைவு இப்போதும் ஈழமண்ணில் வாழ்ந்துகொண்டே இருக்கிறது. ●





சிறுகதை



# மாறாத வலிகள்

**த. சுகுணன்**

நீல வண்ணனுக்கு இந்தப்பயணம் புதியது. நீண்ட தூரப் பயணம் வேறு! துண்டாடிப் போயிருந்த கண்டிவீதியூடான போக்குவரத்து மோதல் தவிர்ப்பு உடன்பாட்டினால் மீண்டும் உருவாகி இயல்பான பொழுது அவன் செய்யும் முதல் பயணம் இது!

யாரையாவது துணையாக அழைத்துச்செல்லும்படி கூறிய தாயாரின் எண்ணத்தை நிராகரித்துத் தனியேதான் செல்கிறான். அது தனியாகவே மேற்கொள்ள வேண்டிய பயணமும்கூட.

கிட்டத்தட்ட எட்டு, ஒன்பது வருடங்களுக்கு மேலாக விட்டுப்போன உறவொன்றைத் தேடி இப்போது செல்லும் வாய்ப்பு நீலவண்ணனுக்குக் கிடைத்திருக்கின்றது. அதுவும் அவனது பெரிய அன்னையிடமிருந்து.

ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் துக்கமுமாய் அமைந்துவிட்ட இந்தப் பயணம் அவனால் எதிர்பார்க்கப்படாததொன்று. திடீரென பெரிய தாயாரிடம் இருந்து வந்த கடிதம், அவனை பெரியதாயாரின் வசிப்பிடமான கொழும்பை நோக்கி நகர வைத்திருக்கிறது.

முகமாலைச் சோதனைச் சாவடியை நீலவண்ணன் பயணித்த வாகனம் கடந்து சென்றபொழுது அது பாடசாலை நேரமாக இருந்தது. இப்போது அவனோர் ஆசிரியர். வாழ்க்கையில் பல ப[illegible]வங்கள் இருந்தாலும் பாடசாலைப் பருவம் போலப் பசுமையான பருவம் எதிலும் அமைந்துவிடுவதில்லை. அதனை யாரேனும் எழிதில் மறந்துவிடுவதுமில்லை. நீலவண்ணனுக்கோ அந்தப்பருவம்...அவனது உயிரற்ற உடலை எரித்தாலும் அவனை விட்டு நீங்கமுடியாத பருவமாய் இருந்தது. மெல்ல அவன் மனத்திரையில் அந்தப் பாடசாலை நாட்கள் சலனப்படமாய் விரிந்தன.

அது அவனது சாதாரண தரப் பரீட்சைக்குரிய வகுப்புக் காலம். கட்டிளம் பருவத்தில் நினைப்பதெல்லாம் இனிக்க வைக்கின்ற சூழலில் வாழ்ந்த நேரம் அவன் தன் மாமன் மகள் கிருஷ்ணராதா காரணமாகத் தினமும் தாயோடு சண்டை போட்டே பாடசாலை செல்வது வழக்கம்.

அந்த நாட்களில் அவனுக்கு அது ஒரு தலையிடியாகவே இருந்து வந்தது. காலப் போக்கில் அந்தத் தலையிடியே அவனுக்கு தினமும் தேவைப்பட, அதற்காய் அவன் தவித்த நாட்கள்.....!

"வண்ணன், ராதாவை மறந்துபோய் விட்டிட்டுப் போவுடாதை" அம்மா தொடங்கி விடுவாள்.

"உங்களுக்கு ஒருக்காச் சொன்னால் விளங்காதேயம்மா. அவளை என்ர சைக்கிள்ளை ஏத்திக் கொண்டுபோனா பொடியள் பகிடி பண்ணுறாங்கள்"

இது உண்மையாக இருந்தபோதிலும், அவனின் காரணம் தாயிடம் எடுபட்டு விடுவதில்லை. அவன் என்ன சொன்னாலுமே அவளிடம் இருந்து.

"சரி, இப்ப எனக்குச் சொன்னதை மாமாக்கும் ஒருதரம் சொல்லிவிடு" என்பதே அவனுக்குக் கிடைக்கும். அவ்வளவுதான் நீலவண்ணன் அடங்கிவிடுவான் . எத்தனை வேண்டாத விடயமாய், அவனுக்குப் பிடிக்காதவையாய் இருந்தாலும் மாமனுக்காக என்றால் முதலில் அதை நிறைவேற்றியே அவன் மறு வேலை பார்ப்பான். இரண்டே வயதானவனாய் அவன் இருந்தபோது தந்தை இறந்துவிட, மருமகனாய் அல்லாமல் மகனாகவே அவனை வளர்த்து வருபவர். வயலோடு போராடி இரண்டு குடும்பத்தையும் வளர்க்க அவர்படும்பாடு...! அவன் கண்களின் முன்னேயே அரங்கேறி வருபவையாச்சே! ஒரே வரியில் சொல்வதானால் அடியார்கள் ஆலயங்களில் தேடும் ஆண்டவன், நீலவண்ணனுக்கு அவர் மாமா வேலாயுதம்தான்!

கண்ணை அரித்துக் கசிந்துகொண்ட நீரைக் கைகளால் துடைத்துக்கொண்டான நீலவண்ணன். அவனது பயணம் இப்போது கிளிநொச்சி ஊடாகத் தொடர்ந்துகொண்டிருந்தது. மறக்கமுயன்றும் முடியாது போய்விட்ட அந்தக் கடந்தகாலமும் தொடர்ந்து விரிந்தது.

காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. வேகமாய் உருண்ட அதன் சக்கரத்தில் நீலவண்ணன் உயர்தர வகுப்பு வரை முன்னேறி இருந்தான். அது அவன் வாழ்வின் இன்னோர் அத்தியாயத்தைத் திறக்கக் காத்திருந்தது.

வயோதிபம் வேலாயுதத்தை சிறிது சிறிதாய் ஆட்கொள்ளத்தொடங்க நீலவண்ணனுக்கு கல்விச் சுமையோடு, பொருளாதாரச் சுமையும் சேர்ந்துகொண்டது. பாடசாலைக்குச் செல்லும் நாட்கள், வயலுக்குச் செல்லும் நாட்களா கியது... விளைவு அவனின் பாடசாலை நாட்கள் குறைய ஆரம்பித்தன. அந்த நேரம் தான் 'கிருஸ்ணராதா' என்கின்ற பொக்கிஷம் அவன்மனதுள் விதை கொள்ள ஆரம்பித்தது. அதுவே பின்னர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வைக்கும் என அவன் முன்பே அறிந்திருக்கவில்லை.

திருமுறிகண்டிப்பிள்ளையார் கோவிலடியில் வாகனம் தரித்துக் கொண்டது. அநேகமான பயணிகளைப் போலவே நீலவண்ணனும் கோவில் கும்பிட்டு மீண்டும் வண்டியில் ஏறி வசதியாய் அமர்ந்துகொண்டான். பிள்ளையாரிடம் எதுவும் கேட்டதாகவோ இல்லை அவருக்கு ஏதேனும் சொன்னதாகவோ அவனுக்கு நினைவில்லை

" அண்ணை கச்சான்"

ஒரு பன்னிரண்டு பதின் மூன்று வயதிருக்கும். கையில் கச்சான் சுருள்களுடன் நீலவண்ணனை நோக்கியவாறு ஒரு சிறுவன்! உணர்ச்சிகளை வெளிக்காட்ட முயன்று தோற்றுப்போன சினிமா நட்சத்திரங்களை இப்போது நீலவண்ணன் ஏனோ நினைத்துக்கொண்டான். அந்தச் சிறுவன் முகத்தில் கரிந்துகொண்ட உணர்ச்சிகளை எந்தக் கவிஞனாலும் வெளிப்படுத்திவிட முடியாதளவிற்கு அதன் தன்மை இருந்திருக்கவேண்டும். சோகமா, ஏக்கமா, தவிப்பா, அன்றி எல்லாம் சேர்ந்த கலவையா? அந்தச் சின்னஞ்சிறிசின் முகத்தில்தான் எத்தனை உணர்ச்சிகள் 'சிறுவர் உரிமை காக்கிறோம் அதற்காகவே போராடுகிறோம்.' தொண்டை கிழியக் கதறும் சில சர்வதேச அமைப்புக்களை நீலவண்ணன் எண்ணிப்பார்க்கிறான். ஏளனமாய் ஒரு புன்னகையைத்தவிர வேறேதும் தோன்றவில்லை. நீலவண்ணனுக்குத்தெரியும், சிறுவனை விசாரித்தால் போரின்வடு எங்கேனும் ஒழிந்திருக்கும் என்று!

"அண்ணை கச்சான்" மீண்டும் அதே சிறுவன்தான். பத்துரூபா கொடுத்து ஒரு சுருள் வாங்கிக்கொண்டான். பயணம் தொடர்ந்தது. கூடவே அவனது கடந்தகால வாழ்வும்தான்!

நீலவண்ணன் பாடசாலைக்குப்போகாத நாட்களுக்கான பாடக்குறிப்புகளை கிருஸ்ணராதாதான் அவனுக்காக எழுதிக்கொடுப்பாள். அப்படி ஆரம்பித்த நெருக்கம் அவனது ஒவ்வோர் செயற்பாட்டிலும் நீலவண்ணனுக்குள் தேனாய் இனித்தது. ராதாவும் அந்த நேரத்தில் சாதாரணதரம் படித்துக்கொண்டிருந்தாள். பாடக்குறிப்புகளை இலகுவாய் புரியக்கூடிய வகையிலேயே எழுதிக் கொடுத்ததால், அவனும் அதனை மனதில் பதித்து வைத்துக் கொண்டதைப்போலவே'கிருஸ்ண ராதா'வும் நீலவண்ணன் மனதில் விதையாகி விருட்சமாகத் தொடங்கினாள்.

நீலவண்ணன் மனதில் காதல் வந்தபோது ராதாவின் ஒவ்வோர் அசைவும் அழகாய், கவிதையாய்த்தெரிந்தன. எல்லை கடந்த உற்சாகம், எதிலுமே ஒரு ஈடுபாடு, அக்கறை எனக் காலம் அவனைக் காதலின் காலடியில் சுழலவைத்து சொர்க்கம் நோக்கி அழைத்துச்சென்றது. நீலவண்ணன் குறுகிய காலத்துக்குள் குதூகலத்திற்கு சொந்தக்காரனாய் மாறினான். ஒரு தலையாய் எழுந்த இந்தக் காதல் தந்த அகம் அவனுக்கு நிலையானதாகத் தேவைப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திற்காய் காத்திருந்தான். அதுவும் அவனின் அன்புக்குரியவள் மூலமாகவே வந்து சேர்ந்தது.

உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடித் தேர்வின், முடிவுகள் வெளியாகிய நேரம், அந்தப் பொன்னானவாய்ப்பு அவனைத் தேடிவந்தது.

"கெட்டிக்காரன்தான் முன்னோடி ரெஸ்ரில இவ்வளவு மாக்ஸ் வாங்குவியள் எண்டு நான் நினைக்கேல்லை"

அவளே வந்து நீலவண்ணனை வாழ்த்தியபோது அதனைச் சரியாகப்பயன்படுத்தத் தயாரானான் நீலவண்ணன். மாமன் மகளாகவே இருந்தாலும் சிறு வயது முதலே ஒன்றாகப் பழகி இருந்தாலும் அவனுள் எழுந்த படபடப்பு அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தது. மிகுந்த தயக்கத்தோடுதான் ஆரம்பித்தான்.

"இதுக்குக் காரணம் நீதானே ராதா உனக்கு தாங்ஸ் சொல்லவேண்டும்"

"எனக்கெதுக்கு தாங்ஸ்"

"உன்னாலதானே நான் படிச்சனான்"

"எப்பிடி?" ஆச்சரியமாய்க் கேட்டாள் அவள்!

"என்ர பாடக்கொப்பியள்ளை நான் எழுதின விடயங்களைவிட, நீ எழுதின விடயங்கள்தான் ஏராளம். அது என்ர மனசில ஆழமாய்ப்பதிஞ்சு கிடந்ததாலதான் எல்லாமே நடந்தது. நீ என்ர மனசில பதிஞ்சிருக்கிறமாதிரி"

கிருஸ்ணராதாவின் கைகளைப் பிடித்தவாறு நீலவண்ணன் மனுப்போட்டபோது அவளிடமிருந்து நீலவண்ணன் எதிர்பார்த்தது எதுவுமே நிகழவில்லை. மாறாக . அவள் கைகளை விடுவித்ததோடு, நின்றுவிடாமல், தன் மனதில் என்ன நினைத்தோம் என்பதைக்கூட அவன் புரியமுன்னர் அகன்றுவிட்டாள். நாட்கள் உருண்டன. கிருஸ்ணராதா நீலவண்ணனைக் கண்டுகொள்வதை மெல்ல மெல்லக்குறைத்துக்கொண்டாள். எல்லாமே கைமீறிப்போய்விட்டதாக அவன் எண்ணும்போது எதிர்பாராத விதமாய் கிருஸ்ணராதா அவன் முன்னால் வந்து நின்றாள்!

"அப்பாவும், அத்தையும் உங்களை நல்லாப் படிச்சு முன்னுக்கு வரவேணும் எண்டு நினைக்கினம். முதல்லை அவயளின்ர ஆசையை நிறைவேற்றுங்கோ, மற்றதை பிறகு பார்க்கலாம்"

அவள் மிகவும் இறுக்கமாய்த்தான் சொன்னாள். புதைந்து போன ஆனந்த ஊற்று அவனுள் பீறிட்டு எழுந்தது. மீண்டும் அவனுக்கு வாழ்வு வந்ததுபோல உற்சாகமானான். அவள் தந்த நம்பிக்கை நீலவண்ணனை பல்கலைக்கழகம் நுழையும்வரை தடையின்றிக்கொண்டு சென்றது.

ஓமந்தைச் சோதனைச் சாவடியை கடந்து வவுனியாவுக்குள் புகுந்துகொண்டான் நீலவண்ணன். இனிக் கொழும்புபஸ், பின்னர் பெரியம்மா வீடு! தயாராய் நின்ற கொழும்பு பஸ்சில் ஏறி அமர்ந்து கொண்டான் நீலவண்ணன். மீண்டும் அவன் பயணம் தொடர்ந்தது. தடைபட்டுப்போன கடந்த காலமும்தான்! வழக்கம் போலவே அன்றைய பொழுதும் புலர்ந்தது. நீலவண்ணனின் வாழ்வில் அன்றையபொழுது மற்றுமோர் திருப்பத்திற்காய்க் காத்திருந்தது. அன்றைய நாள் அவனுக்கோர் அவசர செய்தி வந்திருந்தது. அதில்,

"கிருஸ்ணராதாவுக்கு தந்தை வேலாயுதம் வெளிநாட்டு மாப்பிள்ளை பார்த்திருப்பதாகவும், உடனே வந்து தடுத்து நிறுத்தி தனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பை இப்பவே சொல்லுமாறும்' இருந்தது. அனுப்பியவள் கிருஸ்ணராதாதான்!

என்னவென்று சொல்வது இதனை! முதன் முறையாக அவளே தன் விருப்பத்தை சொன்னது ஒரு புறமாய் இன்பம்தர, அதனைச் சொல்லிய சூழல் சோகமாய் ஒட்டிக்கொண்டது. என்ன இருந்தாலும் அவளை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க எண்ணம் இல்லாதவனாய், வீடு சென்றான் அவன்!

எல்லாவற்றையுமே தடுத்து நிறுத்துபவனாய்த்தான் நீலவண்ணன் மாமனாரிடம் சென்றான். ஆனால் அவரோ.

"உன்ர படிப்பு குழம்பக் கூடாது என்பதாலதான் நானே எல்லாத்தையும் பாத்திட்டன். கொழும்புக்கு மாப்பிள்ளை வருவார் நான்தான் ராதாவைக் கூட்டிக்கொண்டு போகவேணும். எல்லாம் நீ இருக்கிறாய் எண்ட துணிவிலதான் செய்தனான்."

(20ஆம் பக்கம் பார்க்க)


றோட்டில் மாடொன்று நைலக்ஸ் சேலை ஒன்றை முகத்திலும் கழுத்திலும் எடுத்துப்போட்டவாறு ஒரு பெண் ஒய்யாரமாக நடந்து வருவதுபோல் வந்துகொண்டிருந்தது அவனை வியக்கவைத்தது.

மாட்டுக்கு யார் சேலை அணிவித்தது.அல்லது மாடு எவ்வாறு சேலை அணிந்துகொண்டது.

அதை விளங்கிக்கொள்ளவில்லை.

பூட்டிவிட்டு யாழ்ப்பாணம் ஓடியவர்களின் வீடுகளெல்லாம் உடைக்கப்பட்டுவிட்டன.யார் வீடுகளை உடைத்தார்கள் என்பதுதான் இன்னும் ரசனைக்குரியது.புங்குடுதீவிலுள்ள தமது உறவினரை சந்திக்க வந்ததாகச் சொல்லிக்கொண்டவர்கள் தமது உறவினரோடு சேர்ந்து

இரவு இரவாக ஒவ்வொரு வீடுவீடாகப் பேய்கள் மாதிரிப்புகுந்த வர்கள் ஒவ்வொரு வீட்டுக்குள் இருந்தும் விலைமதிப்புள்ள சேலைகள் என்றும் மூட்டை கட்டிக்கொண்டுதான் வெளிவந்தார்கள்.




25

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

மூட்டைகட்டப்பட்ட பொருட்கள் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டன.இந்தக்களவும் கடத்தலும் உச்ச நிலையை அடைந்தன.

இது கட்டுப்படுத்தப்பட முடியாததாக இருந்தது.

இப்படியாக உள்ளூர் வெளியூர் கள்ளர்களால் திறந்துவிடப்பட்ட வீடுகள் போவோர் வருவோரை வா வாவென அழைத்தன. மக்கள் இடம்பெயர்ந்து விட்ட ஊரில் றோட்டில் போவோர் வருவோராய் இருந்தவர்கள் மக்கள் அல்ல, ஆடுகளும் மாடுகளும் நாய்களுமே வழமைக்கு மாறாக என்றைக் கும்மில்லாத மாதிரித் திறந்துவிடப்பட்டு ஹோவெனக் கிடந்த வீடு களைப்பார்த்தபோது மிருகங்களே ஏதோவென்றால் தூண்டப் பட்டவைபோல் உள்ளே நுழைந்து பார்க்க விரும்பின.திறந்த வீடுகளின் பரிதாப நிலை இதுவாகும்.அப்படி திறக்கப்படாத வீடு ஒன்று இருக்கு மானால் அங்கு இடம்பெயராது எஞ்சிப்போன கிழடு கட்டைகள் காவலுக்கு கிடக்கின்றன என்பது தான் அர்த்தம்.

பெரிய வெற்றுச்சங்குக் கோதுக்குள் உள்நுழைந்துவிட்ட சிறு பூச்சிகள் போல் அவர்கள் அந்த வீட்டுக்குள் நடமாடினர்.தங்களால் சமைக்க முடியாத நிலையில் அடிக்கடி வெறுந்தண்ணி குடித்துவிட்டு ஊசலாடினர். சிலர் சீலம்பாயை விரித்து அதன்மேல் அழுக்கு தலையணையை தலைக்குப் போட்டுவிட்டு படுத்திருந்தனர்.பூனையொன்று அப்படிப் கிடந்த ஒருவரோடு ஒட்டிக்கொண்டு கிடந்தது. வீட்டு நாய் அடி வளவில் நின்று ஊளையிட்டுக்கொண்டு இருந்தது.

அது அடிக்கடி உளையிடுவதும் திடீர் என்று விசர் பிடித்தது போல் முற்றத்துக்கு ஓடி வருவதுமாய் இருந்தது. அப்போது அப்பக்கத்தால்

ஊரதீவிலிருந்து சைக்கிளில் வந்த நடுத்தர வயது மதிக் கத்தக்க வேலுப்பிள்ளை சைக்கிளை ரோட்டுக் கரையோரமாக சாத்திவிட்டு 'தம்பிராசண்ணை தம்பிரா சாண்ணை' என்று கூப்பிட்டவராய் உள்ளே நுழைந்தார். தம்பிராசாண்ணை நீட்டி நிமிர்ந்து சீலம்பாயில் கிடந்தார். அவரது ஊன்று கோல் தூரப் போய்க் கிடந்தது. அவரிடமிருந்தது எதையோ காவிக்கொண்டு ஓடுவதுபோல்

அவரோடு கிடந்த பூனை பாய்ந்து போயிற்று.

வேலுப்பிள்ளை இன்னும் நெருங்கி தம்பிராசாண்ணையை பார்த்தார்.வாய் பிளந்த நிலையிலும் கண் வெறித்த நிலையிலும் அவர் கிடந்தார். 'ஆள் செத்துப்போச்சு.' என்று வேலுப்பிள்ளை தனக்குள் சொல்லியவாறு விறுவிறுவென வெளியே வந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார். தூரத்தூரத் இருந்த ஒவ்வோர் ஆட்களின் வீட்டுப்படலையையும் திறந்து தம்பிராசாண்ணை செத்துப் போனதை அறிவித்துப்போனார்.அன்றிரவு தம்பிரா சண்ணையின் பூதவுடலின் தலைமாட்டில் ஒரு சிறுகுத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அவரைச்சுற்றி வேலுப்பிள்ளையின் தலைமையில் இரண் டொருவர் தேவாரம் பாடிக்கொண்டிருந்தனர்.

இடைக்கிடை நாலைந்து வயது போன பெண்கள் உயிரற்ற குரலில் நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டது போல ஒப்புச் சொல்லி அழுவதும் மூக்கைச் சீறி சேலைத்தலைப்பில் துடைப்பதுமாய் இருந்தனர்.

அடுத்த நாள் காலை பத்து மணி போல் தம்பிராசண்ணையின் பாடை சுடலையை நோக்கி நகர்ந்தது. நான்குமுனைகளில் வாழைக் குட்டிகள் வைத்துக் கட்டப்பட்ட பாடை சோடனை கடதாசிகள் எதுவும் இல்லை. சவப்பெட்டி இல்லாது பன்னாங்கில் தம்பிராசண்ணையின் பூதவுடல் கிடத்தப்பட்டிருந்தது. பாடையைக்காவிய நான்கு பேருக்கு பின்னால் ஐந்தாறு பேர் தேவாரம் பாடிக்கொண்டுசெல்ல, வேலுப்பிள்ளையர் சங்கூதிக்கொண்டும் தில்லையம்பலம் சேமக்கலம் தட்டிக்கொண்டும் சென்றனர்.

வேலுப்பிள்ளையரின் கையாள் ஒருவர் சுற்றி வந்து கொள்ளிக்குடத்தை உடைத்துவிட்டு கொள்ளி வைத்தார். காவோலை களில் பட்ட தீ திகுதிகுவென எரிய ஆரம்பித்தது.

தீவில் சிறிலங்கா படை ஆக்கிரமிப்பில் நடந்ததன் ஒரு எடுகோள்தான்.

துருவன்




# இலங்கையின் மூத்த பண்பாடு

பலாங்கொடை பண்பாடு, இலங்கைத்தீவின் தெற்கு முதல் வடக்குவரை பரவிக்கிடந்தது. அது 37 ஆயிரம் ஆண்டுகள் முதல் தொடங்குகின்றது. அது திராவிட மூதாதைகளு டையது. அதுபற்றி மேலும் பார்ப்போம்.

வரலாற்றாய்வாளர் ப.புஸ்பரட்ணம் தரும் விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும்.

வட இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள மிகத்தொன்மையான வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தொல்லியற் சான்றுகள் குறுணிக்கற்கால அல்லது இடைக்கற்கால பண்பாட்டுக்குரியனவாகும்.

இப்பண்பாட்டு மக்கள் காட்டுப்புறங்களாகத் தோன்றிய பயிர்களில் இருந்து தானியங்களை அறுக்கவும் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தவும், சிறிய பிளேட்போன்ற கல் அலகுகளை பயன் படுத்தியதால் இக்காலத் தினைக் குறுணிக்கற்காலம் அல்லது இடைக்கற்காலம் என தொல்லியலாளர்கள் அழைக்கின்றனர்.

ஏறத்தாளப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயிருந்து இப்பண்பாடு நிலவியதென்ற கருத்து நீண்டகாலமாகக் கூறப்பட்டு வந்தது. அண்மைக்கால ஆய்வுகளால் இலங்கையில் இதன் தோற்றக்காலம் கி.மு. 28 ஆயிரம்ஆண்டுகள் எனவும், தமிழகம் திருநெல்வேலியில் கி.மு.30 ஆயிரம் ஆண்டுகள் எனவும் கணிப்பிடப்பட்டது.

இக்குறுணிக்கற் பண்பாடு யாழ்ப்பாண குடாநாடு தவிர இலங்கைத் தீவெங்கிலும் நிலவியதாகத் தெரியவருகிறது.

இதனை பலாங்கொடை, இரத்தினபுரி, கித்துள்கொட, குருவிற்றுவ, அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், பூநகரி, ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. இருப்பினும் இப்பண்பாட்டு மக்களின் நாகரிகம் தொடர்பான பல சான்றுகள் பலாங் கொடையை மையமாகக் கொண்ட பகுதியிலேயே இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதனால் இது பலாங் கொடைப் பண்பாடு எனவும் கூறப்படுகின்றது. இப்பண்பாட்டுக்கும். தமிழகத்தின் திரு நெல்வேலிப் பண்பாட் டுக்கும் இடையேயுள்ள நெருங்கிய ஒற்றுமை பற்றி பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரு பண்பாட்டு மக்களும் பயன்படுத்திய கல்லாயுதங் களை ஆராய்ந்த கலாநிதி பி. ஆர். அல்ச்சின் என்ற லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக் குழுத்தலைவர். தமிழ் நாட்டில் மட்டும் பயன்படுத்தப்பட்ட இவை போன்ற இரு பக்க அலகுடைய கல்லாயுதம் சம காலத்தில் இலங்கையிலும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டார். பொதுவாக இப்பண்பாட்டில் இரு நாடுகளுக்கும் இடையே யுள்ள நெருங்கிய ஒற்றுமை யைக்கொண்டு இப்பண் பாட்டு மக்கள் ஏதோ ஒரு கால கட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக் குப் புலம்பெயர்ந்திருக் கலாம் எனத் தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். தமிழ் நாட்டிலும், இலங்கை யிலும் இப்பண்பாட்டைப் பின்பற்றிய மக்கள் ஆதி அவுஸ்ரலொயிட் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர் களாவர். இவர்களின் மொழியும், பண்பாடும் பிற்பட்ட திராவிட நாகரிகத்துடன் இணைந்தே இலங்கை நாகரிகம் தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடுகிறார். வரலாற் றாய்வாளர் ப.புஷ்பரட்ணம் இக்கருத்து தெரிவிக்கப்பட்ட ஆண்டு.1993 இதன் பின்னர் மேலும் உறுதிசெய்யப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் பலாங்கொடை மனிதனின் காலத்தை 29 ஆயிரம் ஆண்டுகளிலிருந்து 37ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தள்ளியுள்ளது. பலாங்கொடை மனிதனின் தொன்மையுடன் நாம் இந்த மண்ணின் மூதாதைகள் என்பதற்கான ஆதாரத்தையும் வலுவாக உறுதிசெய்கின்றோம்.

இது தவிர புதிதாக மேலும் ஒரு தகவல்.

மகாவம்சப்படி கி.மு.6ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த முதல் மனிதனான விஜயனின் கூட்டத்தாரில் ஒருவனான அனுராதவால் அனுராதபுரநகரம் அமைக்கப்பட்டது.

அதுவே இலங்கை யின் முதல் நகரம். அவர் களே நகரங்களையும் நீர்ப்பாசனக்குளங்களையும் கட்டினர் என்பதாகும்.

அறிவியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின் முடிவுப்படி அனு ராதபுரத்தில் கி.மு. 1000 ஆண்டளவில் அங்கு இரும் புத் தொழில்நுட்பம் ஆரம்ப மாகிவிட்டது. விவசாயம் ஆரம்பமாகிவிட்டது. இதற்கு முந்தையகாலம் 4 பேர் வீதம் 10 சதுர கிலோமீற்றர் பரப்பினை வாழிடமாகக்கொண்டு வேட்டையாடினர் என மதிப்பிடப்பட்டது.

கி.மு.1000 - 900 ஆண்டுகளில் அனுராதபுரத் தில் விவசாயம் ஆரம்பமாகி வளர்ந்துகொண்டிருந்தது.

அன்றே இலங்கை யின் நாகரிகம் நகரப்பண் பாடு கருக்கொண்டுவிட்டது. இந்த வரலாற்றுத் தகவலை அண்மையில் வெளியிட்டவர் கலாநிதி சிரான் தெரணிய கல.

மகாவம்சப்படி கி.மு. 500களில் விஜயன் கூட்டத்தாரில் ஒருவனான அனுராத அனுராதகமய என்ற கிராமத்தை அமைத்தான். இவர்களின் தொடர்ச்சியாளனான பண்டுகாபய அனுராத புரத்தை தலைநகராக் கினான். 1984முதல் 1990வரை அனுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லி யலாய்வுகள் காபன் - 14 காலக் கணிப்பீடுகள் கி.மு 900 ஆண்டின் முன்பே அனுராதபுரம் ஆரம்பமாகி விட்டதெனவும் இரும்பு நுட்பம், நெற்செய்கை, மட்பாண்டக்கலை, குதிரை மாடுகள் பயன்பாடு ஆரம்பமாகிவிட்டது.

அப்படியானால் விஜயனே இரும்புப் பயன்பாட்டை இலங்கைக் குக்கொண்டுவந்தான் என்ற கருத்து பொய்யென அறிவியல் நிரூபிக்கின்றது. தமிழரின் பெருங்கற் பண்பாடு அனுராதபுரத்தில் நிலைத்தது என்பது உறுதிசெய்யப்படுகின்றது. நாமே இந்த மண்ணிற்குரி ய்வர் என்பது உறுதியா கின்றது.

குரலோன்

## கவிதைகள்

நான் பாரெரொடு
விண்ணாய்ப் பரந்தவன்
நீ இரண்டுக்குமே
தண்மையளிக்கும்
மழைமுகிலானவள்
கலந்தனவாகிய
எமதன்புடை நெஞ்சம்
ஒரு மலைமுகட்டில்
வாழும் பறவைபோல்
கட்டுக்கடங்காதது.
இப்பூவுலகோர்.
அம்பும் வில்லுமாய்
அலையும் மலைவேடுவர்.

ஊழிப்பெருவெள்ளத்தில்
இம்மண்ணுருண்டை
மூழ்குவதாய் நான் கற்பனிக்கையில்
கர்ணப் பேழையாய் மிதந்து
என்னை மட்டும்
கரையேற்றிச் செல்கிறாயே
ஏனடி என் கனவுத்தோழி.

நீ எனக்கு யாதுமாகி நின்றவள்
நான் காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்குகிறேன்
ஏதொன்றும் அறியார்போல்
வேடமணிந்த அயலும் சுற்றமும்
படகோட்டுகிறது என் கண்ணீரில்.

வேறொன்றுமில்லையடி
தோழி அதன் காரணம்
இப்பூமியர் எல்லோருக்கும்
ஞானக்கண் திறப்பதற்காய்
என்றோ ஒருநாள்
ஆதிபிதா ஆதாம்
புசித்த அப்பிளின்
வீரியத்தன்மை
விட்டொழிந்து போயிற்றடி.

இமைதிறந்திருக்க
கண்மூடிக்கிடக்கும்
இவர்களின் இயல்பொழிக்க
இன்னுமோர் ஆதாமுக்கும்
அவன் புசித்த அப்பிளுக்குமாய்
எங்குசென்றலை வோமடி
என் கனவுத் தோழி.

வேல்.லவன்

## உயர்ந்தவர்கள்

நாங்கள் கமக்காரர்கள்
நாகரீக உலகின்
நம்பிக்கை நட்சத்திரங்கள்.

எங்கள் வாலிப வயதின்
பருவங்களைக்கூட
நெல் விதைகளோடு கலந்து
நேற்றே விதைத்து விட்டோம்.

காலவேகத்தின் விரைவிற்கு
நாங்கள் களைகளை களை கின்றோம்.
எங்கள் கால்கள் சேற்றில்
படும் போது தான்!
மாடி வீடுகள் சோற்றிலே
கை வைக்க முடியும்!

நாங்கள் கலப்பைகளை- கல்யாணம்
செய்து கொள்பவர்கள்.
எங்கள் கன்னியர்கள்-தங்கள்
காதல் வரிகளை
வயல் வெளிகளிலே
வரைந்து பார்க்கிறார்கள்.

நாங்கள் இயற்கையின்
இதயம் கவர்ந்தவர்கள்
என்னதான் இருந்தாலும்
நாங்கள் வறுமைக்கோட்டுக்குள்
வரையறுக்கப்பட்டவர்கள்
ஆனாலும் குடிசை வீடுகளில்
உள்ள குதூகலம்
கோபுரங்களில்-நாங்கள்
உடல் உழைப்பால் உயர்ந்தவர்கள்.

பெ.கலையரசி

# நாவலாக எழுதப்படவேண்டிய ஒரு சிறுகதை "உள்ளே கனன்று"



தனி ஒரு சிறுகதைக்கு அதுவும் அது பிரசுரமாகி இரண்டு வருடங்கள் கழித்து விமர்சனமோ, நயக்குறிப்போ எழுதப்படவேண்டுமா? இந்தக் கேள்வியையும் மீறி, பெருமாள் கணேசன் எழுதிய 'மண்ணின் வாசம்' (வெளிச்சம் இதழ் 78- வைகாசி - ஆனி 2002) என்றும் சிறுகதை என்னை ஈர்த்ததால் இதனை எழுத விழைகிறேன்.

ஒரு மனிதனின் ஆறு தசாப்த வாழ்வை ஒரு இனத்தின் வரலாற்றில் காலம் பதித்துவிட்ட தடங்களின் பதிவை, ஒரு கொத்துக் கிராமங்களின் உருவாக்கத்தை, அவை இராணுவ நெருக்குவாரங்களினால் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டபோதும், பின்னர் மீளக்குடியமர வாய்ப்புக் கிடைத்தபோதும் அந்தக் கிராமங்களின் சிற்பிகளில் ஒருவரின் மனப்பதிவுகளும், தான் தேடிய 'கையகல' நிலமும் தன்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிடுமோ? என்ற ஏக்கமும் இந்த ஆறுபக்கச்சிறுகதையுள் புதைந்து கிடந்ததே இதை எழுதக் காரணங்களாகும்.

சிறுகதையென்பது குறித்தவொரு விடயந்தொடர்பான அனுபவங்களைப் பேசும் ஒரு சட்டகமென பொதுவாகக் கொள்ளப்படுகிறது. இருந்தபோதும் வீச்சான படைப்பாளர்கள் இந்தச் சட்டகத்தின் உள்ளே மட்டும் நின்றுவிடாமல் வெளியேயும் சென்று தமது அனுபவங்களைப் பேசுபவர்களாக விளங்குகிறார்கள்.

'உள்ளே கனன்று' கூட இவ்வகையில் தனது சட்டகத்துக்கு வெளியேயும் அனுபவக் கீற்றுக்களை விசாளிப்பதாகவே படுகிறது.

அண்மைக்காலத்தில் படிக்கக் கிடைத்தவற்றுள் இச் சிறுகதை மனதை ஏனோ தைத்தது. சுட்டது.

இது ஒரு தனிமனிதனின் எண்ணவோட்டந்தான். அவனது சொந்த வாழ்வை மீளவும் ஒரு தடவை திரும்பிப்பார்க்கும் 'பின்னோக்கு' (Flash back) உத்தியினூடுதான் இக்கதை சொல்லப்பட்டிருக்கிறது 'மண்ணின் வாசம்' என இதற்கு சஞ்சிகையில் தலைப்பிடப்பட்டுள்ளபோதும், கணேசன் அதற்கு 'உள்ளே கனன்று' என மகுடமிட்டுள்ளார். இதுவே மிகப் பொருத்தமாயிருக்கும் போலப் படுகிறது.

காலியில் 'நாகாவத்தை' தோட்டத்தின் மேட்டுலயத்தில் ஆறாவது காம்பறாவில் பிறந்த முறுசாமி, 1977இல் இனக்கலவரத்தின் கோரத்தினால் கிளிநொச்சிக்கு இடம்பெயர்வது; அங்கு அவர்களுக்கு, அவர்களின் உழைப்பினால் பின்னர் உதயநகராக மாறிவிட்ட காட்டுப்பகுதியில் காணிவழங்கப் பட்டதும், அக்காடு முனுசாமியினுடையது போன்ற முன்நூறு குடும்பங்களின் உழைப்பால் குடிநிலமானது. காட்டைக் குடிநிலமாக்கும் போது முனுசாமியும் அவனது சமூகமும் சந்திக்கும் துன்பங்கள், 1996இல் அந்த நிலத்திலிருந்தும் இராணுவ ஆக்கிரமிப்பால் (ஒப்பிரேசன் சத்ஜெயவால்) இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படுதல், 2001இல் கிளிநகரம் புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் தன்னுடைய காணி சுவீகரிக்கப் பட்டுவிடுமோ? என்ற அச்சம், அதன் விளைவாக அவசரப்பட்டுக் காணியைத் துப்புரவாக்க விளைந்து மிதி வெடியில் அகப்பட்டு முனுசாமி காலை இழக்கும் துன்பியல் - இவ்வளவும் இந்தச் சிறுகதையின் உள்ளே கனன்று கொண்டிருக்கின்றன.

"ஒரு ஐஞ்சு வருசத்தில இம்புட்டுக் காடாகிப்" போய்விட்ட தனது காணியைத் துப்புரவாக்கும் முனுசாமியின் எண்ணவோட்டத்தில் இந்தக் கதை செல்கிறது. முனுசாமியின் இயல்பான மொழிநடையில் Collo guially-மலையக மக்களின் துன்பியல் வாழ்வும் அவர்கள் இனக்கலவரங்களால் பாதிக்கப் பட்டு வடக்கு நோக்கிப் புலம்பெயர்ந்து புதிய வாழ்வை அமைத்துக் கொண்டபோது எதிர்கொண்ட துன்பங்களும், அவமானங்களும்,சவால்களும் அவர்கள் அவற்றை எதிர்கொண்ட விதமும், பின்னர் தாம் வாழ்ந்த கிளிநொச்சிப் பிரதேசத்தின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்துவிடும் பாங்கும் இக்கதையில் ஒளிவுமறைவின்றிப் பேசப்படுகின்றன.

தமக்கென்று ஒரு 'கையகல' நிலங்கூட இல்லாத மலையக மக்களிற்கு, இடப்பெயர்வு சொந்த நிலத்தை வழங்கியது. காடாகக் கிடந்த அந்தக் காணிகளை யானைக்கும் நுளம்புக்கும் தடிப்புப்பிடித்த சந்தேகமும் பேராசையுங்கொண்ட மனிதர்களுக்கும் ஈடுகொடுத்துத் துப்புரவாக்கிக் கழனியாக்கி, அத்தோடு தமது வயிற்றைக் கழுவும் வாழ்க் கைப்போராட்டத்தையும் முன்கொண்டு செல்லும் 'வாழ்க்கைப் பயணத்தை' சிறப்பாகப் பதிவுசெய்திருக்கிறார் கணேசன்.

தமது நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் கடுமையாக உழைத்து வளமாக்கிய மக்களிடமிருந்து 'முப்பது வீட்டுத் திட்டம்' என்ற போர்வையில் ஒரு அரசியல்வாதி காணிகளை அபகரித்து அதனைத் தமது ஆதரவாளர்களுக்கு வழங்கிய கொடுமை; அதே ஏமாற்றினை மீளவும் 'நாற்பது வீட்டுத் திட்டம்' என்ற பெயரில் அமுல் நடத்த முயன்றபோது 'சாணி கரைத்து அடித்து விரட்டிய' அவர்களின் மண் மீதான பிடிப்பு, மண்மீட்புப் போரில் அவர்களின் பங்கெடுப்பு காலப் போக்கில் இதனையே அவர்கள் தம் தாயகமாகக் கொண்டுவிட்டது எல்லாமே இரத்தமும் சதையுமாக உள்ளே கனல்கின்றன.

இவ்வளவு பாடுபட்டுச் சேர்த்த தனது மண் 'வாராது வந்த மாமருந்து' போன்ற தனது காணி நகர விஸ்தரிப்பில் உள்வாங்கப் பட்டுவிடுமோ? என்ற அச்சம் உந்த முனுசாமி தனது வீட்டுக்காணியைத் துப்புரவாக்கும் போது வாசிப்பவரின் மனதை ஏதோ ஊடுருவுகிறது. அதில் ஒரு கீற்று இதோ!

"இல்ல... இந்த நிலத்த நான் விடவே ஏலாது. எங்கிட்டயாரும் பறிக்க வராதீங்க. இது எம் பெண்சாதி பாடுபட்ட சொத்து. அவ வெட்டின கெனம். அவவெச்ச பெலாமரோ, அவ வெச்ச ஒரு தென்னையும் இல்லியே...." மண்வெட்டியை எறிந்தான்... அருகில் நின்ற பாலைமரத்தைக் கட்டிப்பிடித்து அழுதான்.

இது மட்டுமல்ல, கள்ளுத் தவறணையில் சிவராசாவும் தருமுவும் பேசிக்கொண்டதை முனுசாமி மீட்டும்போதும், மனேச்சர் செல்லத்துரை வீட்டுக் கிணற்றில் தண்ணியள்ளும்போது மாரியாயிக்கு ஏற்படும் அனுபவங்களும் எமக்கும் மனதில் உறைக்கத்தான் செய்கின்றன.

எங்களை நாங்களே திரும்பிப்பார்க்கவேண்டிய தேவையை இந்த 'உள்ளே கனன்று' வலியுறுத்துவதாகப் படுகிறது.

எங்களோடு வாழும், எமது மக்களில் ஒரு கூட்டத்தார் நடந்து வந்த வழியின் பதிவுகளாக 'உள்ளே கனன்று' விளங்குகிறது. ஆனாலும் இது ஒரு சிறுகதைக்குள் அடங்கிவிடும் விடயமல்ல. இது கட்டாயம் ஒரு நாவலாக, குறைந்தபட்சம் ஒரு குறுநாவலாகவாவது எழுதப்படல் வேண்டும். உள்வீட்டுப் பிள்ளையான கணேசன் அதனைச் செய்யக் கூடியவராகவே இருக்கிறார். காலம் அவரிடம் அந்த நாவலை வேண்டி நிற்கிறது. இன்னுமொரு 'நிலக்கிளி'யாக அல்லது அதைவிடவும் சிறப்பானதாக அந்நாவல் வருதல் வேண்டும்.

இந்தச் சிறுகதை பற்றிய இந்தச் சிறு பத்தி மட்டும் போதுமானதல்ல இது பற்றிய கலந்துரையாடல், விவாதம் என்பன அவசியமாகின்றன. எமது மனப்பதிவுகள், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் படைப்பாளியை அவனது பாதையில் மேலும் உந்தவும், அவன் தன்னை மேம்படுத்திக் கொள்ளவும் அவை தேவைப் படுகின்றன.

'உள்ளே கனன்று' வைமையப்படுத்தியதாக மட்டுமல்லாமல் அக்கலந்துரையாடல்கள் ஆரோக்கியமான மனநிலையில் தொடர் தேர்ச்சியாக நடைபெறுதலும் எமது இலக்கியப் போக்கின் ஆரோக்கியத்துக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் வலுச் சேர்க்கும் என்பது எனது தாழ்மையான வேண்டுதலாகும்.

பு.சத்தியமூர்த்தி




## பொது அறிவு

உலகில் மிகச் சிறிய நாடு
- வத்திக்கான்

தமிழீழத்தின் தேசிய மலர்
- கார்த்திகைப் பூ

உலகில் இருண்ட கண்டம் என அழைக்கப்படுவது
- ஆபிரிக்கா

உலகில் சனத்தொகை கூடிய நாடு
- சீனா

தென்னாபிரிக்க விடுதலைக்காய் போராடியவர்
- நெல்சன் மண்டேலா

ந.சுரவீனா

## சொற்சிலம்பம் - 64

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | கோ | ம | பி | ல | ட் | ற |
| க | கு | நீ | நா | ள் | ர் | ல் |
| மா | பா | ல் | கோ | ன் | ணி | ம் |
| ஓ | அ | ச் | ய | ச | ங் | மா |
| நா | ட் | த | ஷா | ரா | வ | ர |
| தி | வ | கி | சா | ய் | ம் | தே |
| சி | பூ | ப் | ஓ | கி | வி | லோ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 62 இன் விடைகள்

01. பலஸ்தீன விடுதலை இயக்கம்

02. யசூசி அகாசி

### சொற்சிலம்பம் - 62 இன் பரிசுக்குரியவர்

வே.ரஜிதா,
796 ஏகாம்பர வீதி,
3ஆம் கட்டை,
திருகோணமலை.

### சொற்சிலம்பம் - 62 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. எ.விஜிதாகரன், இல.204, கண்டி வீதி, வவுனியா.

02. ம.நிறோஜன், யா/தாளையடி, றோ.க.த.க.வித்தியாலயம்.

03. சு.விஜிதா, வட்டக்கண்டல், மன்னார்.

04. சு.சோபியா, தரம்-07, றோ.க.பாடசாலை, புதுக்குடியிருப்பு.

05. யோ.கலாரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

06. ந.டயாழினி, யா/கொடிகாமம், தி.மகா.வித்தியாலயம்.

07. ந.வினோகாந்தன், தரம்-05, யா/உசன் இராமநாதன் ம.வி.

08. வி.விஷ்னுஜன், கேணியடி, கொக்குவில் மேற்கு.

01. அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம்.
01) ......................................

02. அணுகுண்டு விசப்பட்ட யப்பானின் நகரங்களில் ஒன்று.
01) ......................................

பெயர் :- ......................................

முகவரி :-......................................

சொற்சிலம்பம்-64
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

# எங்கள் ஆந்தை

சிலர் ஆந்தைக் கண்ணன் என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் ஏன் அவ்வாறு சொல்கிறார்கள் என்றால் ஆந்தையின் கண்கள் இரண்டும் மிகப்பெரியவை. அதாவது பறவைகளிலேயே பெரிய கண்களைக் கொண்டவை ஆந்தைகளே.

இவை இரவில்தான் நடமாடும். இவற்றின் கத்தல் எம்மைப் பயமூட்டினாலும் இவை மனிதனுக்கு தீங்கிழைப்பதில்லை.

இவற்றின் தலை உருண்டையாக இருக்கும் முகம் தட்டையானது. ஆந்தைகளுக்கு மனிதனைப்போல் நேர் எதிர் பார்வைதான். ஆனால் உடலை, அசைக்காது கழுத்தை திருப்பிப்பார்க்கும் திறன் கொண்டது. ஆந்தையால் தன் தலையை 180டிகிரிக்கு திருப்பமுடியும். இவற்றின் கால் நகங்களே இவை வேட்டையாட மிகவும் உதவுகின்றன.

இவை மரப்பொந்துகளிலும் பாழடைந்த கட்டடங்களிலும் வசிக்கும். இவை சத்தமின்றிப் பறக்கக் கூடியவை, இதனால் இவைகளிடம் இரைகள் இலகுவில் சிக்கிக்கொள்ளும்.

வண்டு, பூச்சி, பல்லி, எலி, சிறியமுயல் போன்ற சிறு பிராணிகளும் பறவைகளும் ஆந்தைகளுக்கு உணவாகின்றன. பெண் ஆந்தை வருடமொன்றிற்கு இருமுறை முட்டை இடும் 3-8 முட்டைகள் வரை இடும். 28-30 நாட்களுக்குள் குஞ்சுகள் பொரித்துவிடும்.

முட்டையில் இருந்து வெளிவந்ததும் அகோரப்பசியுடன் இருக்கும் ஆந்தைக் குஞ்சு ஒரு முழு சுண்டெலியை உண்ணும். முதலில் வெளிவந்த குஞ்சு மற்றக் குஞ்சுகளிலும் அதிக உணவுகளை உண்டு விரைவில் வளர்ந்துவிடும் இதனால் இது பசியாக



இருக்கும் நேரங்களில் பின்னர் பொரித்து நோஞ்சானாக இருக்கும் குஞ்சுகளை தின்றுவிடும். எல்லாக் குஞ்சுகளுக்கும் உணவுகொடுத்து பராமரிக்க முடியாத தாய் இதனைக் கண்டுகொள்ளாது.

ஐந்து வாரங்களில் வளர்ந்துவிடும் குஞ்சுகள் இரவில் தாய் தந்தையுடன் வேட்டைக்குச் செல்லும். வேட்டையாடத்தொடங்கி தங்களுக்குத் தேவையான உணவை தேடிக்கொண்டாலும் மூன்று மாதங்கள் வரை குஞ்சுகள் தாய், தந்தையின் கண்காணிப்பில்தான் இருக்கும்.


ஆந்தை தன் உறவுகளையும் குஞ்சுகளையும் அழைக்கவே இரவில் கத்துகிறது. இதனால் சில சிறுவர்கள் பயந்துபோய்விடுவார்கள். சிலர் அதனை பேய் கத்துகிறது என்று சிறுவர்களுக்குச் சொல்லிவிடுகிறார்கள். இது தவறானது ஏனெனில் சிறுவர்களின் மனதில் இது பசுமரத்தாணி போல் பதிந்து இரவினில் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பங்களில் ஆந்தை கத்தும் போது அச்சம் அதிகரித்து பாரிய விளைவுகளை ஏற்படுத்தி விடும். அதைவிட உண்மையில் ஆந்தை மனிதனுக்கு தீங்கிளைக்காத சாதுவான பிராணி.

ஆந்தை கத்துவது சகுணம் சரியில்லை என்று கூறுவதுடன் நெருப்பில் இரும்பை போட்டுவிட்டால் போய் விடும் எனும் மூடநம்பிக்கையுடன் செயற்படுகிறார்கள். உண்மையில் ஆந்தை மனிதனுக்கு தீங்கிளைக்கும் எலிகளைப்பிடிப்பதால் அது மனிதனுக்கு நண்பனாக இருக்கிறது. அதனுடைய முகம்தான் அகோரமானதாக இருக்கிறதே தவிர அது ஒரு சாதுவானது. எனவே ஆந்தைகளைக்கண்டு பயப்படவேண்டாம்.

எம்மில் பலர்

# முயலாரின் வீடு

பகுதி-04






பருவ வயதினரின் உணர்வுகள், நடத்தைகளை மையமாக வைத்து பல படங்கள் வரத்தொடங்கியிருக்கின்றன. பாய்ஸ், 7/G ரெயின்போ காலனி என்பவை இந்த வகையின் அண்மைய பிரதிகள்.

பெற்றோருக்கும் ரீனேஜ் பருவம் எனப்படுகிற வளரிளம் பருவத்தினருக்குமிடையில் இருக்கின்ற உறவை இந்தப் படங்கள் பேசுகின்றன. இன்னொருவகையில் பெற்றோருக்கும் ரீனேஜ் பருவத்தினருக்குமிடையில் இருக்க வேண்டிய உறவை இவை சொல்ல முற்படுகின்றன என்றுஞ்சொல்லலாம்.

ட்ரீம்ஸ், பாய்ஸ், 7/G ரெயின்போ காலனியை நேரடியாக நினைவூட்டுகிறது. சேது, குணா போன்ற படங்களை மறைமுகமாக ஞாபகப்படுத்துகின்றது. ஆனாலும் இவற்றினூடே நகர்ந்து சில சேதிகளையும் சில அடையாளங்களையும் இது வெளிப்படுத்துவதையும் அவதானிக்கலாம்.

பாய்ஸ், 7/G ரெயின்போ காலனி (சரியான உச்சரிப்பு இதுவல்ல. ஆனால் படங்களில் இப்படித்தான் போட்டிருக்கிறார்கள்) என்ற படங்களின் கதைதான் இதிலும், அதேவாழ்க்கை, அதே பிரச்சினைகள் ஆனால், கொஞ்சம் வித்தியாசப்படுத்தி சொல்லியிருக்கிறார்கள். அந்த வித்தியாசம்தான் படத்தின் சேதி.

படத்தில் ரசிப்பதற்கும் சிரிப்பதற்கும் அநேக விசயங்கள் நிகழ்கின்றன. வாழ்க்கையின் கோலங்கள் பலவண்ணங்களாலானதுதானே அழுவதற்கும் சிந்திப்பதற்கும் கூட இடமிருக்கிறது. இதிலும் திரைக்கதைக்கே வெற்றி.

படத்தைப் பார்க்கும் ஆர்வம் கெடாமல் காட்சிகளை நகர்த்திச் செல்வதில் இருக்கும் நேர்த்தி குறிப்பிடவேண்டியது. இதற்கு சுஜாதாவின் திரைக்கதையும் கஸ்தூரி ராஜாவின் நெறிப்படுத்துகையும் உதவியிருக்கின்றன. ஆனாலும் படத்தில் தனுஸின் நடிப்பைவிட, கஸ்தூரி ராஜாவின் நெறியாள்கையைவிட, இதன் திரைக்கதைதான் பலமாக இருக்கிறது. திரைக்கதைகளில் சொல்ல முற்படுவது, பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையிலான புரிந்துணர்வையும் உறவையும். குறிப்பாக ரீனேஜ் பருவத்தின் உணர்வுகளும் அதன் வெளிப்பாடான நடத்தைகளும்.

மாறிவரும் தலைமுறையின் எண்ணங்கள், சிந்தனை, ரசனை, விருப்பம், நடத்தைகள் எல்லாம் புதியதாக இருக்கிறது. இதனைப் பெற்றோரால் சரியாக விளங்கவும் முடியவில்லை: ஏற்றுக்கொள்ளவும் இயலவில்லை. பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய பயமும் எதிர்பார்ப்பும் பெற்றோரை ஆட்டிப்படைக்கிற விசயங்கள். பிள்ளைகளுக்கோ தமது சுயாதீனத்திலும் சுதந்திரத்திலும் நம்பிக்கையிலும் திறனிலும் யாரும் கைவைக்கக்கூடாது என்ற எண்ணம். இதுதான் இன்றைய குடும்பங்களின் போராட்டம், அதிலும் மத்திய தர, மேல் மத்தியதரக் குடும்பங்களின் அவலமே இதுதான்.




பிள்ளைகள் கெட்டுப்போகாமலிருக்கவேண்டும் என்று உள்ளூரவேண்டிய படியே- பதற்றமடைந்தபடியே ஒவ்வொரு பெற்றோரும் தவிக்கிறார்கள். பிள்ளைகளுடன் இறுக்கிக்கதைக்கவும் முடியாது. அது இருதரப்புக்குமிடையில் இடைவெளியை ஏற்படுத்திவிடும். ஆக நெருங்கிப் பழகினால், விட்டுக் கொடுத்தால் பிள்ளைகள் தவறுகளைச் செய்வதற்கு தாமே இடமளித்ததாகியதாகிவிடுமோ என்றும் அஞ்சவேண்டியிருக்கிறது. இரண்டுக்குமிடையிலான கத்திமுனை வாழ்வின் அவலம் சாதாரணமானதல்ல.

ட்ரீம்ஸ் இந்தப்பிரச்சினையை இதுவரை வந்த படங்களிலிருந்து கொஞ்சம் வேறுபட்ட திசைகளினூடாக அணுகிப் பார்க்கிறது. கொலிஜ்ஜில் படிக்கிற இளைஞர்கள், இளம்பெண்கள்தான் கதையின் மையப்பாத்திரங்கள். புறமையங்கள் அல்லது வளையங்கள் பெற்றோர்.

அப்பா தாராளமாகச் செல்லங்கொடுத்து, மிக நெருக்கமாக தோழமையுடன் மகனும் தானும் நண்பர்கள் என்ற அளவில் பழகுகிறார். அவருடைய கருத்து, தனக்கும் மகனுக்குமிடையான இடைவெளி பிறரை அவன் நாடிச்செல்ல வைத்துவிடும், தனது பார்வைப்புலத்திலிருந்து அது தொலைவுக்குக்கொண்டு போய்விடும் என்பது. ஆகவே இடைவெளியற்று நெருக்கமாக இருக்கிறார். வேண்டிய சுதந்திரத்தை அளிக்கிறார். அவனுடைய அந்தரங்கம் வரை அவருக்குத்தெரியும். ஆனாலும் அந்த இளைஞனின் பிரச்சினைகள் அவனுடைய கையையும் அவருடைய கையையும் மீறிப்போய் விடுகிறது.

இதேமாதிரி அடுத்த குடும்பங்களிலும் பிரச்சினைகள் இவனுடன் படிக்கும் சக மாணவியின் வீட்டில் கண்டிப்பான அப்பா, அப்பாவின் கண்டிப்பையும் அறிவுரைகளையும் விலக்குவதற்காக அவரின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டி மடக்கும் மகள், தன்னுடைய பலவீனங்களை அன்றிலிருந்து கைவிடுகிறார் தந்தை. ஆனால் மகள் கட்டற்ற சுதந்திரத்தில் புதிய உலகில் திரிகிறாள்.

தந்தை எதிர்பார்த்தபடி - பயந்தபடியே மகள் பாதிக்கப்படுகிறாள்.

அடுத்ததரப்பில் இன்னொரு சக மாணவி. அப்பாவி, வீடே உலகம் என நம்பிய பஞ்சாங்கம். அவள் வெளியுலகால் - புதிய இளைஞர்களின் போக்குகளுக்கு இழுத்துவரப்படுகிறாள். அவளுடைய வாழ்வுக்கும் இயல்புக்கும் முரணாக அவள் புதிய பழக்கங்களுள் நுழைகிறாள். அவளுடைய தாயின் தவறுதலான புரிதல்கள் இந்தப்பெண்ணை நிபந்தனையற்ற வெளியில் கொண்டுவந்து விடுகிறது. அமைதியாக, தானுண்டு, தன் பாடுண்டு என்றிருந்தவளின் உணர்வுகளைத் தூண்டி காதல் வரையில் கொண்டுவந்துவிட்டு அந்த இளைஞன் வேறொரு பெண்ணுடன் தொடர்புவைத்துள்ளான் என்றறிகையில் அதைத்தாங்க முடியாமல் தற்கொலை செய்கிறாள். சும்மாயிருந்தவளைச் சீண்டியவன் இடையில் அவளுக்கு துரோகமிழைப்பதை எப்படி அவள் சகித்துக் கொள்வாள்- குடும்பம் என்ற கட்டுப்பெட்டித்தனத்துள் வாழ்ந்தவளல்லவா அவள்.

எல்லாப்பிரச்சினைகளும் நீதிமன்றுக்கு வருகின்றன. நீதிமன்றத்திலிருந்தே கதை பின்னோக்கி நினைவூட்டலாகத் தொடங்குகிறது. பல சேதிகளையுணர்த்துவது படத்தின் நோக்கம்.

அளவுக்கதிகமான சுதந்திரத்தைக் கோருகிற பிள்ளைகள் அதற்குரிய பொறுப்புடன் நடந்துகொள்வதில்லை என்பது அதிலொன்று.

பிராமணக் குடும்பங்களின் கையறு நிலையை பரிதாப நிலையைக் காட்டுவது மற்றொன்று. அவர்களுடைய வாழ்க்கையின் உயர்வை, அதன் பெறுமானங்களை சடங்காசாரங்களை காட்டுவது வேறொன்று. இங்கே பிராமணர்களை உயர்த்துகிற உள்நோக்கம் பலமாகச் செயற்படுவதைக் காணமுடியும். பிராமணவீடுகள் புனிதமானவை, கபடமற்றவை கலாசாரத்தின் இதயமானவை அவை என்ற விதத்தில் அதற்கு அழுத்தம் தரப்படுகிறது. அவர்கள் இன்று வெறும் வீட்டுப் பூச்சிகளாக - அப்பிராணிகளாக இருக்கிறார்கள் என்ற விமர்சனமும் இதிற்சேர்ந்திழையோடுகிறது.

தவறிவிடுகிற பெண் டொக்ரரிடம் தீர்வுக்கு வருகிறாள். பொறுப்பில்லாமல் நடப்பவர்களுக்கு விஞ்ஞானம் உதவும் என்ற நம்பிக்கைதானே உனக்கிருக்கிறது. என்ற டொக்ரரின் கேள்வியிலும் நிறைந்திருக்கிறது பல சேதி.

படிக்கும் காலத்து குறும்புகளும் நினைவுகளும் என்றைக்கும் பார்க்கமுடியாதவை. அவை இனிய கனவு என்பதே படத்தின் சாரம். 'இன்றைய படங்களுக்கு கதைகள் கிடைப்பதே அரிது' என்று இயக்குநர் பாரதிராஜா குறிப்பிட்டது உண்மை போலத்தானுள்ளது.

தொடர்ந்து கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களின் கதைகளோடுதான் படங்கள் வருகின்றன. இது இன்று வியாபார ரீதியாக வெற்றியுமடைகிறது. காரணம், பிள்ளைகளைப்பற்றி அறியவேண்டிய ஆர்வத்திலிருக்கிறார்கள் பெற்றோர்கள். இளைய தலைமுறையின் லீலைகள், சேட்டைகள், பிரச்சினைகள், பழக்கவழக்கங்களை அவர்களுக்கே அறிமுகப்படுத்துகிறமாதிரியான பிள்ளைகளின் காட்சிகள் பிள்ளைகளுக்கு ஆக இரண்டு தரப்புக்கும் இந்தமாதிரிப்படங்கள் அவசியமாயுள்ளன. இந்த அவசியத்தில் மடியை நிறைக்கிறார்கள் இந்தச் சீசனின் சினிமாவைத்தருகிறவர்கள். ட்ரீம்ஸ் இதில் ஒரு கனவு.

ஆரதி

# அடையாளத்தேடி...

எதிர்பாராதவிதமாக, அண்மையில் ஒரு யப்பானியரைச் சந்தித்தேன். தமிழர்களின் கலாசார முயற்சிகள் பற்றி அறிவதில் ஆர்வமாயிருந்தார் அவர். யப்பானியர்களின் சராசரி உயரம். மெல்லிய குரலும் உடலும்.

அவர்வந்திருந்த வாகனம் TOYOTO வகையைச் சேர்ந்தது. அவர்கட்டியிருந்த மணிக்கூடு Casio. அவர் பயன்படுத்திய கமெரா Nikon. எல்லாமே அவருடைய நாட்டின் உற்பத்திகள், யப்பானில் தயாரிக்கப்பட்டவை. அவர்போட்டிருந்த உடைகள், பாதணிகள், வைத்திருந்த பை எல்லாமே யப்பான் தயாரிப்புகள். அவர் எழுதும்போது பயன்படுத்தியபேனை, நோட்புத்தகம் கூட யப்பான் பொருட்கள்தான்.

மிகச் சாதாரணமாக கதைத்தார். எளிமையாக இருந்தார். பல விடயங்களையும் விரிந்த அறிவுடன் பேசினார்.

'பிறநாட்டு உற்பத்திகள் எதையும் பயன்படுத்தமாட்டேன்' என்ற தீர்மானமோ பிடிவாதமோ அவருக்கில்லை. தனது நாட்டின் தயாரிப்பில் உருவான பொருட்களை பயன்படுத்துகிறார். அவை இலகுவாகக் கிடைக்கின்றன. வேறுநாட்டின் உற்பத்திகளைப் பயன்படுத்துவதில் ஆட்சேபனையில்லை. ஆனால், அவரைப் பொறுத்தவரையில் அதற்கு அவசியமில்லை. எனவே, தமது உற்பத்திகளை பயன்படுத்துகிறார், அவ்வளவுதான்.

நான் அவரை ஒருகணம் வியந்து பார்த்தேன். அவரை மட்டுமல்ல. எல்லா யப்பானியர்களையும் நினைத்துப்பார்த்தேன். அவர்கள் தமக்குரிய உலகத்தை தாமே நிறைவாக உருவாக்கியிருக்கிறார்கள். தங்களுக்கானவைகளை தாமே தயாரிக்கிறார்கள். இதனால் யாருடைய தயவிலும் தங்கியிருக்கவேண்டிய அவசியமில்லாதவர்கள். எப்போதும் புதிது புதிதாக எதையாவது கண்டுபிடிக்கிறார்கள். புதிது புதிதாக தொடர்ந்து உற்பத்திகளைச் செய்கிறார்கள். புதிய வடிவங்கள், புதிய பயன்பாடுகளில் அந்தத் தயாரிப்புகளிலிருக்கின்றன. தரமும் சிறப்பும் மிக்கவையாக அவற்றைச் செய்கிறார்கள். அப்படித் தயாரிப்பவற்றை தங்களின் முழுப்பயன்பாட்டுக்கு அப்பால் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். உலகச் சந்தையில் செல்வாக்குச் செலுத்துமளவுக்கு அவர்களுடைய சிந்தனையும் உழைப்பும் படைப்புகளாகியிருக்கின்றன.

கட்டையானவர்கள். கடலாற்சூழப்பட்ட தீவிலிருப்பவர்கள். யுத்தங்களால் சிதைக்கப்பட்டவர்கள். அணுகுண்டினால் அழிவையும் அவலத்தையும் சந்தித்தவர்கள். இன்று எல்லாவற்றையும் கடந்து புதிய ஆளுமையுடன் நிற்கிறார்கள்.

நாங்கள் எங்களின் பழம் பெருமையைப் பேசிக்கொண்டேயிருககிறோம். சுயமாக சிந்திப்பதற்கும படைப்பதற்கும் முன்னேறுவதற்கும் சொந்தக்காலில் நிற்பதற்கும் முடியாமலிருக்கிறோம். ஏன் எம்மால் நகர முடியாமலிருக்கிறது என்று கேட்டால் உடனேவரும்பதில் 'எங்களுக்கென்றொரு ஆட்சியில்லாமல் இருக்கிறது' என்பதாகும். சரி, ஏன் ஆட்சியில்லாமற் போயிற்று, அல்லது ஒரு ஆட்சியை ஏன் எம்மால் பின் னாளில் உருவாக்கமுடியாமற் போயிற்று என்று கேட்டால் அதற்குப் பதில் கிடையாது. சிலர் ஏதாவது சாட்டுப் போக்குகள் சொல்லி மழுப்பு வார்கள்; அல்லது பின்வாங்கு வார்கள்.

உண்மையில் ஆட்சி கிடைத்த பின்தான் எதையும் செய்ய முடியும் என்பது முழுவதும் சரியானதல்ல. யூதர்கள் தமக்கென்றொரு நாடு கிடைப்பதற்கு முன்பே தமது அடையாளத்தை சிந்தனைமூலமாகவும் படைப்புகளின் வழியாகவும் நிரூபித்துவிட்டார்கள். உலகெங்குமுள்ள சிந்தனையாளர்களிலும் விஞ்ஞானிகளிலும் யூதர்களே கூடுதலாக இருப்பதை அவதானிக்கலாம்.

முன்னேற வேண்டுமானால் முதலில் உண்மையைக் கண்டறிய வேண்டும். கண்டறிந்த உண்மையில் என்ன தவறுகள் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரியலாம். அந்தக்குறைபாடுகளையும் தவறுகளையும் நீக்கினால் அல்லது திருத்தினால் கணிசமான அளவுக்கு முன்னகர்ந்துவிடலாம். உண்மையைக் கண்டறிவதற்கு முதலில் தைரியம் வேணும். வளர்ச்சி நோக்கிய வேட்கையும் சிந்தனை முறையுமிருக்கும் வாழ்க்கையில்தான் இது தித்திக்கும். எங்களிடையே அளவற்ற மனத் தயக்கங்களும் தடைகளுமுண்டு. சாதி,மதம், உழுத்துப்போன பண்பாடு என்ற வரையறைகளுக்குள் நிற்கின்ற வாழ்க்கை அமைப்பில் சுய சிந்தனைக்குப் பெறுமானம் ஏற்படாது.



சுய சிந்தனைக்குப் பெறுமானம் ஏற்பட வில்லையென்றால் உண்மைக்கு இடமில்லை. நீதியோ நியாயமோ குறையுடன்தானிருக்கும். அதுவும் சார்புநிலைப்பட்டேயிருக்கும்.

இன்று சுயமாக வாழ்வதற்கும் சிந்திப்பதற்கும் ஒரு போராட்டம் நடக்கிறது. இது தனியான ஆட்சிக்கானது தனியான ஆட்சியில்தான் வளங்களைப் பிரயோகிக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும் என்று சொல்கிறவர்கள், இப்போது இந்தப் போராட்டத்துக்கு முழுவலுவைத்தரவேண்டும். வளப்பிரயோகமும் அதற்குரிய வாய்ப்பளிப்பும் வசதிகளும் உருவாக வேண்டுமென்றால் அதற்கான வழியைக் கண்டுபிடிப்பதுதானே முதல்வேலை.

எங்களுடைய கல்வி முறையிலும் வாழ்க்கைமுறையிலும் சுயசிந்தனைக்கு இடமில்லை. அதற்குப் பெறுமானமும் இல்லை. விதிவிலக்காகச் சுயசிந்தனையிலீடுபடுகிறவர்களுக்கு எங்களிடையே மதிப்புக்கிடைப்பதும் இல்லை. அந்தப் பெறுமானத்துக்குரிய இடம் இருப்பதுமில்லை. இதனால் சுயசிந்தனைப் பாரம்பரியம் என்பது எங்களிடையே துலக்கமாக நிகழாமலேயிருக்கிறது. அப்படியிருந்தும் சிந்திப்பவர்கள் வேற்றுச் சூழலுக்குப் போய்விடுகிறார்கள்.

இன்று நிகழ்கின்ற போராட்டம் ஓரளவுக்கு சுயசிந்தனையை, திறன்களை வளர்க்க உதவுகிறது. இந்தக்கட்டுரைகூட அதன் ஒரு வெளிப்பாடுதான்.

அன்று அந்த யப்பான்காரரைப்பார்க்கும் போது மனம் என்னைப்பற்றி - எம்மைப்பற்றியும் கணக்கிட்டது.

இன்றுகூட, புலம்பெயர் நாடுகளில் வளர்ச்சியடைந்த நாடுகளில் எல்லாம் எங்களவர்கள் இருக்கின்றபோது கூட நாங்கள் சில புதிதுகளையேனும் செய்யத் தொடங்கவில்லை.

"திக்கெட்டும் செல்வீர், கலைச் செல்வம்யாவும் கொண்டு வருவீர்" என்று பாரதிசொன்ன கவிதையை பலதடவை உரத்துச் சொல்லியிருப்போம். ஆனால், அந்தக் கவிதையின் பொருளை உணர்ந்த மாதிரியாகக் காரியம் நடந்ததில்லை. எல்லாமே வாய்ப்பேச்சில் வீரம் என்ற கதைதான். நாங்கள் பாவிக்கின்ற பொருட்கள் எல்லாம் வேறு யார் யாரோ கண்டு பிடித்தவைகள்; பிறர் உற்பத்தி செய்கிறவைகள், சமையல் பாத்திரத்திலிருந்து எழுதுகிற பேனை, குத்துகிறகுண்டூசி,வாகனங்கள், மருந்துப்பொருட்கள், கடதாசி, மணிக்கூடு, வானொலி, தொலைக்காட்சி, அச்சியந்திரம் அது.இது என்று எல்லாமே பிறரின் பொருட்கள்தான். உணவுப்பொருட்களிலும் முக்கால் [illegible]ாசிக்குமேல் பிறத்தியாருடைய [illegible]வையே.

வேண்டுமானால் ஒருதரம் உங்களுடைய வீட்டில் எங்களுடைய உற்பத்திகள், கண்டுபிடிப்புகள் என்று எவையெல்லாம் இருக்கின்றன என்று பட்டியலிட்டுப்பாருங்கள்.

ஏன் நீங்கள் போட்டிருக்கின்ற உடைகள்கூட பிறருடைய தயாரிப்புகள்தான். ஆக கழற்றிவிட்டால் ஒன்றுமேயில்லை. மிஞ்சுவது நிர்வாணந்தான்.

இதில் கோவப்படுவதற்கோ வெட்கப்படுவதற்கோ எதுவுமில்லை. இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொண்டால் நாம் அடுத்தகட்ட வளர்ச்சிக்குப் போய்விடலாம். அது அவசியமானது.

அன்று அந்த யப்பான்காரரின் முன் நிர்வாணமாக நிற்பதாகவே நான் உணர்ந்தேன். தொடர்ந்தும் இப்படி நாங்களிருக்கமுடியாது. நாங்களும் மனிதர்தான்.

மனிதராக வாழ்வதற்கு பிறருடைய உழைப்பையும் சிந்தனையையும், உற்பத்திகளையும் அனுபவிக்கிற நாங்கள் பதிலாக இந்த உலகத்துக்கு எதைக் கொடுக்கிறோம்.

இந்த உலகமும் இந்த வாழ்க்கையும் மனித உழைப்பினதும் சிந்தனையினதும் பெறுபேறுதான் இதில் எங்களின் பங்கிருக்க வேண்டாமா?

எங்களின் அறிவை நாங்கள் கண்டுபிடிப்புக்கும் உற்பத்திக்குமாக மாற்றும் போது எங்களின் சுய அடையாளங்கள் துலக்கம் பெறும், பலமடையும். அது மொழி, தேசம், பண்பாடு, வாழ்க்கை, ஆட்சி, அனைத்திலும். அதுவரையிலும் எங்களின் மண்ணிற்கூட மாற்றாரின் வாழ்க்கையைத்தான் வாழமுடியும்.

கருணாகரன்.




# சமூகப் பணிகளும் பெண்களும்



இன்று சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கிராம மட்டத்தில் பல மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கிராம மாதர் சங்கம், மகளிர் சேமிப்புக் குழுக்கள், பெண்கள் மேம்பாட்டுக் குழுக்கள் போன்ற பெண்களை உள்ளடக்கி பல குழுக்கள் கிராம மட்டத்தில் இயங்குகின்றன. இவற்றின் ஊடாக பல அபிருவிருத்தி நிறுவனங்களும், திணைக்களங்களும் பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்கின்றன. அடிமட்ட மக்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை தோற்றுவிப்பது உட்பட பல அபிவிருத்தித் திட்டங்களை இக்குழுக்கள் முன்னெடுக்கின்றன.

இவ்வாறான குழுக்களில் அங்கத்துவம் வகிக்கின்ற பெண்கள் அந்த சமூகத்துக்குள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை சற்று விரிவாகப்பார்ப்போம்.

முதலில் ஒரு பெண் கிராமமட்ட அமைப்பொன்றில் பங்கெடுப்பதனால் தன் கணவனின், தன் குடும்பத்தாரிடம் சம்மதம் பெறப்பட வேண்டும். இவ்வாறு கிராமமட்ட அமைப்பில் பங்கெடுக்க பெரும்பாலான பெண்களுக்கு பச்சைக் கொடி காட்டப்படுவதில்லை. அடுத்து பின்தங்கிய கிராமமானால் கல்வி கற்ற, அல்லது ஒரு தொழில் நிறுவனத்தில் கடமையாற்றும் சில பெண்கள் இக்குழுக்களில் பங்கெடுப்பதில்லை. இதில் பங்கெடுப்பது தங்களின் கௌரவப் பிரச்சினையாக நினைக்கிறார்கள். அல்லது பின்னாளில் தங்களின் மதிப்பிற்கு இழுக்கு ஏற்படும் என நினைக்கிறார்கள். இதனால் சில பெண்கள் இக்குழுக்களில் அங்கம் வகிப்பதில்லை.

இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு அப்பால் சில பெண்கள் இந்த சமூகத்தை முன்னேற்ற வேண்டும். தங்கள் கிராமம் அபிவிருத்தியடைய வேண்டுமென முன்வந்து அக்குழுக்களில் இணைந்து தலைமை வகித்து செயற்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயம். ஆனால், இவர்கள் பாராட்டப் படுதலுக்கு மாறாக சமூகத்தில் உட்பட பல சந்தர்ப்பங்களில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனால் இவர்கள் உளநெருடல்களுக்கு உள்ளாகி இவ்வாறான பணிகளில் இருந்து விலகி விடுகிறார்கள்.

இதைவிட இவர்களிற்கு சேவைக்கான மதிப்பு சில நிறுவனங்களாலும், திணைக்களங்களாலும் வழங்கப்படுவதில்லை. அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து கொண்டு செல்லும் பிரச்சினைகள் ஆராயப்படுவதில்லை. இதனாலும் அவர்கள் உள நெருடல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு பின்தங்கிய கிராமம் ஒன்றின் கிராம மட்ட அமைப்பின் தலைவியோ செயலாளரோ ஒரு திணைக்களத்திற்கோ, அல்லது நிறுவனத்திற்கோ சென்றால் பல மணி நேரம் அதன் வாசலில் காத்துக்கிடக்க வேண்டும். அதேநேரம், ஒரு செல்வந்த உயர்ந்த பெண்மணி தன் சொந்த விடயமாக அதே அலுவலகத்திற்கு சென்றால் ஒரு குறுகிய நேரத்துள் அவரின் அலுவல் முடிவுறுத்தப்பட்டு அனுப்பப் படுவார். இதில் வித்தியாசம் என்னவெனில் தன்னுடைய குடும்ப சுமையையும் பாராது சமூகத்திற்காக, நூற்றுக்கணக்கான மக்களின் பிரதிநிதியாக ஒரு அலுவலகத்திற்கு செல்லும் பெண் வாசலில் காத்திருக்க, தன்னுடைய சொந்த விடயமாக வரும் ஒரு பெண்ணைக்கண்டு எழுந்து நின்று கதிரையை இழுத்துவிட்டு காரியத்தை முடித்தனுப்பும் அலுவலகங்களாலும் சமூகப்பணி செய்யும் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

ஒரு கிராமமட்ட அமைப்பில் அங்கம் வகிக்கும் பெண்கள் தங்களுடைய சமூகத்தில் கூட பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அண்மையில் ஒரு மகளிர் குழு ஒன்றின் தலைவி எம்மிடம் கூறினார். "பொதுத்தொண்டு செய்யலாம் எங்கட ஊர்ச்சனத்தின்ர வாய்சரியில்லை" என்று அவர் அவ்வாறு கூறியதற்கான காரணம் இக்கிராம மக்கள் இக்குழுக்களில் அங்கம் வகிப்போர். ஒரு வருமானத்துடன் செயற்படுவதாக, அல்லது நிதிகளை கையாடல் செய்திருப்பார்கள் எனும் நினைவுடன் அல்லது இவர்களுக்கு இப்பணிகளுக்கு வேதனம் வழங்கப்படுவதாக நினைக்கின்ற அறியாமையே காரணமாகின்றது. இதனை உறுதிப்படுத்துவதுபோல் ஒரு பின்தங்கிய கிராமம் ஒன்றின் பெண்மணியிடம் கிராமக் குழுக்களின் செயற்பாடு பற்றிக் கேட்டபோது இடையே ஒரு வசனத்தை அவர் பாவித்தார். "இலாபமில்லாமலா இவை திரியினம்" என்று. இவ்வாறான அறியாமை உள்ள சில பெண்களும் கிராமங்களில் உண்டு. இவை பின்தங்கிய கிராமமானாலும் சரி, அல்லது ஓரளவு வளர்ச்சியடைந்த நகர்ப்புறங்களை அண்டிய கிராமமானாலும் சரி இவ்வாறான பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. இதற்காக சமூகப்பணி செய்யும் பெண்கள் அதில் இருந்து பின்வாங்குவது மடமைத்தனம்.

இவ்வாறு கதைப்பவர்களுக்கு சரியான தெளிவை ஏற்படுத்தி அவர்களையும் உள்வாங்கி செயற்படல் வேண்டும். ஏனெனில் சமூகம் என்பது ஒரே மாதிரியான கருத்தை, பார்வையை கொண்டிருப்பதில்லை. நன்மையை விட தீமைக்கே துணை போகக் கூடியதுதான் சமூகம்.அதை சரியானவழியில் பயன்படுத்த வேண்டியது நாம்தான். இதற்கு ஒரு அறிஞரின் கதையைப்பார்ப்போம்.

ஒரு குதிரை வீரன் இரவு நேர பயணமொன்றை மேற்கொண்டான். நீண்ட பயணத்தினால் களைப்படைந்த குதிரை காலிடறி கிடங்கினுள் விழுந்துவிட்டது. அயலவரிடம் குதிரையை வெளியே எடுக்க உதவிகோரினான் கிடைக்கவில்லை. ஆனால் குதிரை கத்தியது. அதனால் அயலில் இருந்தவர்களின் நித்திரை குழம்பியது. அந்த குதிரை வீரனை திட்டினார்கள். அவனிடம் "உன் குதிரையை கொன்றுவிடு எம் நித்திரையை குழப்புகிறது" என்றார்கள். அதற்கு குதிரை வீரன்"வாருங்கள் அதனை வெளியே தூக்குவோம்" என்றான் அதற்கு அவர்கள் உடன்படவில்லை. பின்னர் அவன் அவர்களிடம் கூறினான், "எல்லோரும் மண்ணை அள்ளி குதிரையின்மீது போடுங்கள் அதனை மூடிவிடுவோம்" என்று எல்லோரும் புழுதி மண்ணை அள்ளி குதிரையின்மீது போட்டார்கள். குதிரைதன் முதுகில் வீழ்ந்த மண்ணை உதறிக் கொண்டும், காலால் மிதித்துக் கொண்டு மிருந்தது. இதனால் குதிரை வீழ்ந்த கிடக்கு நிரவப்பட்டது. குதிரை மேலே வந்ததும் குதிரை வீரன் தன்குதிரையுடன் பயணத்தை தொடர்ந்தான்.

சமூகம் என்பது இதுதான் பள்ளத்தில் வீழ்ந்தவனை மேலே தூக்குவதைவிட அவனை புதைப்பதை இலகுவானது என நினைக்கும் சமூகம். இந்த சமூகத்துள் பொதுநலப்பணியாற்றுவது ஒரு சிரமமான, அதே வேளை உயர்ந்த பணியாகும். இதில் கண்ணதாசன் ஒரு கவிதையில் குறிப்பிடுவது போல் "போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்" எனநினைத்து உங்கள் மீது விழும் புழுதிகளை படிக்கற்களாக மிதித்து உங்கள் சமூகத்தை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டும்.

**அ.பிரகாஷ்**

## இப்படிச் செய்யலாம்...

விபத்துக்கள் நிறைந்த உலகில் இன்றைக்கு நாம் வாழுகிறோம்: வெளியில் மட்டுமா? வீட்டுக்குள்ளும் தான் விபத்துக்கள். எதிர்பாராமல் ஏற்படுகின்ற விபத்துக்களுக்கு வைத்தியர்கள் வருவதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய முதல் உதவிகளையும் தெரிந்து வைத்திருப்பது நல்லது அல்லவா? முதலுதவி இல்லாமல் போன தா[illegible] தவிர்க்கப்படக்கூடிய மர[illegible]ங்களும் ஏற்பட்டுள்ளன.

✤✤✤

பெரிய காயங்கள் ஏற்பட்டால், காயம் அடைந்தவரை உடனே படுக்க வைத்தால் இரத்தம் வீணாக வெளியேறுவது நிற்கும். அப்படியும் நிற்காவிட்டால், காயமடைந்த பகுதி அவரது இருதயத்திற்கு மேலே உயரமாக இருக்குமாறு செய்யுங்கள். ஆனால் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் இப்படிச் செய்யக்கூடாது. அப்பொழுது நோயாளியை அசையவிடக்கூடாது. உடைந்த எலும்புகளின் கூரான பகு[illegible] சதைகளில் தைக்க நேரலாம்.

✤✤✤

காயத்தின் மேலுள்ள அழுக்கு, மண், துணி முதலியவைகளை நோகாமல் அகற்றுங்கள் ஆனால், காயத்தின் மேல் உறைந்திருக்கும் இரத்தத்தை அகற்றக் கூடாது.இரத்த ஒழுக்கை கட்டுப்படுத்துவதற்கு இயற்கை கையாளும் வழி இது, பின்பு 'அண்ட்டி - செப்டிக்' மருந்து தடவி, தூய்மையான துணியை மடித்துக் கட்டி வையுங்கள்.

✤✤✤

எலும்பு முறிந்தால், உடைந்த எலும்புகளின் இருமுனைகளை ஒட்டுகிற மாதிரியான நிலையில் நோயாளியை படுக்கவைக்கவேண்டும். அடிபட்டவர் அலுங்கக் கூடாது நீங்களும் அவரை அசைக்கக் கூடாது. எலும்பு முனைகள் தசைகளுக்குள் நுழைந்தால், சீழ் பிடிக்கும்.

✤✤✤

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## இயற்கை லட்டு

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பேரீச்சம் பழம் | - தேவையான அளவு |
| உலர்ந்த திராட்சை | - ,, |
| முந்திரிப் பருப்பு | - ,, |
| பாதாம்பருப்பு | - ,, |
| வேர்க்கடலைப் பருப்பு | - ,, |
| கொப்பரைத் தேங்காய் (துருவியது) | - ,, |
| ஏலக்காய்த் தூள் | - ,, |




*செய்முறை:-*

மேலே கூறிய எல்லாவற்றையும் சேர்த்து உரலில் போட்டு இடித்து நெல்லிக்காயளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். பல நாட்களுக்குக் கெடாது, மிகவும் சத்துள்ள உணவு. வளரும் குழந்தைகளுக்கு நல்லது. மிக அதிகமாகச் சத்துக்கள் இருப்பதால் வயதானவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு உருண்டைகளுக்கு மேல் சாப்பிடவேண்டாம்.

சாதாரண தேங்காயை உடைத்துத் துருவி வெயிலில் காயவைத்து எடுத்து வைத்துக்கொண்டால் இதை கொப்பரைத் தேங்காய்க்குப் பதிலாக உபயோகிக்கலாம். வெண்மையாக இருக்கும். சுவை தருவதிலும் சிறந்தது.

## மழைகாலங்களில் தேவையற்ற கிடங்குகளை மூடிவிடவேண்டும

*மழைகாலத்தினால் எமது கிணறுகள் நீர் நிறைந்து காணப்படும். ஏன் வீட்டின் அருகில் தேவையற்ற வகையில் வெட்டப்பட்ட சிறிய கிடங்குகள் கூட நீரினால் மூடப்பட்டிருக்கும். சிறுவர்கள் விளையாடச் சென்று இதில் விழுந்து விபரீதத்தை ஏற்படுத்தி விடுவார்கள். எனவே எமது கிணற்றைக் (கட்டுக்கிணறு அல்லாவிடில்) வேலி இட்டு பாதுகாப்பாக வைத்திருப்போம். அத்துடன் தேவையற்ற கிடங்குகளை மூடிவிடுவோம்.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்–25**

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# தொடர்ந்தும் ஏமாற்றும் சச்சின் டெண்டுல்கர்

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் கிரிக்கெட் ரசிகர்களால் அதிகம் பேசப்படுபவருமான சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் உலகில் இருந்து காணாமல் போய்விட்டாரா?

இல்லை அவர் இந்திய அணியில் இன்றும் ஆடிக்கொண்டுதான் இருக்கின்றார். ஆனால் பெயர் அடிபடும் அளவிற்கு அவரது திறமை வெளிப்படவில்லை என்பதே அவர் காணாமல் போய்விட்டார் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி விட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியுடன் மூன்று ஒரு நாள் போட்டிகளில் தொடர் தோல்வியை சந்தித்தது.

இதனால் அணிக்கு சச்சின் வெகு விரைவில் திரும்ப வேண்டும் என்ற இந்திய ரசிகர்கள் பிரார்த்தனையே நடத்தினர்.

இந்நிலையில்அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் பரபரப்புக்கு மத்தியில் இணைந்து கொண்டார் சச்சின் டெண்டுல்கர்.



ஆனால்,அவராலும் அவுஸ்திரேலிய அணியின் வரலாற்றுவெற்றியை தடுத்து நிறுத்த முடியவில்லை. இத்தொடரில் சச்சினால் ஒரு இன்னிங்ஸ் மாத்திரமே 50 ஓட்டங்களை தாண்ட முடிந்தது. இந்நிலையில் ரசிகர்களின் எதிர்பார்ப்பையும். அணியின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்ய முடியாது போன சச்சின் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் மீண்டும் தனது திறமையை நிருபிப்பார் என எதிர் பார்க்கப்பட்டது.

இந்திய அணி அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தின் போதும் பாகிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் மண்ணில் வைத்தும் இந்திய அணி வரலாற்று சாதனை படைக்க தனது துடுப்பால் பதில் சொன்ன சச்சின் அண்மையில் சிறிலங்காவில் நடை பெற்ற ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் உபாதை காரணமாக விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

இது இந்திய அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதுடன் வீழ்ச்சிக்கு ஒரு வகையில் காரணமாகவும் அமைந்துவிட்டது.

இந் நிலையில் அணியும் மோசமான தோல்விகளை சந்தித்ததுடன் பல தொடர்களையும் இழந்தது. குறிப்பாக

ஆனால் அவரால் அதிகபட்சமாக 20 ஓட்டங்களையே பெறமுடிந்துள்ளது. இது அனைவருக்கும் ஏமாற்றமாக அமைந்துள்ளதுடன் அவரை பொறுத்தும் சங்கடமான ஒன்றாகவும் அமைந்துவிட்டது.

உலகின் முன்னணி பந்து வீச்சாளர் அனைவரையும் தனது மதிநுட்பமான துடுப்பாட்டத்தின் மூலம் திணறடித்து ஓட்டங்களை குவித்து பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளன சச்சினின் தற்போதைய நிலை கவலைக்குரியதாக மாறியுள்ளது கிரிக்கெட் ரசிகர்களைப் பொறுத்த மட்டில் ஏமாற்றமான ஒன்றே.

களத்தில் இறங்கிவிட்டால் சதம் அரைச்சதம் என ஓட்டங்களை பெறும் சச்சின் டெஸ்ட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களை பூர்த்திசெய்ய சொற்ப ஓட்டங்கள் தேவையான நிலையில் அதனையே பூர்த்தி செய்ய முடியாது திணறுகின்றார்.

இவை ஒரு புறமிருக்க சச்சின் தொடர்ச்சியா பிரகாசிக்க தவறுவது அவர் மீது ரசிகர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்துவதுடன் அவர் அணிக்கு சுமையாக இருக்கின்றாரா என்ற தோற்றப் பாட்டையும் ஏற்படுத்தவிடுமோ என்ற நிலையையும் ஏற்படுத்திவிடும்.

எது எவ்வாறு இருப்பினும் சாதனை நாயகன் சச்சின் மீண்டும் பிரகாசித்து ஆடுகளங்களை அதிர வைக்க வேண் டும் என்பதே அனைவரதும் எதிர் பார்ப்பாகவுள்ளது. □

# திடீர் வாகன விபத்து கவாஸ்கர் மகன் உயிர்தப்பினார்

கொல்கத்தாவில் திங்கட்கிழமை இரவு நடந்த கார் விபத்தில் தனது மகன் ரோஹன் கவாஸ்கருடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் முன்னாள் இந்திய கிரிகெட் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர்தனது நண்பரைக் காண்பதற்காக ரோஹனுடன் சான்ட்ரோ காரில் புறப்பட்டுள்ளார். கவாஸ்கர் கொல்கத்தாவில் தான் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் ஒருவான் அவரது காரை இடித்தது இதனால் அதிர்ச்சியடைந்தாலும் தந்தையும், மகனும், பயணத்தை தொடர்ந்தனர். மீண்டும் அதே வான் கடுமையாக மோதியது இதனால் நிலைகுலைந்த கவாஸ்கர் நிற்காமல் சென்ற அந்த வானை மடக்கி பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.




கிரிக்கெட் வீரர்களான நியூசிலாந்தின் ரிச்சர்ட்சன், அவுஸ்திரேலியாவின் டேரன் லேமன் பங்கேற்ற வித்தியாசமான 110 மீற்றர் ஓட்டம் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா வின் அடிலெய்ட் நகரில் நடந்தது. சேவை அமைப்புக்கு நிதிதிரட்ட நடந்த இந்தப் போட்டியில் ரிச்சர்ட்சன் (முதலில்) வெற்றி பெற்றார்.

# சாதனைக்குரிய வீரர் மத்தியூ ஹைடன்

அவுஸ்திரேலிய அணியின் மத்தியூ ஹெய்டன் என்றால் யார் என்பதை கிரிக்கெட் ரசிகர்களுக்கு கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி பந்துகளை துவம்சம் செய்யும் அணியின் நம்பிக்கைக்குரிய வீர் ஒருநாள் போட்டி என்றாலும் சரி டெஸ்ட் போட்டி என்றாலும் சரி அணிக்கு வலுவான அடித் தளம் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பவர்.

குறிப்பாக டெஸ்ட் போட்டியில் ஜஸ்ரின் லாங்கருடன் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கும் இவர். தூணாக நின்று பந்துகளை நாலா பக்கமும் விளாசித் தள்ளுவார். தற்போது கிரிக்கெட் அரங்கில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

2000ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் நிலைத்துவரும் இவர் களத்தில் நிலைத்து ஆட ஆரம்பித்து விட்டார் என்றால்வெளியேற்றுவது என்பது பந்து வீச்சாளர்களைப் பொறுத்து சிக்கலான என்றே குறுகிய காலத்தில் அனைவராலும் பேசப்படும் ஒருவராக திகழ்ந்த ஹெய்டன். டெஸ் கிரிக்கெட் போட்டியில் அதிகூடிய ஓட்டங்களான மேற்கிந்தியத்தீவின் பிரையன்லாறா பெற்ற 375 ஓட்டம் எனும் சாதனையை முறியடித்து (380) அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியவர் (பின்னர் லாறா புதிய சாதனை (400) நிலைநாட்டினார்.)இன்றும் திறமைவாய்ந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளங்கும் ஹெய்டன் இல்லாத அவுஸ்திரேலிய அணி என்பது முழுமையற்ற அணியாகவே பார்க்கபடுகின்றது.

கிரிக்கெட் போட்டிகளை பொறுத்து சாதனையானாலும் வேதனையானாலும் அவை சாதனை பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

இந்தவகையில் மத்தியூ ஹெய்டன் தொடர்ச்சிவயாக நான்கு வருடங்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களை குவித்தவர் என்ற சாதனையை புரிந்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராக அடிலேயிட்டில் நடைபெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மேற்படி சாதனைக் குரியவர் என்ற தகைமை அவரை சென்றடைந்தது.

இதுவரை கிரிக்கெட் அரங்கில் இச் சாதனை நிகழ்த்தப்படவில்லை என்பது அவருக்கு மேலும் சிறப்பு.



அணிக்கு தனது பணியை திறம்பட ஆற்றும் ஹெய்டன். அணியில் ஏனைய வீரர்களும் திறம்பட பிரகாசிப்பதால் இவரது பணி முக்கியத்துவம் அற்றதாக காணப்படலாம்.

ஆனாலும் அவரது அதிரடியான ஆட்டத்தை கிரிக்கெட் உலகமும் எதிரணி வீரர்களும் மறந்து விடமாட்டார்கள் என்று கூறலாம். □

# நியூசிலாந்து அணி மீண்டும் பிரகாசிக்குமா?



உலகில் டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்தைப் பெற்றுள்ள நாடுகளில் குறிப்பிட்ட ஒரு இடத்தை பெறும் அணி நியூசிலாந்தாகும். முன்னர், அவ்வணி குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டு போட்டிகளில் வென்று வந்தது. அதற்கு உதாரணமாக 2000ஆம் ஆண்டு நடைபெற்ற மினி உலகக் கிண்ணத்தைக் குறிப்பிடலாம். அத்துடன் 2003ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முக்கோணத்தொடர் ஒன்றையும் கைப்பற்றி நாடுதிரும்பியது நியூசிலாந்து அணி.

எனினும் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் வீழ்ச்சிகண்டதால் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறாது விட்டது.

அதன் பின்னர் பங்களாதேஷ் அணியுடன் ஆடி தொடரைக் கைப்பற்றியது.

ஆயினும் இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிகளுக்கு சமமான அண்டை நாடுகள் மோதும் போட்டி போன்று நியூசிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதிய டெஸ்ட் தொடர் ஒன்று அவுஸ்திரேலியாவில் நடை பெற்று நியூசிலாந்து அணி இரு போட்டிகளிலும் படுதோல்வியை சந்தித்துதொடரை இழந்துள்ளது.

இந்த இரு தோல்விகளும் அணியை மட்டுமன்றி கிரிக்கெட் ரசிகர்களையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. காரணம் உலக தரப்படுத்தலில் ஒருநாள், மற்றும் டெஸ்ட் தரப்படுத்தலில் சிறிலங்கா, பாகிஸ்தான், இந்தியா போன்ற அணிகளை விட முன்னணிவகிக்கின்றது. இந்நிலையில் நியூசிலாந்து சொற்ப ஓட்டவித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்திருப்பினும் ஓரளவு திருப்திப்பட முடிந்திருக்கும். ஆனால் முதல் போட்டியில் 1 இன்னிங்ஸ் 156 ஓட்டங்களால் தோற்றதும் இரண்டாவது போட்டியில் 213 ஓட்டங்களால் தோற்றதும் வியப்புக்கு ஆதாரமாகின்றன.



எனினும் தனது வீட்டில் தானே சண்டியன் என்ற வகையில் தனக்குப் பழக்கப்பட்ட காலத்தில் ரசிகர்களின் ஆதரவோடும் இவர்கள் இவ்வெற்றியைப் பெற்றிருக்கலாம். ஆயினும் நியூசிலாந்து அணியை சுலபமரக வென்று விட்டதாக அவுஸ்திரேலியா இருமாந்திருக்கக் கூடாது. நியூசிலாந்தின் சிறந்த விருதுகளான கிறிஸ் கெயான் கிறிஸ் ஹரிஸ் ஆகியோரின் பங்கெடுப்பின்மையும் புதுமுகங்களை அறிமுகப்படுத்தியதும் நியூசிலாந்துக்கு வீழ்ச்சியை தந்திருக்கலாம். எனினும் இம்மாத இறுதியில் அது பலமிக்க சிறிலங்கா அணியுடனான போட்டிகளில் திறமையை வெளிப்காட்ட முடியும் என எதிர்ப்பார்க்கலாம். □



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 05

### பகுதி -25

"அதோ அந்த அலுமாரியில் அது இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்" என்று நான் சொன்னேன்.

அலுமாரியை நோக்கிச் சென்ற டிப்ஸ், அதற்குள் இருந்த பொம்மை வீட்டின் முன் சுவர்ப் பகுதியை எடுத்து வந்தான். பொம்மை வீட்டை சுற்றிச் சுற்றி நடந்த அவன், அந்த முன்சுவர்ப் பகுதியால் வீட்டை அடித்தான். குறுக்குத் தடுப்புகளில் ஒன்று கீழே விழுந்து விட்டது. அவன் அதனை நேராக்கி அதற்குரிய சரியான பொளியில் பொருத்திவிட்டான். அதற்குப்பின், முன் சுவர்ப் பகுதியை வீட்டோடு பொருத்தமுயன் றான். அது கொஞ்சம் கஷ்டமானதாக இருந் தது. அவன் பலமுறை முயன்றான். ஒவ்வொரு முறையும் கொழுக்கி களை பிணைத்து விட முடியாமல் போனது. முனகல் ஒன்று அவனிடமிருந்து கிளம்பியது. ''அதைப் பூட்டுங்கோ...அதைப் பூட்டுங்கோ" என்று முணு முணுத்தான்.




"வீட்டை பூட்டிவிடப் போறிங்களா?" நான் கேட்டேன். "பூட்டவேணும்" என்றவன் மீண்டும் ஒருமுறை முயன்றான். இந்த முறை அவனுக்கு வெற்றி கிடைத்தது.

"இந்தா...இறுக்கிப் பூட்டியாச்சு" என்று அவன் சொன்னான். "ஓம்... நீங்கள் வீட்டை பூட்டி முடிச்சிட்டீங்கள்." டிப்ஸ் நிமிர்ந்து என்னைப் பார்த்தான், இலேசான புன்னகை முகத்தில் அரும்பியிருந்தது.

''நான்தான்.... பூட்டினனான்'' தட்டுத்தடுமாறி அவன் சொன்னான்.

"உண்மையில நீங்கள்தான் பூட்டி னனீங்க, நீங்கள் உங்கட பாட்டிலதான் பூட்டி னனீங்க.'' அவன் முகத்தில் புன்னகை பெரிதாக விரிந்தது. தன்னைப் பற்றி மிகுந்த திருப்தி கொண்டவன் போல் அவன் தோன் றினான்.

பொம்மை வீட்டின் பின்புறம் சென்ற அவன் அதன் ஜன்னல் கதவுகளைப் பூட்டி விட்டான். "எல்லாம் பூட்டியாச்சு" என்றான். எல்லாம் சாத்திப் பூட்டியாச்சு... எல்லாம் சாத்திப் பூட்டியாச்சு"

"ஓம் எல்லாம் பூட்டியாச்சுத்தான்" என்றேன் நான்.

கீழே மண்டியிட்டு அமர்ந்து கைகளை யும் கீழே ஊன்றி பதிந்து கொண்ட அவன், பொம்மைவீட்டின் அடிப்பகுதியைப் பார்வையிட் டான். அந்தப் பகுதியில் இரண்டு கதவுகள் பிணைச்சலிட்டுப் பொருத்தப்பட்டிருந்தன. அந்தக் கதவுகளை அவன் திறந்து விட்டான்.

"இந்தா.....இதுதான் நில அறை இதில இருக்கிற எல்லாத்தையும் வெளியே எடுங்கோ. சுவர்கள்.... கன சுவர்கள்.... குறுக்குத் தடுப்புகள்...... கதவுகள். கதவுகள் இல்லாத சுவர்கள்." என்று சொல்லிக் கொண்டே போனான். அந்த அடிப்பகுதியிலே வேறு குறுக்குத் தடுப்புகளும் பொம்மை வீட்டுக்குரிய மேலதிக தளபாடங்களும் வைக்கப்பட்டிருந்தன.


"கதவுக் குமிழ் ஒண்டைச் செய் யுங்கோ'' என்றவன், நான் வைத்திருந்த பென்சிலை எட்டி எடுத்து பொம்மை வீட்டின் கதவின் மீது மிகுந்த அவதானத்துடன் குமிழ் ஒன்றை வரைந்து விட்டான்.

"கதவில குமிழ் இருக்கவேணும் எண்டு நினைக்கிறீங்களோ?'' அவனைக் கேட்டேன். "ஓமோம்" என்று முணுமுணுப்பாகச் சொன்னான். கதவின் மீது ஒரு பூட்டையும் வரைந்துவிட்டான். "சரி...கதவுக்கு ஒரு பூட்டும் போட்டாச்சு"

"ஓம் எனக்குத் தெரியுது. கதவுக்கு ஒரு குமிழும் ஒரு பூட்டும் போட்டிருக்கிறியள்"

"திறப்பால இறுக்கமாக பூட்டக் கூடிய பூட்டு" என்றவன் "உயரமான, கடினமான சுவர்கள்....ஒரு கதவு..... பூட்டப்பட்ட ஒரு கதவு....''

"ஓமப்பன்..." என்றேன் நான். சொன்னேன்.



டிப்ஸ் அந்த வீட் டைத் தொட்டபோது அது சிறிது தள்ளாடியது. அவன் வீடு ஏன் ஆடுகிறது. என்று ஆராய்ந்தான். குறுக்குத் தடுப்புகளில் ஒன்றை எடுத்த அவன், வீட்டை உறுதியாக்கும் விதத்தில் அதன் ஒரு மூலைக்குக் கீழ் அதைச் செருக முயற்சி செய்தான். இரண்டு மூலை களுக்கு கீழ் செருக முயற்சி செய்தபின் மூன் றாவது மூலையொன்றின் கீழ் அதைச் செருகி விட்டான். அதற்குப் பின் வீடு ஈடாடவில்லை. ''சரி...இப்ப ஆடவும் இல்லை சாயவும் இல்லை.''

பிணைச்சலிட்டுப் பொருத்தியிருந்த கூரையின் ஒரு பகுதியை மேலே கிளப்பி, தளபாடங்கள் சிலவற்றை வேறு இடங்களுக்கு நகர்த்தினான். இந்த வேளையில் அதற்குரிய நிலையிலிருந்து ஒரு குறுக்குத் தடுப்பு நகர்ந்து விட வீடு மீண்டும் ஆடத்தொடங்கியது. பின்னால் ஒரு அடி எடுத்து வைத்து நின்றபடி வீட்டைப் பார்த்தான்.

''மிஸ் A, அதற்கு சில சக்கரங்களைப் பொருத்தி விடுங்கோ. அதற்கு பிறகு அது ஆடவும் மாட்டுது....நடுங்கவும் மாட்டுது'' என்றான்.

"அது பிரச்சினையை தீர்க்கும் எண்டு நினைக்கிறீங்களோ?'' நான் கேட்டேன்.

"தீர்க்கும்.....கட்டாயம் தீர்க்கும்" என்று அவன் பதில் சொன்னான்.

ஆக...டிப்ஸின் சொற்களஞ்சியத்தில் பயன்படுத்தப் படாத சொற்கள் பல இருக கின்றன என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. பிரச்சினை களை அவதானித்து அவற்றை வரையறை செய்ய அவனால் முடியும். அந்தப் பிரச்சினை களை தீர்க்கவும் அவனால் முடியும். பொம்மை வீட்டின் கதவில் அவன் ஏன் பூட்டை வரைந் தான்? அவன் வாழ்வில் அவன் சந்தித்த பூட்டிய கதவுகள் டிப்ஸின்மீது பாதிப்புகளை ஏற்படுத்தி யிருக்கிறது என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

மணல் நிரப்பிய பெட்டியை நோக்கி நடந்து சென்று அதற்குள் ஏறிக்கொண்டான். மணல் பரப்பு எங்கும் சிதறிக்கிடந்த போர்வீரர் களின் பொம்மைகளில் சிலவற்றை அவன் எடுத்தான். ஒவ்வொரு போர்வீரனின் பொம்மை யையும் எடுத்து அவன் அவற்றை ஆராய்ந்தான். அவற்றுள் ஒன்றை என்னை நோக்கி நீட்டிக் காட்டிக்கொண்டு, "இது போல சில பொம்மைகள் டிப்சுக்கு நத்தாருக்குக் கிடைத்தன" என்றான்.

(தொடரும்....)

---

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று முந்திக் கொண்ட போது, நீலவண்ணன் தன்னை அவர் தோள் விஞ்சி வளர்ந்தவனாய்க் கருதவில்லை. அவர் தோளில் தூங்கி வளர்ந்தவனாகவே எண்ணினான்! அந்தத் தோளை எட்டி உதையும் தைரியம் அவனிடம் இருக்கவில்லை. கண்முன்னாலேயே எதிர்காலத்தைக் கைவிடுவதைத் தவிர நீலவண்ண னுக்கு வேறு வழி இருக்கவில்லை.

மாமனும், தாயும் எவ் வளவோ சொல்லியும் கேளாது 'பரீட்சை' என்று சொல்லி வந்த வேகத்திலேயே பல்கலைக்கழகம் சென்றுவிட்டான் நீலவண்ணன்!

நீலவண்ணனின் பயணம் இப்போது எங்கோ ஓர் தெரியாத ஊரில் ஓய்வுக்காய் நின்றது. மனத் தின் சுமைகளை அவனால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அன்று அவன மாமனை எதிர்க்கமுடியாமல் ஒதுங்கிக் கொண்டபின்னர் நடந்தவை எல்லாமே அவனின் கற்பனையாகவே இருந் தது. அந்தக் கற்பனைத்திரையில்.

மாமாவும், ராதாவும் ஊரை விட்டுப் புறப்பட்டது, கிளாலிப் பயணம், வவுனியா கொழும்பு சென்றது. ராதாவின் திருமணம் என்று பல விடயங்கள் விரிந்தன. அதற்கு காரணமும் இருந்தது. என் றைக்கு வீட்டை விட்டு வெளியேறி னார்களோ அன்றிலிருந்து அவர்கள் தொடர்பும்தான் அறுந்து போயிருந்தது.

அந்தக் கற்பனைத்திரை அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. ராதாவின் திருமணத்திற்குப் பிறகு அவள் குழந்தைகள், குழந்தை களோடு பேரனின் விளையாட்டு என் றெல்லாமே பெரியம்மாவின் கடிதம் வரும்வரை நீண்டு கொண்டே சென்றது.

ஆனால் அந்தக் கடிதமோ...!

கொழும்பு வரும்வரை எந் தப் பிரச்சினையுமே அவர்களுக்கு இருக்கவில்லை. வந்த மறுநாளே இரகசியப் பொலிசார் என அடையா ளம் காட்டி விசாரணைக்காக அழைக் கப்பட்டாளாம் ராதா! விசாரணை முடிந்ததும் விடுகிறோம் என்றவர் களின் பின்னால் வேலாயுதமும், பெரியதாய் புவனேஸ்வரியும் அலை யாத நாட்களில்லையாம். அதிகார மளிக்கப்பட்ட அலுவலகங்களும், அதிகாரிகளும்.

'அப்படியொரு பெண்ணே கைதாகவில்லை' என கைவிரித்த போது...!

நீலவண்ணன் துவண்டு போயிருந்தான். என்னவெல்லாமோ நடந்திருக்கும் என்றெண்ணியவனுக்கு, ஏதோ எல்லாம் நடந்திருக்கிறது என அறிந்தபோது அவனால் எதனையுமே ஜீரணிக்முடியவில்லை.

எங்கோ ஒரு மூலையில் கிருஸ்ணராதா வாழ்ந்துகொண்டிருப் பாள் என்றெண்ணி ஆறுதலாய் இருந்தவனுக்கு அவள் வாழ்வே தடமின்றி அழிக்கப்பட்டது இடியாய் வந்து இறங்கியிருக்கிறது!

அந்தக்கணம்! அவனது தேவதை, - அவன் மாமனின் உயிர்நாடி பேரினவாதத்தின் கோர முட்களுக்குள் சின்னா பின்னப்பட்டு சிதைந்தபோது அவளின் அலறல்...

தப்பிக்க முடியாமல் தவித்த போது அவள் அடைந்திருக்கக் கூடிய வேதனை...

சுக்குநூறாகி சரிந்து போய்க் கிடந்தான் நீலவண்ணன். இத் தனைக்குப் பிறகும் அவன் கொழும்பு செல்கிறான் பெரியம்மா வின் கடிதம் தந்த கடைசிவரிகளுக்காக!

"இவ்வளவுக்குப் பிறகும் உயிர்ப்பிணமாய், சித்தசுவாதீனம் பிடித்து இருக்கிற உன்ர மாமாவை ஒருதரம் வந்து பாத்திட்டுப்போ"

கடிதம் நீலவண்ணனது பாடசாலைக்கே வந்திருந்ததால் நடந்தவை அனைத்தும் அவனுக்கு மட்டுமே தெரிந்து இருந்தது. கூடவே வந்த வலியும்தான்! அவனை கொளுத்திப்போட்டாலும் எஞ்சிப்போன சாம்பலில்கூட மாறாத வலிகளாய் அவை என்றுமே இருக்கப்போகின்றது.

---

(10 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

# தேசியத்தலைவரின் கேள்விக்கு....



சி.கணேஸ்குமார். (பாபு) வர்த்தக சங்கத்தலைவர் கிளிநொச்சி,



ஞா.அந்தோனிப்பிள்ளை-சமாதான நீதவான்.

சிறிலங்கா அரசிடமிருந்து நாம் எதையும் பெற்றுக் கொள்ளமுடியும் எனக்கருதவில்லை. மூன்று வருடங் களுக்கு மேலாக பேச்சுவார்த்தை என்று ஏமாற்றியே வந்துள்ளது.

தேசியத்தலைவர் கூறியது போல் பொறுமைக்கும் எல்லையுண்டு தமிழ் மக்கள் அந்த எல்லையில்தான் நிற்கின்றார்கள். கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பத்தை அரசு சரியாக பயன்படுத்தாவிட்டால் நிச்சயமாக போர் தொடங்கும். போர்க்களத்தையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். கடந்த காலங்களில் குடும்ப கஷ்டங்களையும் பாராமல் எல்லைப்படையாக களத்திலே நின்று போராடியுள்ளோம். எனவே மீளவும் ஓர் போர்தொடங்கினால் நாம் எமது தேசியத்தலைவரின் கரங்களை பலப்படுத்துவோம்.

முன்னைய காலங்களில் சந்திரிகாவால் இது தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டம், தீர்வுப்பொதி என்றெல்லாம் நாம் ஏமாற்றப்பட்டே வந்துள்ளோம். இக் காலப்பகுதியில் கூட தீர்வு என எந்தக்கட்சியும் கூறவில்லை. எனவே இலங்கையில் உள்ள கட்சிகள் எல்லாம் போரைச் சாட்டி அரசியல் நடந்த எத்தனிக்கிறது. கட்சியின் நலனை கருத்தில்கொண்டு செயற்படுகின்றது. இவர்களின் போலி யான சமாதானத்தை நாம் நம்பமுடி யாது. சர்வதேச நாடு கள் இலங்கை அரசுக்கு அழுத்தங் களை கொடுக்க வேண்டும் அதனூடாக வேணும் சந்திரிகா உண்மையான சமாதானத்திற்கு வரவேண்டும் என்பதே எங்கள் அவா.

நாம் ஏனைய பிரச்சினைகளைவிட சர்வ தேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சனநாயக வழி முறையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவேண்டும் எனக்கோரி தமிழ்க் கூட்டமைப்பிற்கு வாக்களித்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினோம். அவர்களும் அங்கே இடைக்கால தன்னாட்சி அதிகாரம் விடுதலைப்புலிகளிடம் வழங்கப்படவேண்டும் என்றே கூறுகிறார்கள். எனவே பெரும்பான்மைக்கு மதிப்பளிக்காத சனநாயகத்தை மதிக்காத, இந்நாட்டின் சனாதிபதியான சந்திரிகா ஒரு உண்மையான உலகறிந்த சர்வதிகாரி. இன்று விடுதலைப்புலிகளின் இராணுவபலம் குறைந்து விட்டதாக கருதி இவர் யுத்தத்திற்கு தயாரானால் அநியாயமாக அழிவது அப்பாவி சிங்கள இளைஞர்களே இதை தென்னிலங்கை மக்கள் சிந்திக்கவேண்டிய முக்கிய கட்டத்தில் உள்ளனர். சர்வதேச நாடுகள் சந்தி ரிகா சமாதான நடவடிக்கைக்கு திரும்ப அழுத்தம் கொடுத்து இந்த நாட்டை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

மேற்படி சமூகமுன்னோடிகளின் கருத்துக் களின்படி தமிழ் மக்கள் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை இழந்து வருகின்றார்கள். அதைவிட ஆட்சியில் உள்ள கூட்டணி முரண்பாடானது, இந்த சமாதானத்தை எள்ளளவும் முன்னேறவிடாது என்பதும் வெள்ளிடை மலை. அதாவது யுத்தம் சமாதானம் எனும் இரு திசைகளுக்கு இழுக்கும் மாடுகள் பூட்டிய வண்டிலாக இலங்கை அரசு உள்ளது. இந்த இரு வேறு திசைகளுக்கு இழுக்கும் மாடுகளை நல்வழியில் இட்டுச் செல்லவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்தின் கைகளிலேயே உள்ளது.

# கொட்டடி முத்தமிழ் மீனாட்சியம்மன் வீதி மக்களுடனான சந்திப்பு

1982ஆம் ஆண்டு 11 நாடுகளில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களென 1.2 மில்லியனாகக் கணக்கிடப்பட்ட மக்கள் தொகை இரண்டு தசாப்தங்களின் பின் ஆயுத முரண்பாடு உயிர், உடமைகளிற்கு ஊறு விளைவித்தல் காரணமாக 40 நாடுகளில் அல்லது இன் நாடுகளின் 40 பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் 25 மில்லியாக அதிகரித்துள்ளது. 20 வருட் இடைவெளியில் இவ்வாறானதொரு பெரும் தொகையான மக்களின் இடப் பெயர்வுக்கு அடக்கியாளும் மனோபாவமும், ஆயுத கலாசாரமும், சுயநல ஆதிக்க செறிவுமே காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் மையத்தில் பண்ணைக் கடற்கரையோரமாக முத்தமிழ், மீனாட்சியம்மன் வீதிகளைச் சேர்ந்த மக்கள் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பல இடர்களையும் இன்னல்களையும் அனுபவித்துவரும் இவர்கள் நகரத்தின் அருகில் அமைதியாக அவலங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இரண்டு நாடுகளினது இராணுவத்தினரின் அடாவடித்தன அத்துமீறல்களிற்கும் தாக்குதல்களிற்கும் உள்ளாகியுள்ளனர். இடப்பெயர்வுகள் காரணமாக உடமைகள் சொத்துக்களுடன் உயிர்களையும் இழந்தவர்களிற்கு உரிய உதவிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. நட்டஈட்டுத்தொகை, மீள் புனரமைப்பிற்கான உதவிகள் கூட இப்பகுதி மக்களிற்கு வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் ஜே-81 கிராம சேவையாளர் பகுதியாக இவ் இருவீதிகளுமுள்ளன. 650 குடும்பங்களைச் சேர்ந்த 2500பேர் வ[illegible]யும் இப் பகுதியில் கல்வி கற்கக்கூடிய வயதில் 750 பேர் இருந்த போதிலும் 540பேர்



மட்டுமே கல்வி கற்று வருகின்றனர். முத்தமிழ் சிறுவர் அறிவகம் என்ற பெயரிலுள்ள முன்பள்ளியில் 60 மாணவர்களிற்கு இரண்டு ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றனர்.

650 குடும்பங்களிற்கும் பொதுவாக முழுமையான வீடுகளாக 75 வீடுகளேயுள்ளன. ஏனையவர்கள் உறவினர்களுடன் இணைந்தும், இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த வீடுகளிலும் தாமாகவே சிறுகுடிசைகளை அமைத்துமே பெரும் இன்னல்களிற்கு மத்தியில் தமது காலத்தை நகர்த்தி வருகின்றனர். இக்கிராமத்திற்கு மிகவும் அவசியமாகவும் அவசர மாகவும் தேவைப்படுவது போக்குவரத்துப் பாதைகள், மின்சாரவசதி, வீடுகள் புனரமைப்பிற்கான உதவிகள். இதனை எதிர்பார்த்தே இக்கிராம மக்களுள்ளனர்.

இத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இதுவரை யாரும் முன் வரவில்லை. என்பதுடன் இக் கிராம மக்களும் உரிய அதிகாரிகளிடம் தொடர்ச்சியான அழுத்தங்கள் கொடுக்கவில்லையென அவர்களுடன் உரையாடியதன் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும்மழை நீர் வெளியேறுவதற்கு இடமின்றி இப் பகுதியிலேயே தேங்கியுள்ளது. இவ்மழை நீரை வெளியேற்றுவதற்கு இங்குள்ள வீதிகளை புனரமைத்து கால்வாய்களை புதிதாக அமைத்து மழை நீருடன் கழிவு நீரையும் பண்ணைக் கடலுடன் கலப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இப்பகுதிக்கு மிக அருகிலுள்ள லைடன் சக்தி கால்வாய் அடைத்துள்ளதை இவ் வாய்க்கால் கழிவு நீர் நாவாந்துறை கடலுடன் கலக்கக் கூடியவகையில் அமைக்கப்பட்டுள்ளது. இக் கால்வாயில் தேங்கியுள்ள கழிவு நீரினால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. கொட்டடியிலுள்ள கற்குளம் நிரம்பியுள்ளதால் மேலதிக நீரும் இவ் வாய்க்காலிநூடாகவே வெளியேற்றப்படவேண்டும். எனவே அடைபட்டுப்போயுள்ள கால்வாய்கள் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு நுளம்பு பெருக்கத்தை தடுப்பதுடன் மக்களின் சுமூக வாழ்விற்கும் வழிசமைக்கவேண்டும்.

இக்கிராமத்தவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ் நகரில் பழு சுமக்கும் தொழிலாளர்களாகவுள்ளனர். நகரில் நின்று நகர வர்த்தகத்திற்கும் சுறுசுறுப்பிற்கும் சுமைதாங்கியாக செயற்படுபவர்களது கிராமம் சுமைதாங்கியின்றி பாரிய பொறிக்குள் விழும் அபாயத்திலுள்ளது.

முத்தமிழ் வீதியில் வதியும் தொழிலாளியான நாகேஸ்- இராசேந்திரம் தமது கிராமம் தொடர்பாக எம்முடன் பகிர்ந்துகொண்டவை நாளாந்தம் சிறு வருமானத்தைப் பெற்றுவரும் எங்களால் எமது வீடுகளையோ கிராமத்தையோ புனரமைக்க முடியாது. அரச அதிகாரிகளே எங்களிற்கான உதவிகளை வழங்கவேண்டும். மழை வெள்ளம் தேங்கியுள்ளதால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. நுளம்புகளின் தொல்லை தாங்க முடிவதில்லை. இதனால் நோய்கள் ஏற்பட்டுவருகின்றன. இங்கு மலசல கூடங்கள் பற்றாக்குறையாகவுள்ளன. பல குடும்பங்கள் சேர்ந்தே குறிப்பிட்ட சில மலசலகூடங்களைப் பாவித்துவருகின்றனர்.

இலங்கை, இந்திய இராணுவத்தினரால் எமது வீடுகள் இரண்டுதடவைகள் தீக்கிரையாக்கப்பட்டன. எஞ்சிய வீடுகள் இராணுவத் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன. இடம் பெயர்ந்து மீள் குடியமர்ந்தவர்களிற்கு முழுமையான உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட எமது பகுதி மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். வீதிகளில் சிறு மதகுகளைத் தாட்டு மழை நீர், கழிவு நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் நாகேஸ்-இராசேந்திரம்.

மீனாட்சியம்மன் வீதியில் வதியும் மாதர்சங்க அங்கத்தவரான திருமதி சசிகலா தேவி- ஜெயந்திரன் எம்முடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர்களிற்காகத் தருகிறோம். அடிப்படை வசதிகளின்றியுள்ள எமது பகுதிக்கான வீதிகள் யாவும் குண்டும் குழியுமாகவுள்ளன. தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் வீதிகள் யாவும் மழை நீரினால் நிறைந்துள்ளன. சிறுதொகை வருமானத்தை நாளாந்தம் பெறுபவர்களே இங்குள்ளதால் நிகொட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொருட்களைக்கொண்டு வீடு கட்ட முடியாதுள்ளோம்.

வண்ணார் பண்ணை சிவன் கோவிலுக்கு சொந்தமான காணியிலேயே நாங்கள் குடியேறியுள்ளோம். கோவில் காணி என்பதால் எம்மிடம் உறுதிப்பத்திரங்கள் இல்லை. இதனால் அரச வீடமைப்பு உதவிகளைக் கூடபெற முடியாதுள்ளது. எமது வீதிகள்யாவும் புனரமைக்கப்பட

**இரா-வின்**

வேண்டும். எமது பகுதிக்கென முன்பள்ளி, சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச் சங்கமென எவையுமே இல்லை என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் திருமதி சசிகலாதேவி-ஜெயந்திரன்.

பாதுகாப்புக்காகவும் ஆதாரத்திற்காகவும் அரசாங்க உத்தியோகத்தர்களிலும் வேறு உள்நாட்டு அதிகாரிகளிலும் தங்கியிருக்கின்றனர் பாதிக்கப்பட்டவர்கள். தமது வீடுகள் உடமைகளை இழந்த மக்கள் மிகவும் அபாயகரமான அவல வாழ்விலுள்ளனர். இவ்வாறு இயல்பு வாழ்க்கையைத் தொலைத்த மக்கள் வடக்கு கிழக்கில் அண்மைய தரவின்படி 8 இலட்சம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் 540 000 பேர் இது வரை மீள் குடியமராமல் உறவினர், நண்பர்களது வீடுகளிலும் நலன்புரிநிலையங்களிலும் தங்கி யுள்ளனர்.

முத்தமிழ்.

மீனாட்சியம்மன் வீதிகளிலுள்ள மக்களிற்கு வீதிகள் உரிய முறையில் புனரமைத்துக் கொடுக்கவேண்டும். சேதமடைந்த வீடுகள், பொதுக்கட்டடங்கள் புனரமைக்கப்படவேண்டும். ஆயுத முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்டு, உயிர் இழந்தவர்களிற்கான உரிய உதவு தொகைகளும் நட்ட ஈட்டுத்தொகையும் வழங்கப்பட வேண்டும். இப் பகுதி மக்களிற்கு அவசியமான தேவைகளை வழங்கி இவர்களது இயல்பு வாழ்விற்கு வழி சமைக்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும்.

இக்கிராமத்தின் மத்தியில் இராணுவத்தினர் முகாமமைத்துள்ளனர். தமது பாதுகாப்புக் கருதி அனுமதியின்றி உட்புகுந்தவர்கள் குறைந்தளவு தண்டனை வழங்கப்படும் அனுமதிப்பார்கள் என்ற விளம்பரப் பலகையும் முன்றிறுத்தியுள்ளனர். இங்குள்ள வீடுகள் சன சமூக நிலையங்கள் என அனைத்தும் சேதமாக்கப்பட்டுள்ளன. இதில் இராணுவத் தாங்குதல்களினால் அழிவடைந்தவற்றை விட இராணுவம் பொலிசாரினது உதவியுடன் கள வாடப்பட்டவையே அதிகமாகவுள்ளன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் யாழ்மாநகரசபை ஆணையாளர் ஆகியோர் இக் கிராமத்தின் மீது தமது பார்வையை திருப்பவேண்டும். யாழ் நகரிலுள்ள இக் கிரா மத்தின் தேவைகளை கவனத்தில்கொண்டு உடனடி அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். தொற்று நோய்களிற்கு இலக்காகி வரும் இக் கிராமமக்களிற்கு மறுவாழ்வளிக்கதகுதியான அதிகாரிகள் பொறுப்புடன் முன் வர வேண்டும். நகரிற்கு மிக அருகில் உள்ள பல கிராமங்கள் அழிவடைந்த போதிலும் நகரிற்குள் உள்ள கிராமம் அமிழப் போவதை அதிகாரிகள் அனுமதிப்பதை பொது அமைப்புக்களாவது தடுத்து நிறுத்தவேண்டும். அல்லது கடந்த காலங்கள் போல் இவர்களும் பாரா முகமாய்தான் இருப்பார்களா? ●



# அதிகரித்துவரும் தற்கொலைகள்

ச.முருகானந்தன்



உலக சுகாதார நிறுவனத்தின் அண்மைய கணிப்புப் படி சர்வதேச மட்டத்தில் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றமை தெரிகிறது. ஏனைய மரணங்களோடு ஒப்பிடுகின்றபோது தற்கொலை மரணங்கள் எண்ணிக்கையில் முன்நிற்பதால் இதுபற்றி நாம் அதிக கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் தற்கொலை ம்முயற்சியில்ஈடுபடுவோரில் இளைய தலைமுறையினரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதும், பாதிப்புற்றோர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுவர முன்னதாகவே இறந்து விடுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருபவர்களிலும் கணிசமானோர் இறந்து போவதும் கவலைக்குரியது.

வயதுவாரியாகப்பார்க்கும்போது 15வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களே கூடுதலாகத் தற்கொலைமுயற்சியில் ஈடுபடுகின்றனர். அடுத்தபடியாக எமது நாட்டில் 55-60வயதிற்கு இடைப்பட்டவர்களின் தற்கொலை கூடுதலாக உள்ளமை அண்மைக் கால எமது நாட்டு ஆய்வில் தெரிய வருகிறது. இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் உலகில் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கையில் முதல் பத்து நாடுகளில் ஒன்றாக இருப்பதாக சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வாராந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்கொலை செய்யும் வீதத்தில் பார்க்கும்போது இன்னமும் முன்னிலையில் இருப்பதும் தெரிகிறது. கடந்த தசாப்தத்தில் தற்கொலை வீதத்தில் முதலாவது இடத்தில் இலங்கை இருந்ததும்இங்கு கவனிக்கப்பட வேண்டியவிடய மாகும்.

இவ்வாறான தற்கொலைகளுக்கான காரணம் என்ன என்று நோக்கும் போது பல விடயங்கள் இதில் அடங்குகின்றன. வறுமை, வேலையில்லாத்திண்டாட்டம், காதல் தோல்வி, அல்லது காதலரின் பிரிவு, தர்க்கங்கள், உறவு முறிவுகள், பரீட்சைகளில் தோல்வி, சட்டபூர்வமான தண்டனைக்குரிய செயற்பாடுகளினால் ஏற்படும் மன அழுத்தம், ஏமாற்றம் என்பன அடங்கும். இவைதவிர நோயின் அவஸ்தையாலும், மனநோய்களினாலும், சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்படல், யுத்த அனர்த்தங்கள் என்பனவும் தற்கொலைக்கு வித்திடுகின்றன. இவ்வாறான முயற்சிகள் தனிநபர் மூலமும், குடும்பஉறுப்பினர் உறவினர், நண்பர்கள் மூலமும், சமூகத்தின் மூலமும், சுகாதாரப் பிரிவினரின் மூலமும், உளவளத்துணை ஆலோசகர்களின் மூலமும் மேற்கொள்ளப்படலாம்.

ஒரு தனிநபரைமுதலில் அவர்தற்கொலை செய்யக் கூடியவர் என்பதை இனம் காணுதலே முதலாவதும் முக்கியமானதுமான விடயமாகும். அவருடைய எண்ண ஓட்டங்களையும் அகச்சூழ்நிலைகளையும், புறச்சூழ்நிலைகளையும் சரியாகவும், விரைவாகவும் அறிந்து அவ்வாறான எண்ணத்தை மாற்றி நம்பிக்கையூட்டவேண்டும். தற்கொலைசெய்திட நினைப்பவர்களில், வாழும் எண்ணமும் சாகும் எண்ணமும் மாறி மாறி உருவாகும். பெரும்பாலானவர்களில் தற்கொலை எண்ணம் சிறிது நேரமே தோன்றி மறைந்துவிடும். இப்படியான சில நேரங்களில் அவர் தற்கொலை முயற்சியில் இறங்கக்கூடும். ஒருவரில் இவ்வாறான எண்ணங்கள் தோன்றுவதை தவிர்ப்பதில் நாம் வெற்றி கொண்டோமானால் அவரைக் காப்பாற்றி விடலாம்.

ஒருவர் தற்கொலையை நாடக் கூடியவர் என்பதனை எவ்வாறு இனம் காணலாம்? இது கொஞ்சம் கடினமான காரியம் தான். சில சூழ்நிலைகளை வைத்தே நாம் அறியமுடியும். தனிப்பட குடும்பரீதியிலும், சில நெருக்கடியான சூழ்நிலைகளில் வாழ்பவர்களிலும் அதிக கவனமெடுக்கவேண்டும்.

உதாரணமாக எமது நாட்டின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணமாக யுத்த சூழ்நிலையினால் ஏற்பட்ட வறுமை, இடப்பெயர்வு, உடல் உளபாதிப்புக்கள் காரணிகளாக அமைந்தன. மேலும் வறுமை, பொருளாதார நெருக்கடிகள் என்பனவும் தற்கொலை முயற்சிகளுக்கு வித்திட்டன.

பருவ வயது புதுமையான எண்ணங்களும், அதீதமான கற்பனைகளும், ஓமோன்களின் உந்துதல்களும் நிறைந்தவயது, எதிர்பார்ப்புகளும் அதில்வருகின்ற ஏமாற்றங்களும் அதிகம். எளிதில் நம்பி மோசம் போகின்ற சந்தர்ப்பங்கள் அதிகம். எதிர்ப்பாலரால் ஆசைகாட்டி வஞ்சிக்கப்படுதலும் அதிகம். சமூக அழுத்தங்களும் இப்பருவத்தினரின் அபிலாசைகளுக்கு தடை போடுகின்றபோது உளப்பாதிப்புக்குள்ளாகின்றனர். அடுத்து இதேவயதில் கல்வியில் தோல்வியும், வேலைவாய்ப்பின்மையும் சேர்ந்து மனதைப் பாதித்துவிடுகின்றன. சிலரால் இவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாதபோது தற்கொலையை நாடிவிடுகின்றனர். இது ஒரு அர்த்தமற்ற அவசர முடிவுதான் ஆறுதலாக இருந்து யோசித்தால் இது தெளிவாகும். நல்லநூல்களின் வாசிப்பும், உண்மைச் சிநேகிதங்களும் இப் பருவத்தில் தெம்பூட்டக்கூடியன.

தற்கொலை எண்ணம் மனதில் உருவானவர் அதுபற்றி எப்போதாவது கதைக்கவே செய்வார்கள். மேலும் அவர்களது நடவடிக்கைகள் வித்தியாசமாக இருப்பதை அவதானிக்கலாம். 'எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டுறன்' போன்ற தற்கொலைத் தொனியுடைய வார்த்தைகளை உதிர்ப்பார்கள். தடுமாற்றமும், முடிவெடுக்கச் சிரமப்படும் இயல்பும் இருக்கும். பட்டினி கிடத்தல், தன்னைத்தானே தண்டித்தல். குடும்பத்தவருடன் வழமைக்கு மாறாக காட்டமாக நடத்தல். பணம் சொத்துக்கள் பற்றிய அலட்சியம் என்பனவற்றை அவதானிக்கலாம்.

மனநோயாளராகவோ, அல்லது மனநோயாளர்கள் போலவோ இவர்கள் சிலவேளைகளில் நடப்பார்கள். யாருடைய சொல்லையும் கேளாது அலட்சியப் படுத்துவர். கவலை, யோசனை, படபடப்பு, மூட்மாற்றம், கூடுதல் புகைத்தல் அல்லது மது அருந்தல், தூக்கமின்மை, மாறாட்டமும், சினப்பும், நாளாந்த கருமங்களில் அக்கறையின்மையும் என்பனவற்றையும் இவர்களில் அவதானிக்கலாம். இப்படியானவர்களின் அடிப்படைப் பிரச்சினையை இனம் கண்டால் தான் தீர்வு காணமுடியும். இது நட்பாகப் பழகுபவர்களாலும், அன்புக்குரியவர்களாலுமே முடியும்.

சந்தேகத்திற்குரியவர்களை அவதானிப்பதன் மூலமும், அவர்சொல்வதைச் செவிமடுப்பதன் மூலமும், அவர்கள் பற்றி அக்கறையோடு விசாரித்து அறிவதன் மூலமும் முதலில் அவர்களது நம்பிக்கைக்கு உரியவராய் மாறவேண்டும். நான் சாகப் போகிறேன் என்று அவர்கள் சொல்வதை நாம் இலகுவாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இக்கூற்று அவர்களது மன ஓலமும், ஆறுதலுக்கான வேண்டுகையும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்கொலை செய்யும் எண்ணம் சமுதாயத்தில் நிறையப்பேருக்கு தோன்றுவதுண்டு. இப்படித் தோன்றுபவர்களில் ஒரு சிலர்தான் தற்கொலை செய்கிறார்கள். நீடித்தகாலம் அவ்வாறான எண்ணங்கள் தொடரும் போது தற்கொலை முயற்சி சாத்தியமாகிறது. ஒரு குடும்பத்தில் தற்கொலை செய்தவர்கள் இருப்பின், இவ்வாறானவர்களில் சாத்தியக் கூறு இன்னும் அதிகரிக்கின்றது.

தற்கொலையை நாடக் கூடியவர்கள் யார்யார் என நாம் நோக்குகின்றபோது பின்வருவோரைப் பட்டியலிடலாம்.

01. சமூக அந்தஸ்தை இழப்பவர்கள்.

02. பரீட்சையில் தோல்வியுற்றவர்கள்.

03. திடீர் தொழில் அல்லது வருவாய் இழப்பு, தொழில் உடமை அழிவுமுதலியன ஏற்படுவோர்.

04. தன்மீது நம்பிக்கை இழப்பவர்கள்.

05. குற்ற உணர்வால் மனம் குன்றியவர்கள்.

06. வாழ்வில் சலிப்பு ஏற்பட்டவர்கள்.

07. காதலில் தோல்வியுற்றவர்கள்.

08. வன்முறைகளினால் பாதிப்புக்குள்ளானவர்கள்.

09. பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்கள்.

10. முன்பு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள்.

11. உறவுகளை அண்மையில் பறிகொடுத்தவர்கள்.

12. வேலைவாய்ப்பு அற்றவர்கள்.

13. குடும்பத்தில் சித்திரவதை அனுபவிப்பவர்கள்.

14. முரண்பாடுடையவர்கள்.

15. வாழ்வில் சலிப்பும், விரக்தியுமுற்றவர்கள்.

16. நீண்டநாள் நோய்வாய்ப்பட்டவர்கள்.

17. குடும்பத்தவரால் புறக்கணிக்கப்படுபவர்கள்.

18. பொருளாதார அழுத்தங்களுக்குள்ளாகுபவர்கள்.

19. புரிந்துணர்வு எட்டாத கணவன் மனைவியர்.

20 மனநோயாளர்கள்.

தற்கொலையைத் தடுப்பது என்பது இலகுவான முயற்சியல்ல. சாத்தியமாகுதல் கடினமான காரியமே. எனினும் பல முனை அணுகுதல் மூலமும் அர்த்தமுள்ள ஆதரவான தலையீடுகள் மூலமும், அக்கறையான முயற்சிகளை அருகினுள்ளோரும், சமூகத்தினுள்ளோரும் மேற்கொள்ளல் மூலமும் பலஉயிர்கள் காப்பாற்றப்படலாம்.

## புகைப்பதைப்பகைப்போம்


90 வீதமான இங்கிலாந்தின் போசனசாலைகள், மதுபானச்சாலைகள் பணியகங்களிலெல்லாம் புகைப்பதைத் தடுக்கும்படி பிரேரணை செய்யப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இப்பிரேரணை நான்கு வருட காலத்தில் சட்டமாக்கப்படலாம். இங்கிலாந்து மாத்திரமல்ல பல ஐரேப்பிய நாடுகளும் புகைக்கும் விடயத்தில் பல கெடுபிடிகளை அறிமுகப்படுத்தத்திட்டமிட்டு வருகின்றன.

இந்த வருடம் மார்ச் மாதம் 29 ஆம் திகதி பொது இடங்களில் புகைப்பதைத் தடுக்க புதிய சட்டமொன்றை அமுலாக்கியதன் மூலம் இப்படியொரு சட்டத்தை அமுலாக்கிய முதல் உலக நாடு அயர்லாந்து சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. கடந்த ஜுன் மாதம் போசனசாலைகளிலும், மதுபானசாலைகளிலும் புகைப்பதற்குத் தடையை நோர்வே கொண்டு வந்தது. 2005 ஜுன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சுவீடன் புகைப்பதற்கான தடைச்சட்டத்தை கொண்டு வருகின்றது. எதிர்வரும் டிசம்பர் 17 ம் திகதி தொடக்கம் புகையிலை விற்பனையை நாடெங்கும் தடை செய்யப்போகும் பூட்டான் இப்படியொரு தடையை கொண்டு வரும் முதல் உலக நாடாகத் திகழப்போகின்றது.

இப்படிப்பரவலாகப் பல உலக நாடுகள் இத்தடையை அமுல்படுத்துவதில் தீவிரமாக இருந்தாலும் எந்தவொரு இலத்தீன் அமெரிக்க நாட்டிற்கும் இந்த எண்ணம் இதுவரையில் இல்லை.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



*அன்பின் பாவலா!*

*தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர் நாள் உரை தென்னிலங்கை சமூகத்திற்கு எதை உணர்த்தியிருக்கும்?*

*செ.தயாநிதி,*
*வேம்படி.*

உண்மை நிலையை உணர்த்தியிருக்கும், ஆனால் பழைமைவாத இனவாத மத வாத திரை உண்மையை மறைத்திருக்கும்.

*பாவலா!*

*திருகோணமலையில் அண்மையில் தலைதூக்கும் இனவாத சம்பவங்கள் பற்றி கூறுங்களேன்?*

*எஸ். யாழ்மைந்தன்,*
*வள்ளிபுனம்.*

அதுதான் உயர்மட்ட குழுவே கூறிவிட்டதே மூன்றாவது (ஜே.வி.பி) சக்தி என்று.

*வணக்கம் பாவலா!*

*நவீன நாகரிகத்தால் பாதிக்கப்படுவது எது?*

*அ.ஜசிதா,*

*சரசாலை தெற்கு.*

ஆண்களின் மனம்தான்.

*பாவலா!*

*முரளிதரன் மீதான துஸ்ரா தடை நீக்கப்பெற்றுள்ளது. முரளி மீண்டும் பிரகாசிப்பாரா*

*மதனகுமாரன்,*
*கிளிநொச்சி.*

முரளிதரனுக்கு துஸ்ரா தடை போடப்பட்டதே ஒரு வெள்ளையினத்தவரின் உலக சாதனைக்குத்தான். அவர் மீண்டும் மீண்டும் பிரகாசிப்பார்.

*பாவலருக்கு!*

*அரசாங்கம் போர் நிறுத்தத்தை மீறி செயற்பட்டுவருகின்றது. இனியும் விடுதலைப்புலிகள் பொறுமைகாப்பது ஏன்?*

*ஐ.சாந்தன்,*
*இலுப்பைக்கடவை.*

அரச பயங்கரவாதத் திற்கும் விடுதலை அமைப் பிற்குமான வித்தியாசத்தை உலகிற்கு காட்டத்தான்.

*அன்பின்பாவலரே!*

*தரமான பொருட்களில் கலப்படம்செய்து வியாபாரம் செய்யும் வியாபாரிகள் பற்றி கூறுங்களேன்?*

*தமிழ்க்கனி,*
*கிளிநொச்சி.*

தண்டிக்கப்படுபவார்கள். இதற்கு ஒரு நல்ல கதையுண்டு. கலப்படம் செய்யும் வியாபாரி இறந்து மேலோகம் சென்ற போது மேலோக தேவருள் ஒருவர் இவரிடம் சொர்க்கத்தைக்காட்டி இது ஒரு நரகம் என்றாராம். நரகத்தை காட்டி இது சொர்க்கம் என்றதுடன் எதற்கு போக விரும்புகிறாய் என்றதற்கு வியாபாரி நரகம்தான் நன்றாக உள்ளது நரகத்துக்கே போகிறேன் என்றவுடன் தேவர்கள் அவனை உண்மையான நரகத்துக்குள் தள்ளிவிட்டுள்ளார்கள். பாதாளத்தில் விழுந்த வியாபாரி தேவர்களே இப்படி என்னை ஏமாற்றி விட்டீர்களே என்றாராம். அதற்கு தேவர்கள் நீ நாளாந்தம் உன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நல்லபொருளை காட்டி கலப்படமான பொருளை விற்று ஏமாற்றி வந்துள்ளாயே அதுதான் என்றாராம்.

*பாவலா!*

*U.N.P. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொ.ஐ முன்னணியில் இணைவது ஏன்?*

*ஏ.நிர்மலா*
*விடத்தல்தீவு*

செத்தமாட்டில் உள்ள உண்ணிகள்கழடாமல் வேறென்ன செய்யும்.

*வணக்கம் பாவலா!*

*யாழ்.குடா நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதன் பின்னணி என்ன?*

*ஜே.வாணிகரன்,*
*மன்னார்.*

யாழ்குடா நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கவே சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் பின்னணி-முன்னணிதான்.

*பாவலா!*

*இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தென்றல் சேவையில் தேச விரோதிகள் இதயவீனை என்ற புதிய நிகழ்ச்சியை ஆரம்பித்து தேச விரோத கருத்துகளை ஒலி பரப்புவர்களுக்கு தாங்கள் கூறுவது என்ன?*

*அஜந்தன்,*
*முள்ளிவாய்க்கால்.*

உங்களுக்கே தெரிகிறது தேச விரோத கருத்துக்கள் என்று அதனைப் பற்றி கதைத்து நேரத்தை அநியாயமாக்குவானேன் விட்டு விடுங்கள்.

●●●




"என்ன நேற்றுப் போய் இண்டைக்குத்தான் வாறியள் போல"

"ஓ... என்ர பிள்ளை கிளிநொச்சித் துயிலுமில்லம். போனவரியம் மழை தெம்பலுக்க அலைஞ்சு வந்து பத்து நாள் படுத்திட்டன். இந்த வரியம் போகாம விடுபம் வீட்டில படத்தை வச்சுச் செய்வம் எண்டுதான் பாத்தன். பிறகு... அந்த நாள் வரவர மனங்கிடந்து அடிக்குது. அய்யோ எல்லாரும் விளக்கு வைக்க என்ர பிள்ளை அநாதையா நிக்குமே...

"இப்ப சந்தியில இறங்கி வீட்ட என்னண்டு போறது."

"நடந்துதான் போறது நம்ம ஊருக்குத்தான் வசுவும் இல்லயே..."

"கடவுளே ஆறு கிலோ மீட்டர் நடக்கப்போறியளே..."

நடந்துதானே வந்தனான், என்ன... ஒரு தேத்தண்ணி குடிச்சா எப்பன் தென்பாயிருக்கும்.

அதுக்கும் கிட்டத்தில கடையில்லையே. நேர துணுக்காயில இறங்கி குடிச்சிட்டு திரும்பி பனங்காமஞ் சந்திக்கு நடக்கோணும். அதெங்க முட்டொரு பக்கம் மூச்சு வாங்குது. தண்ணி குடிக்கவும் அயல்ல வீடில்ல...

இந்த ரோட்டுக்கு ஒரு பஸ் விடலாமே...

ஆருங்கோ கேக்கிறது. சனம் அகதியா வந்திருந்தநேரம், டாக்குத்தர் கிழமைக்கு ரெண்டு தரம் வருவார். பஸ் ஓடினது. சந்தையிருந்தது. இப்ப ஒரு கோதாரியுமில்லையே... தொட்டதுக்கும் நடைதான். ஆவத்தந்தரமெண்டா ஆரும் மோட்டச்சயிக்கிள்காறரைத் தேடியோடுறது. அப்படியும் சிலது ஆஸ்பத்திரிக்கு போகமுதல் செத்துப்போம்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-97



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-97**

............................................................

............................................................


............................................................

............................................................

பெயர் : ............................................
முகவரி : ............................................
............................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -96



**திருமதி.கி.சிவகுமார்**
**2ஆம்கட்டை**
**முரசுமோட்டை.**

### பரிசுக்குரிய வரிகள்

*சிங்காரநடையுடன் சித்திரப்பாவையிவள்*
*சிங்காரமாகவே சிரித்துவிளையாடும்வேளை - தனில்*
*சிறைக்கூட்டில் நின்று சிந்தனை எழுப்புகிறாள்*
*சிதறிக்கிடக்கும்வாழ்க்கைபற்றி.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சண்டைக்காலத்து குண்டுத்தப்பி*
*சந்தைக்குப் போய்மீண்ட அம்மாவை*
*சமாதான காலத்து சாலை விபத்துகள்*
*சாவடிக்குமென கலங்குகிறாயா?*

இ.கண்ணதாசன்
29/1திருவையாறு,
கிளிநொச்சி

*எங்கோ பார்த்தபடி எண்ணத்தில் மூழ்கி நிற்கும்*
*என் தங்காய் - இம் மண்ணிதில்*
*இன்னலின்றி இயல்பாய் வாழ்ந்திட - நீயும்*
*உன் மனதில் உறுதி எடுக்கின்றாயா?*

ஐ.அருவி
புதுக்குடியிருப்பு

*சின்னஞ்சிறு சிறுமியே*
*வீதி மேல் விழி வைத்திரந்து கலங்குவது*
*மாவீரர்களாய் போன உறவுகளை எண்ணியோ*
*கவலைப்படாதே அவர்கள் நாளை ஈழத்தின் வரலாறு*

சு.செல்வி,
பரந்தன்.

*யன்னலோரம்பார்க்கும்விழிகள்,*
*யார் வரவை எதிர்பார்த்தோ,*
*நாளை வரும் ஈழமதில்*
*நம்பிக்கையாய் இரு மகளே.*

செ.குமுதினி
உதயநகர் மேற்கு

*சிரித்து மகிழும் சின்னப்பூவே உன்னைச்*
*சிறையிலிட்டார் யாரோ*
*சிந்தனை செய்வதேன் - சிட்டாய்*
*சிறகடித்துப் பறப்பதற்காகவோ.*

பா.சயந்தினி,
வட்டக்கச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# இதோ! ஆச்சரியம் ஆனால் உண்மை!

விவசாயிகளே! நீங்கள் இதுவரை காலமும் அறிந்திராத புதியதோர் தொழில்நுட்பம் உர உற்பத்தியில் நிகழ்ந்து விட்டது.




**நீங்கள் இயற்கையான உரங்களை உங்கள் வயல் நிலத்திற்கு இடவேண்டிய கட்டாயத்தில் உள்ளீர்கள் என்பதை அறிவீர்களா.**

## டிஸ்கவரி

தொடர்ச்சியான பயிர்ச்செய்கையானது மண் வளத்தினை குறைக்கின்றது. மேலும் இரசாயன உரங்கள் மண் மணிகளை உளறு செய்யலாம்.

இப்பிரச்சினைக்கு ஒரேயொரு தீர்வு டிஸ்கவரி.

இயற்கைத்தாவர மீதி. தாவர சாறுகளால் 21ம் நூற்றாண்டின் உயர் தொழில் நுட்பத்தினைப்பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள சேதன மணிபசளை என்பதால் குறைந்தளவு போதுமானது.

இதனைப்பாவிப்பதன் மூலம் தாவரத்தின் வேர் வளர்ச்சி அதிகரித்து அதிகநீர் போசணைகளை உறிஞ்சும் இதன் மூலம் சிறந்த வளர்ச்சி ஏற்படும்.

தாவரத்தின் வளர்ச்சி பூத்தல் காய்த்தல் காலங்களில் தேவைப்படும் மூலகங்கள் விற்றமின்கள் அமினோ அமிலங்கள் என்பன செறிந்து காணப்படுவதனால் அதிக விளைச்சல் உறுதி செய்யப்படுகின்றன. இயற்கையான உரம் என்பதனால் மண் மணிகளை வனமாக்கும் தன்மையும் கொண்டது.

சேதனப்பசளையுடன் இரசாயன பசளையை கலப்பதன் மூலம் உச்ச விளைவை பெறமுடியும்.

**நீங்கள் நாடவேண்டிய இடம்** **அமுதாஸ்**

**இல:05. யாழ் வீதி. இலுப்பையடி. வவுனியா. தொ.பே.024-2222481**





மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

## குமரகுரு

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

புடைவை அழகுப்பொருள் வாணிபம்



**இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை**
**உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்**
**பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்**
**சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்**
**சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்**

**குமரகுரு** புடைவை அழகுப்பொருள் வாணிபம்

**யாழ்சாலை, கிளிநொச்சி**

KUMARAKURU
*Textile & Fancy House*
Yarl Road, Kilinochchi.
(சி-10729)



## EXPOAIR

*your friend in the skies*

## எக்ஸ்போ எயார்

வான்வெளியில் உங்கள் நண்பன்



யாழ் - கொழும்பு
விமானப்பயணத்திற்கு அழையுங்கள்.

**யாழ்ப்பாணத்தில்:021-2223891/6297,0773348888/2349999,**
**கொழும்பில்:0112372952/953, வெள்ளவத்தையில்: 0112360290/291.**
**e-mail- jaffna@expoavi.com e-mail- reservations@expoavi.com**



இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

C-10120


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.